# மன்னா

MANNA மன்னார் மறைமாவட்டத்தின் தமிழ்க் கத்தோலிக்க மாதாந்தப் பத்திரிகை MANNA

பொழிவு - 08
குவிப்பு - 05
பக்கங்கள் - 16
விலை ரூபா 20.00
மே 2005

THE TAMIL CATHOLIC MONTHLY PUBLISHED BY THE DIOCESE OF MANNAR - Manna Office, Pastoral Centre, Cathedral St, Mannar, Sri Lanka. T.P: 023 - 2232377



### இரண்டரை இலட்சம் மக்கள் முன்னிலையில்

# மறைந்த திருத்தந்தையின் திருவுடல் நல்லடக்கம்

- மறைந்த திருத்தந்தைக்கு உலகம் அளித்த பிரியாவிடை!
- வத்திக்கான் வரலாற்றில் சிறப்பு மிக்க நிகழ்வு!
- உலகத் தலைவர்களை ஒன்றிணைத்த நிகழ்வு!
- 35 ஆயிரம் ஊடகத் தலைப்புக்களில் திருத்தந்தையின் செய்தி!
- 2 ஆயிரம் ஆண்டுகளில் உரோமாபுரி காணாத மக்கள் வெள்ளம்!

உலக கத்தோலிக்க மக்களின் ஆன்மீகத் தலைவரான திருத்தந்தை 2ம் அருள் சின்னப்பருக்கு வறியவர்கள் செல்வந்தர்கள் என்ற வேறுபாடின்றி பல இலட்சக்கணக்கான மக்கள் தமது இறுதி அஞ்சலியைச் செலுத்தினர். மன்னர்கள், மகாராணிகள், ஜனாதிபதிகள், பிரதமர்களென சர்வதேசத் தலைவர்கள் கடந்த 08.04.2005 அன்று வத்திக்கானுக்கு வருகைதந்து திருத்தந்தைக்கு பிரியாவிடை அளித்தனர். இந்த இறுதியஞ்சலி நிகழ்வு, வத்திக்கானின் வரலாற்றில் இடம்பெற்ற மரணங்களில் குறிப்பிடத்தக்க நிகழ்வாக இடம்பிடித்திருக்கிறது. *“தந்தையினுடைய இல்லத்தின் சாளரத்தில் நின்றவாறு எமது திருத்தந்தை எம்மைப் பார்த்து ஆசீர்வதிக்கிறார் என்பதை எம்மால் உறுதிப்படுத்திக்கொள்ள முடியும்”* என்று இறுதி வழிபாட்டுக்கு தலைமை தாங்கிய கர்தினால் ஜோசப் இரட்சிங்கர் (தற்போதைய புதிய திருத்தந்தை) தெரிவித்தார்.

(தொடர்ச்சி 2ம் பக்கம்)



மறைந்த திருத்தந்தை 2ம் அருள் சின்னப்பர்



புதிய திருத்தந்தை 16ம் ஆசீர்வாதப்பர்

## இலங்கையின் போரையும் அழிவுகளையும் நினைந்து தம் இதயத்தால் கண்ணீர் வடித்தவர்

### மன்னார் ஆயர் இரங்கல் செய்தி



இலங்கையிலே நிகழ்ந்து வந்த போரையும், அதன் அழிவுகளையும் நினைந்து தம் இதயத்தால் கண்ணீர் வடித்தவர் மறைந்த திருத்தந்தை 2ம் அருள் சின்னப்பர். எமது நாட்டின் சமாதானத்திற்காகப் பல தடவைகள் பகிரங்கமாக புனித இராயப்பர் சதுக்கத்தில் கூடியிருந்த மக்களோடு சேர்ந்து இறைவனை வேண்டி வந்தவர். மூன்றாவது நாட்டின் ஈடுபாட்டுடன், போரை நிறுத்தி, அரசியற் தீர்வைக்கண்டுகொள்ள முழு மூச்சாக உழைத்தவர் என மன்னார் ஆயர் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார். (இச்செய்தியின் முழு வடிவம் 2ம் பக்கத்தில், மனப்பொழிவுப் பகுதியில் தரப்பட்டுள்ளது)

## ஒடுக்கப்பட்ட மற்றும் ஏழை மக்களின் விடுதலைக்காக முன்னின்று உழைத்தவர்

### புலிகளின் தலைவர் பிரபாகரன்

மறைந்த திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பர் உலக ஆன்மீகத் தலைவர் என்ற ரீதியில் ஒடுக்கப்பட்ட மற்றும் ஏழை மக்களின் விடுதலைக்காக முன்னின்று உழைத்தவர் என திருத்தந்தையின் மறைவையொட்டி வத்திக்கான் பேராயத்திற்கு அனுப்பி வைத்துள்ள இரங்கல் செய்தியில் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் திரு. வே. பிரபாகரன் தெரிவித்துள்ளார். “தமிழீழ மக்கள் சார்பாக திருத்தந்தை 2ம் அருள் சின்னப்பரின் மறைவையொட்டிய எனது ஆழ்ந்த கவலையை வெளியிட விரும்புகிறேன்.

(தொடர்ச்சி 3ம் பக்கம்)



# மன்னா
## மனப்பொழிவு பதிப்பாசிரியர் பகர்வது

## திருத்தந்தை 2ம் அருள் சின்னப்பர்

சித்திரைத் திங்கள் 3ம் திகதி ஞாயிறு அதிகாலையில் இறைபதம் எய்தி 8ம் திகதி உரோமையில் திரு அடக்கம் செய்யப்பட்ட பரிசுத்த தந்தை இரண்டாம் அருளப்பர் சின்னப்பரின் பக்கமாக முழு உலகுமே தன் பார்வையைச் செலுத்தி நிற்கின்றது.

இவர் இந்த உலகத்தை ஓர் சமாதான குடும்பமாகப் பார்க்கத் தம்மை அர்ப்பணித்தவர். ஆயுதப் பெருக்கத்தையும், போரையும் மனிதன் நிரந்தரமாகக் கைவிட வேண்டுமென்பதை இலட்சியக் கனவாகக்கொண்டு செயற்பட்டவர். அரசியல் ரீதியில் ஒடுக்கப்பட்டவர்கள் அதிகாரப் பகிர்வின்வழி உரிமை வாழ்வு பெறவேண்டுமென்றும் ஏழை, செல்வந்த நாடுகளிடையே ஏற்றத்தாழ்வுகள் பகிர்தல் வழி சமப்படுத்தப்படல் வேண்டுமென்றும் வலியுறுத்தியவர். ஒரு தேசிய இனத்தின் அரசியல் அபிலாஷைகள் நசுக்கப்படுவது ஆபத்தானது என்று சுட்டிக்காட்டியவர்.

இலங்கையிலே நிகழ்ந்துவந்த போரையும், அதன் அழிவுகளையும் நினைந்து தம் இதயத்தால் கண்ணீர் வடித்தவர். எமது நாட்டின் சமாதானத்திற்காகப் பல தடவைகள் பகிரங்கமாக புனித இராயப்பர் சதுக்கத்தில் கூடியிருந்த மக்களோடு சேர்ந்து இறைவனை வேண்டி வந்தவர். மூன்றாவது ஒரு நாட்டின் ஈடுபாட்டுடன், போரை நிறுத்தி, அரசியற் தீர்வைக் கண்டுகொள்ள முழு மூச்சாக உழைத்தவர். திருச்சபையில் அவர் ஆற்றிய பணிகள், இவரைப் "பெரிய இரண்டாம் அருள் சின்னப்ப பாப்பரசர்" என்னும் நாமத்தைப் பெற்றுக்கொடுக்கக்கூடியதாய் அமைந்திருந்தன.

விசுவாசத்தைக் கற்பிப்பதிலும், திருச்சபையைப் புனிதப்படுத்துவதிலும், அதை ஆண்டு வழி நடத்துவதிலும் அவருடைய பணி கடைசி மூச்சுவரை அதிசயிக்கத்தக்கதாய் அமைந்திருந்தது. கத்தோலிக்கர் அல்லாத மற்ற கிறிஸ்தவர்களுடன் ஒற்றுமையையும், மற்றச் சமயங்களுடன் உரையாடலையும் தொடர்ந்து வளர்த்து வந்தமை எல்லோருடைய பாராட்டுக்களையும் பெற்றிருந்தது. திருமணத்தின் இயல்பு, சிசுக்கொலை போன்றவை சர்சைக்குட்படுத்தப்பட்டபோது, உலகத்தின் மனச்சாட்சியாக நின்று உண்மைக்குக் குரல் கொடுத்து வந்தமையை வரலாறு மறக்க முடியாது. பெண்களின் மனித சமத்துவம், மேன்மை, பெருமை பற்றி அவர் பேசும்போது, கிறிஸ்துவின் தாய் மரியாளோடு அவர்களை ஒப்பிட்டுக் கற்பித்திருப்பது பெண்ணியத்திற்குப் பெருமை சேர்ப்பதாய் அமைந்துள்ளது.

இற்றை மறுப்பைக் கொண்ட பொதுவுடைமைவாத நாடுகளுக்கு அகிம்சை அரசியல் வழியிலே விடிவைத் தேடிக்கொடுப்பதில் பரிசுத்த தந்தையின் பங்களிப்பு அளப்பரியதாய் அமைந்திருந்தது.

மொத்தத்தில், தெய்வீகத்திலும், மனிதத்திலும் உலகைக் கட்டியெழுப்ப, மறைந்த திருத்தந்தை ஆற்றிய திருப்பணி மறையாது என்றும் நீடித்து நிலைக்கும். இவர் வாழ்ந்த காலத்திலே வாழ்ந்த நாம் அனைவருமே கொடுத்து வைத்தவர்கள்.

இவ்வையகத்திலே வாழ்வாங்கு வாழ்ந்த எம் அரிய திருத்தந்தை, தெய்வத்துள் வைக்கப்படும் பேறு பெறுவாராக.

மன்னார் ஆயர், பேரருட்திரு
இரா. யோசேப்பு ஆண்டகை



# வாசகர் எண்ணங்கள்

### அனைத்து விடயங்களும் அருமையானவை!

மன்னா ஆசிரியர் அவர்களே,
இயேசுக் கிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள்!
மன்னாவின் அனைத்து விடயங்களும் அருமையானவை. மிகவும் பயனுள்ளவை. இறை அன்பில் நனைந்து உலகெங்கும் வாசனை தரும் நறுமணமாக மன்னா வளர வாழ வாழ்த்தி செபித்து நிற்கிறேன்.

### மாதத்தில் இருமுறை மலரமாட்டாயா?

அன்பின் மன்னாவே, என் ஆசை உயிர் நண்பியே! மாதத்தில் ஒரு முறை மலர்வதைவிட மாதத்தில் இரு முறை மலர மாட்டாயா என வழிமேல் விழிவைத்துக் காத்திருக்கும் பல்லாயிரக் கணக்கான நெஞ்சங்களில் நானும் ஒரு நெஞ்சமாக கலந்திருப்பது மகிழ்ச்சியாக இருக்கிறது. உன் வரவை மிகவும் ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டு இருக்கிறேன். உன் சேவை பார் எங்கும் தொடர எனது வாழ்த்துக்கள்!

### சூடான - சுவையான - தரமுள்ள செய்திகள்!

மாதத்தில் ஒருமுறை என் வீட்டில் மல்லிகைப் பூவாய் நீ மலர்வாய்! என் நெஞ்சம் கமள எத்தனை புதிய செய்திகளை, சூடான, சுவையான, தேவையான தரமுள்ள புதிய செய்திகளை நீ ஏந்தி வருவாய்! வாசம் கமகமக்க பல செய்திகளை உள்ளடக்கி அழகான மன்னாவே நீ இன்னும் தொடர்ந்து வர உயிர்த்த யேசுவை வேண்டுகின்றேன். உன் வாசகர்



மன்னா
MANNA
THE ONLY TAMIL CATHOLIC MONTHLY PUBLISHED BY THE DIOCESE OF MANNAR - Manna Office, Pastoral Centre, Cathedral St, Mannar, Sri Lanka.
ஏப்ரல் 2005
உலக மனசாட்சியின் குரல் ஓய்ந்து விட்டது!
திருத்தந்தை இறைவனடி சேர்ந்தார்!
இறுதிச் சடங்கில் 20 இலட்சம் மக்கள் கலந்துகொண்டனர்!
200 க்கும் அதிகமான உலகத் தலைவர்கள் பங்கேற்பு!
ஜேர்மன் கொலோன் நகரில்
20வது அனைத்துலக இளைஞர் மாநாடு
மன்னாவின் விலை அதிகரிக்கின்றது!
தொடர்ந்து ஆதரவு தாருங்கள்!
குருத்துவ திருநிலைப்படுத்தல்
திருச்சிலுவைக் கன்னியர்கள்
அன்னை திரேசா சபைத் தலைவி

## திருத்தந்தையின் வாழ்க்கைச் சுவடுகள்


குழந்தையாக


இளைஞனாக


குருவாக


திருத்தந்தையாக

## மறைந்த திருத்தந்தையின் திருவுடல் நல்லடக்கம் ..... 1ம் பக்கத் தொடர்ச்சி

இறுதி அஞ்சலியில் கலந்துகொள்வதற்காக புனித பீற்றர் சதுக்கத்தில் குழுமியிருந்த பல்லாயிரக்கணக்கானோர் மத்தியில் உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

'சன்ரோ சுபிற்றோ' (அவரை உடனடியாகப் புனிதராக்குங்கள்) என்று அங்கு கூடியிருந்தோர் இத்தாலிய மொழியில் உரத்துக் கோஷமிட்டனர். புனித பீற்றர் தேவாலயத்தின் மணியொலியுடன் மேலங்கி அணிந்த 12 பேர் பாப்பரசரின் புனிதவுடல் தாங்கிய பேழையை சுமந்து சென்றனர். பேழையுடன் மரபுச்சின்னமான சிலுவையும் எடுத்துச் செல்லப்பட்டது. அதில் 'எம்' என்ற எழுத்து பொறிக்கப்பட்டிருந்தது. தேவாலயத்திற்கு வெளியே இலத்தீனில் பாடகர் குழுவினர் கீதம் இசைத்தனர்.


புனிதவுடல் பேழை முதலில் தேவாலயப் படிக்கட்டில் வைக்கப்பட்டது. இங்குதான் 26 வருடங்களுக்கு முன் கரோல் வொஜ்ரிலா பாப்பரசராக முதன் முறையாக காட்சியளித்தார். 455 வருடங்களின்பின் முதன் முறையாக இத்தாலியரல்லாத பாப்பரசராகப் பதவியேற்று தனது திறமை, வசீகரத்தால் உலகை ஆசீர்வதித்த பாப்பரசருக்கு 4 மன்னர்கள், 5 மகாராணிகள் , சுமார் 70 ஜனாதிபதிகள், பிரதமர்கள் இறுதியஞ்சலி செலுத்தியுள்ளனர். இரும்புத் திரையின் (கம்யூனிசம்) வீழ்ச்சிக்கு உதவி புரிந்தவரும், மதங்கள் மத்தியில் ஐக்கியம் வேண்டுமென வலியுறுத்தியவரும் கத்தோலிக்கத் திருச்சபையின் பாரம்பரியத்தை பேணிப் பாதுகாப்பதில் விடாப்பிடியாக இருந்தவருமான பாப்பரசருக்காக விசேடமாக இடம்பெற்ற இறுதிப் பிரார்த்தனையில் இந்த உலகத்தலைவர்கள் பங்கேற்றனர்.

புனித பீற்றர் சதுக்கத்திலும் அதனை அண்டிய வீதிகளிலும் 'கொடிகள்' கடல்போல் காணப்பட்டன. பாப்பரசரின் சொந்த இடமான போலந்து நாட்டின் சிவப்பு - வெள்ளைக் கொடிகளே பெருந்தொகையாகக் காணப்பட்டன. 08.04.2005 அன்று மட்டும் 3 இலட்சம் பேர் புனித பீற்றர் சதுக்கத்துக்கு வந்ததாக பொலிஸ் மதிப்பீடு தெரிவிக்கிறது. "முழு உலகுமே வித்தியாசமாக இருக்கிறது, எம்மை வழிநடத்திச் செல்ல அவர் இல்[illegible] நாம் என்ன செய்யப்போகிறோம் என்று எமக்குத் தெரி[illegible]மல் உள்ளது" என போலந்தைச் சேர்ந்த 18 வயதுடைய பீ[illegible] என்ற பெண் கூறினார். இதனைக் கூறியபோது அவர் கன்னங்களில் கண்ணீர்த் துளிகள் உருண்டோடின. போலந்து தேவாலயங்களில் பெருந்தொகையான மக்கள் திரண்டு வந்து பிரார்த்னையிலீடுபட்டனர். வேறுபட்ட மத, இனங்களைச் சேர்ந்த 2500 பிரமுகர்கள் புனித பீற்றர் சதுக்கத்தில் இடம்பெற்ற இறுதிச் சடங்கில் கலந்துகொண்டனர். அமெரிக்க ஜனாதிபதி புஷ், ஐ.நா. செயலாளர் நாயகம் கொபி அனான், பிரிட்டிஷ் இளவரசர் சார்ள்ஸ் மற்றும் மத்திய கிழக்குத் தலைவர்கள் பலர் சமூகமளித்திருந்தனர்.

இறுதிக் கிரிகையின்போது இஸ்ரேல் ஜனாதிபதி மோசே கட்சவ், சிரிய ஜனாதிபதி பஷார் அல் அசாத்திற்கு அருகில் காணப்பட்டார். "இன்றைய தினம் எமக்கு நம்பிக்கையையும் எதிர்காலத்தில் சமாதானம் பற்றிய சிந்தனையையும் உருவாக்கக்கூடும். மோதல், வெறுப்பையல்ல" என்று ஈரானிய ஜனாதிபதி கட்டாமி பேட்டியொன்றில் கூறினார். பாதுகாப்புக்காக ரோமின் மத்திய பகுதியில் விமானங்கள் பறந்து செல்வதற்கு இத்தாலி தடைவிதித்திருந்தது. விமான எதிர்ப்பு ஏவுகணைகள் கேந்திர இடங்களில் பொருத்தப்பட்டிருந்தன.

ஆசியாவில் தொலைக்காட்சிகளில் மக்கள் பாப்பரசரின் இறுதிச் சடங்குகளைப் பார்த்தனர். இறுதி ஆராதனையின்பின் புனித உடல் தாங்கிய பேழை மீண்டும் புனித பீற்றர் தேவாலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டது. பின்னர் துத்த நாகம் பூசிய பேழைக்குள் புனித உடல் வைக்கப்பட்டு அதன் பின் ஓக் (OAK) மரப்பலகையில் செய்யப்பட்ட பேழைக்குள் வைக்கப்பட்டது. பாப்பரசராக பதவி வகித்த கால எண்ணிக்கைக்கேற்ப சில்லறை நாணயங்களும் அதற்குள் போடப்பட்டன.

## சிரிக்க சிந்திக்க...!



நன்றி வீரகேசரி

# கத்தோலிக்க திருச்சபையை வழிநடத்த

# புதிய திருத்தந்தை தெரிவுசெய்யப்பட்டார்!

## 16ம் ஆசீர்வாதப்பர் என்னும் பெயர் ஏற்பு

கடந்த ஏப்ரல் 19 ஆம் நாளானது உலக திருச்சபையின் வரலாற்றில் மறக்க முடியாத ஒரு நாளாகும். புனித இராயப்பரின் 264ஆவது வாரிசாக ஜேர்மன் நாட்டைச் சேர்ந்த கர்தினால் ஜோசப் ரட்சிங்கர் ஆண்டகை, *16ம் ஆசீர்வாதப்பர்* என்னும் பெயருடன் புதிய திருத்தந்தையாகத் தெரிவுசெய்யப்பட்டார்.



அன்று மாலை 5.50 மணிக்கு சிஸ்டன் தேவாலயத்தில் வெண்ணிறப் புகை வெளியேறியதைத் தொடர்ந்து மாலை 6.43 மணியளவில் புதிய திருத்தந்தையின் தேர்வு பற்றி அறிவிக்கப்பட்டது. புதிய பாப்பரசர் தெரிவு செய்யப்பட்ட நல்ல செய்தியை சிலி நாட்டைச் சேர்ந்த கர்தினால் ஜோர்ஜ் ஆர்து ரோ மெதினா எஸ்திவேல் பேராலயத்தின் பல்கனியிலிருந்து அறிவித்தார். கர்தினால் ஜோசப் ரட்சிங்கர் புதிய திருத்தந்தையாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னர் *16வது ஆசீர்வாதப்பர்* என்ற திருப்பெயரால் அவர் அழைக்கப்படுவார் என்று அவர் அறிவித்ததும் புனித பீட்டர் சதுக்கத்தில் குழுமியிருந்த ஒரு லட்சத்துக்கும் அதிகமான மக்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர்.

அதனைத் தொடர்ந்து மாலை 6.48 மணியளவில் புதிய திருத்தந்தை 16ஆம் ஆசீர்வாதப்பர் மக்களுக்கு தரிசனம் தந்து ஆசீர்வாதத்தை வழங்கினார். அவர் தமதுரையில், "அன்புமிக்க சகோதரர்களே!, சகோதரிகளே! 2ஆம் அருள் சின்னப்பர் எனும் மாபெரும் பாப்பரசருக்குப்பின் இறைவனின் திராட்சை தோட்டத்தில் ஏழ்மையாகவும் தாழ்மையாகவும் பணிபுரிய அடியேனை கர்தினால்கள் தேர்ந்தெடுத்துள்ளார்கள். தகுதியற்ற என்போன்ற ஊழியரையும் இறைவன் முறையாக வழிநடத்துவார் என்பதை நான் அறியும்போது ஆறுதல் அடைகின்றேன். அனைத்திற்கும் மேலாக உங்கள் செபங்களைக் கேட்டு நிற்கின்றேன். உயிர்த்த ஆண்டவரின் மகிழ்விலும் அவரின் நிரந்தர உதவியின் நம்பிக்கையிலும் எமது பயணத்தில் துணையுண்டு. அவரின் தாயார் பரிசுத்த மரியாள் எம் சார்பில் நிற்பாராக நன்றி" என்று புதிய திருத்தந்தை மக்களை வாழ்த்தினார்.

## சமாதானத்தை ஏற்படுத்த நடவடிக்கை எடுங்கள்

### பொதுநிலையினர் பேரவை


நீதியோடுகூடிய நிரந்தர சமாதானத்தை நாட்டில் ஏற்படுத்துவதற்கு சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினரும் உரிய நடவடிக்கைகளை உடனடியாக முன்னெடுக்க வேண்டும் என மன்னார் மறைமாவட்ட பொதுநிலையினர் பேரவை அழைப்பு விடுத்துள்ளது. 24.04.2005 அன்று மன்னார் பொதுநிலையினர் பணியகத்தில் நடைபெற்ற இப்பேரவையின் அங்குரார்ப்பணக் கூட்டத்தின் இறுதியில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்திற்கு அமையவே இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

## உயர்தர கிறிஸ்தவபாடம் வினாக்களும் விடைகளும்

அருட்சகோதரர் ஆர். ஜோசப் காந்தன் அவர்கள் எழுதிய உயர்தர கிறிஸ்தவ பாட கடந்தகால வினாக்களும் விடைகளும் மாதிரி வினாத்தாள்களும் (1998 - 2005) என்ற நூலை மன்னார் வளனகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

## மன்னார் வலயக் கல்விப் பணிப்பாளருக்கு

# சமாதானத் தூதுவர் விருது




மன்னார் வலயக் கல்விப்பணிப்பாளர் திரு. ஆபேல் றெவல் அவர்கள் *சமாதானத் தூதுவர்* (Ambassador for Peace)விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார். கடந்த ஆண்டு நவம்பர் மாதம் 27ம் திகதி *உலக சமாதானத்துக்கான சர்வதேச சர்வசமய அமைப்பினால்* கொழும்பில் வைத்து இந்த விருது வழங்கப்பட்டது. நன்னடத்தை, இனங்களுக்கிடையிலான பாகுபாடற்ற சமூக சேவை முன்மாதிரிகையான குடும்ப வாழ்வு, சமய நல்லிணக்கம், சர்வதேச அமைதி, பொறுப்பான தொடர்பாடல் போன்றவற்றை ஊக்குவித்தமைக்காக இச்சமாதான விருது வழங்கப்பட்டது. இவரோடு சேர்ந்து அமைச்சர் பௌசி, கொழும்பு மேயர் பிரசன்னா, இளைப்பாறிய நீதிபதி விக்னேஸ்வரன், சைவப் பெரியார் சிவானந்தன் போன்றவர்களுக்கும் இவ்விருது வழங்கப்பட்டது. சமாதான விருதை பெற்றுள்ள மன்னார் மண்ணின் மைந்தன் ஆபேல் றெவல் அவர்களுக்கு மன்னா வாசக அபிமானிகள் சார்பாக பாராட்டுக்களையும் நல்வாழ்த்துக்களையும் தெரிவித்து நிற்கின்றோம்.

## மன்னார் மறைமாவட்டத்தில்

# பொதுநிலையினர் பேரவை அங்குரார்ப்பணம்

### தலைவராக திரு. அந்தோனிமுத்து தெரிவானார்



திரு. அந்தோனி முத்து

மன்னார் மறைமாவட்டத்தில் பொதுநிலையினர் பேரவை என்ற அமைப்பு கடந்த 24.04.2005 அன்று ஏற்படுத்தப்பட்டது. பொதுநிலையினர் ஆணைக்குழு இயக்குனர் அருட்திரு ஏ. விக்ரர் சோசை அடிகளாரின் ஏற்பாட்டில் நடைபெற்ற முதல் அமர்வில் மன்னார் மறைமாவட்டத்தின் பல்வேறு அமைப்புக்களைச் சேர்ந்த 50ற்கும் அதிகமான பொதுநிலையினர் கலந்துகொண்டனர். குருமுதல்வர் சேவியர் குருஸ் அடிகளார் இந்த அங்குரார்ப்பண அமர்வுக்கு தலைமை தாங்கினார். விக்ரர் சோசை அடிகளார் பொதுநிலையினர் பேரவையின் நோக்கங்களையும் யாப்பு விதிகளையும் தெளிவாக எடுத்து விளக்கினார். கலந்துரையாடலைத் தொடர்ந்து பொதுநிலையினர் பேரவைக்கான செயற்குழுத் தெரிவு இடம்பெற்றது.

*பேரருட்திரு இராயப்பு ஜோசப், மன்னார் ஆயர் - காப்பாளர்*

*அருட்திரு. அ. சேவியர் குருஸ், குருமுதல்வர் - ஆன்மீக வழிகாட்டி*

1. தலைவர் : திரு. அ. அந்தோனிமுத்து (ஓய்வு பெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளர்.)
2. உபதலைவர்கள் :- திரு. எஸ். எவ். செசாரியஸ் (முகாமையாளர் தே. சே. வங்கி, மன்னார்.)
   திரு ஜீ. ஜேக்கப் (ஓய்வு பெற்ற கல்வி பணிப்பாளர், காத்தான்குளம்,வட்டக்கண்டல)
   திரு இ. ஜே. பி. விக்ரர் (அன்னை திரேசா வீதி, இறம்பைக்குளம், வவுனியா)
3. செயலாளர் :- திருமதி ரதி பீரிஸ் (றோ.க. வலயக் கல்வி பணிமனை மன்னார்)
4. துணைச் செயலாளர் :- திரு. ச. வில்பிறெட், முருங்கன், ஆத்திக்குழி.
5. பொருளாளர் :- பி. அல்போன்ஸ் (பெரியகடை, மன்னார்.)
6. செயற்குழு உறுப்பினர்கள்:-
   கௌரவ செல்வம் அடைக்கலநாதன் (பா. உ. வன்னி மாவட்டம்)
   திரு. எஸ். நீக்கிலாப்பிள்ளை (மேலதிக அரசாங்க அதிபர் மன்னார்)
   திரு. ம. ஆபேல் றெவல் (வலயக் கல்வி பணிப்பாளர், மன்னார்.)
   திரு. பி. மரியநாயகம் குரூஸ் (தலைவர் அரச சார்பற்ற நிறுவன இணையம்)
   திரு. அ. யோ. அன்ரன் (கூமாங்குளம், வவுனியா)
   திரு வி. யேசுதாசன் (252 முதலியார் குளம், செட்டிகுளம்)
   திருமதி. ஜெசி அரியரெட்ணம் ( எஸ்பினனேட் வீதி, மன்னார்)
   பி. றொக்சி புளோறிடா குரூஸ் (4ம் வட்டாரம், வங்காலை)
   திரு. ஜோய்ஸ் குரூஸ் (சட்டத்தரணி செட்டிகுளம்)
   திரு. எஸ். ஜெபநேசன் (கீழியன் குடியிருப்பு, தலைமன்னார்)
   திரு. ரீ. மரியதாசன் குரூஸ் (அரிப்பு)

ஆணைக்குழுக்களின் பிரதிநிதிகள், மன்னார் மறைமாவட்ட பங்கின் பிரதிநிதிகள், பக்திசபை பிரதிநிதிகள், திணைக்கள தலைவர்கள், துறைசார் நிபுணர்கள், அரசியற் பிரமுகர்கள் ஆகியோர் அடங்கிய உறுப்பினர்கள் இக்கூட்டத்திற் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

## புதிய திருத்தந்தை - ஓர் பார்வை

உலகம் முழுவதிலுமுள்ள 110 கோடி கத்தோலிக்க கிறிஸ்தவர்களின் புதிய திருத்தந்தையாக ஜெர்மனியைச் சேர்ந்த கர்தினால் ஜோசப் ரட்சிங்கர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். 78 வயதான புதிய திருத்தந்தை 16வது பெனடிக்ற் (ஆசீர்வாதப்பர்) என்னும் திருப்பெயரை ஏற்றுக்கொண்டார். மறைந்த பாப்பரசர் இரண்டாம் அருளப்பர் சின்னப்பருக்கு வலது கரமாக இருந்து செயற்பட்டவர் ஜோசப் ரட்சிங்கர். இரண்டாவது அருளப்பர் சின்னப்பர் மறைந்ததும் வத்திக்கானை நிர்வகிக்கும் கர்தினால் குழுவுக்குத் தலைமை தாங்கியவர் இவரே. மறைந்த பாப்பரசரின் இறுதிச் சடங்குகள் அனைத்தையும் முன்னின்று நடத்தியவரும் இவர்தான்.

சுமார் 1000 ஆண்டுகளின் பின்னர் ஜெர்மனியைச் சேர்ந்த ஒருவர் பாப்பரசராகத் தேர்வு செய்யப்பட்டுள்ளார். ஜெர்மனியைச் சேர்ந்த மூன்று கர்தினால்கள் பாப்பரசராக முன்பு பதவி வகித்திருக்கிறார்கள்.

1945ம் ஆண்டு ஜுன் மாதம் போர்க் கைதியாக இருந்தபோது, சகோதரனுடன் விடுதலை செய்யப்பட்ட ரட்சிங்கர் கத்தோலிக்க திருச்சபையில் சேர்ந்தார். 1951 ஜுன் 29ம் திகதி அவர் திருநிலைப்படுத்தப்பட்டார். 1959 முதல் 1963 வரை பான் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராகப் பதவி வகித்தார். புனித அகஸ்தினார், புனித பொனவென்சர் ஆகியோரின் வாழ்க்கைப்பற்றி இவர் ஆய்வுசெய்துள்ளார். 1972ம் ஆண்டு இவர் நிறுவிய 'கம்யூனியோ' என்னும் இதழ் இன்று 17 மொழிகளில் வெளியாகி கத்தோலிக்க மக்களின் எண்ணங்களைப் பிரதிபலித்து வருகிறது.

1977ம் ஆண்டு மூனிச் பேராயராக இவர் நியமிக்கப்பட்டார். ஜுன் மாதம் அவரை கர்தினாலாக அன்றைய திருத்தந்தை ஆறாம் சின்னப்பர் நியமித்தார்.

1981ம் ஆண்டு திருத்தந்தை 2ம் அருளப்பர் சின்னப்பர் இவரை வத்திக்கான் நிர்வாகியாக நியமித்தார். 1998ல் கர்தினால் குழுவின் துணைத் தலைவராகவும், 2002ம் ஆண்டு கர்தினால் குழுவின் தலைவராகவும் இவர் நியமனம் பெற்றார்.

இவரையும் இரண்டாம் அருளப்பர் சின்னப்பரையும் *அறிவுஜீவி இரட்டையர்* என அனைவரும் அழைத்து வந்தனர். இரண்டாம் அருளப்பர் சின்னப்பரின் கொள்கைகளுடன் ஒத்துப்போன இவர் எதிர்காலத்தில் அவரைப்போன்றே செயற்படுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இரண்டாம் அருளப்பர் சின்னப்பருடன் மிக நெருக்கமாக இருந்த இவர் தம் பணி வாழ்வில் இறைமக்களுக்கு என்ன செய்யப்போகிறார் என்பதை அறிய முழு உலகமே ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருக்கிறது. இலத்தீன் அமெரிக்கா, ஆபிரிக்கா, தென் கிழக்காசியா ஆகிய நாடுகளில் கத்தோலிக்க கிறிஸ்தவர்களின் தொகை அதிகரித்து வருகிறது. ஐரோப்பாவில் கத்தோலிக்கக் கிறிஸ்தவர்களின் தொகை வீழ்ச்சியடைந்து வருகிறது.

16வது ஆசீர்வாதப்பரின் பார்வை ஐரோப்பாவின்மீது அதிகமாகவே இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. புதிதாகப் பதவியேற்றுள்ள பரிசுத்த பாப்பரசர் 16வது ஆசீர்வாதப்பரின் கருத்துக்கள் அடுத்த நூற்றாண்டுவரை எதிரொலிக்கும் என்பதில் ஐயமில்லை.

## பொது நிலையினர்

# விழிப்புடன் செயற்பட வேண்டும்

### பொதுநிலையினர் பேரவையில் குருமுதல்வர்

2 ம் வத்திக்கான் சங்கத்தின்பின் பொதுநிலையினரின் பொற்காலம் உதயமாகியிருந்தும் ஏறக்குறைய 30 வருடங்களுக்கு மேலாகியும் ,இன்னும் பொதுநிலையினருக்கான உரிமைகள், கடமைகள் புரிந்துகொள்ளப்பட்டு நடைமுறைப்படுத்தப்படாமை துர்ப்பாக்கியமான நிலை என மன்னார் மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்பணியாளர் சேவியர் குரூஸ் அடிகளார் தெரிவித்தார். கடந்த மாதம் 24ந் திகதி மன்னாரில் இடம்பெற்ற பொதுநிலையினர் பேரவை அங்குரார்பணக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். எஸ். ஜே. இம்மனுவேல் அடிகளார் போன்றோர் பொதுநிலையினருக்கான உரிமைகள், கடமைகள் பற்றிய புத்துணர்வை அளித்து வந்தனர் எனச் சுட்டிக்காட்டிய அவர் இனியும் காலம் தாழ்த்தாது பொதுநிலையினர் தம் பொறுப்புக்களைப் புரிந்துகொண்டவர்களாக நம் மத்தியில் விழிப்புணர்வுடன் செயற்பட வேண்டுமெனக் கூறினார். பிறசமயங்கள், இனங்கள் மட்டில் புரிந்துணர்வுடன் செயற்படக்கூடிய முறையில் மன்னார் மறைமாவட்ட பொதுநிலையினர் பேரவை இயங்குவதுடன், வன்முறையற்றதொரு நல்ல சமூகத்தை உருவாக்குவதிலும், பங்குகள் மட்டத்தில் தோழமைக் குழுக்களை உருவாக்கி அன்பிய வாழ்வை வாழ வழிகாட்டுவதிலும் முன்னின்று செயற்பட வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார்.

## ஒடுக்கப்பட்ட மற்றும் ஏழை மக்களின்..... 1ம் பக்கத் தொடர்ச்சி

உலக சமாதானத்திற்காகவும் நாடுகளிடையேயும் இனங்களுக்கிடையேயும் பரஸ்பர ஒன்றிப்பும் இணக்கப்பாடும் நிலவவேண்டுமென்பதற்காகவும் திருத்தந்தை ஆற்றிய பங்களிப்பு அளவிடமுடியாதது. உலக ஆன்மீகத் தலைவர் என்ற ரீதியில் ஒடுக்கப்பட்ட மற்றும் ஏழை மக்களின் விடுதலைக்காக உழைத்தவர். சகோதர அன்பையும் இரக்கத்தையும் அவர் தனது வாழ்வுச் செய்தியாக விட்டுச்சென்றுள்ளார். மனுக்குலத்தின் விடுதலைக்காக தனது முழு வாழ்வையும் அர்ப்பணித்த இந்த தெய்வீக மனிதரின் மறைவு உலகத்திற்கு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பு ஆகும். சமத்துவம், விடுதலை, உரிமைகள் ஆகிய மேலான மதிப்பீடுகளில் நம்பிக்கை கொண்டவர்கள் திருத்தந்தையின் மேன்மையான வாழ்வையும் பணியையும் போதனைகளையும் என்றும் நினைவில் கொண்டிருப்பர் என திரு. பிரபாகரன் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## நிறவெறிக்கு எதிராகப் போராடியவர் தமிழர் உரிமைக்காகப் பிரார்த்தனை

# தென்னாபிரிக்க பேராயர் டெஸ்மண்ட் டுட்டுவுடன் தமிழ்ச்செல்வன் குழு சந்திப்பு

இலங்கையில் உரிமைகள் மறுக்கப்படும் தமிழினத்திற்கு அந்த உரிமைகள் கிடைக்கவும் இனப்பிரச்சினைக்கு விரைவில் சமாதானத் தீர்வொன்று கிடைக்கவும் தான் பிரார்த்திப்பதாக தென்னாபிரிக்க பேராயர் டெஸ்மன்ட் டுட்டு விடுதலைப் புலிகளிடம் தெரிவித்துள்ளார்.

ஐரோப்பிய சுற்றுப்பயணத்தின் பின்னர், புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு. ப. தமிழ்ச்செல்வன் தலைமையிலான புலிகளின் உயர்மட்ட அரசியல் குழு தென்னாபிரிக்கா சென்று அங்கு முக்கிய தலைவர்களைச் சந்தித்தது.

இந்தச் சந்திப்பின் ஒரு கட்டமாக புலிகள் கேப் ரவுணில் பேராயர் டெஸ்மண்ட் டுட்டுவைச் சந்தித்தனர். இதன்போதே, ஈழத்தமிழர்கள் யுத்தத்தாலும் தற்போதைய கடல்கோள் அனர்த்தத்தாலும் துன்பப்படும் மக்களுக்காகத் தான் பிரார்த்திப்பதாகத் தெரிவித்த பேராயர், உரிமைகள் மறுக்கப்பட்டு மிக நீண்ட காலமாகப் போராடிவரும் தமிழ் மக்கள் தங்கள் உரிமைகளைப் பெறவும் இனப்பிரச்சினைக்கு விரைவில் சமாதானத் தீர்வொன்றைக் காணவும் தான் பிரார்த்திப்பதாகவும் தெரிவித்தார்.

தென் ஆபிரிக்காவின் அனுபவத்தின்படி இலங்கையில் மூன்று வருடங்களாக விடுதலைப்புலிகள் போர் நிறுத்தத்தை கடைப்பிடிப்பதன் மூலம், மக்களின் நலன்களில் அவர்கள் மிகுந்த கவனம் செலுத்துவதை வரவேற்ற பேராயர், விரைவில் இரு தரப்பும் அரசியல் தீர்வொன்றைக் காண வேண்டுமெனவும் வலியுறுத்தினார்.

இவ்வேளையில், இலங்கையின் தமிழ்ப் பகுதிகளுக்கு வருகை தரவேண்டுமென தமிழ்ச்செல்வன் விடுத்த வேண்டுகோளை ஏற்ற பேராயர், காலமும் தனது உடல் நலனும் சாதகமாயிருக்கும் பட்சத்தில், நிச்சயம் தமிழ்ப்பகுதிகளுக்கு வருவதாக உறுதியளித்தார்.



இதன்போது தமிழ் மக்கள் சார்பிலும் தங்கள் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் சார்பிலும் பேராயருக்கு தமிழ்ச்செல்வன் வாழ்த்துக்களைத் தெரிவித்தார்.

## 'ஞானோதயம்' நடாத்திய நற்கருணை ஆய்வரங்கம்

அமலமரித்தியாகிகளின் ஆன்மீகக் கல்வி மையமாகிய ஞானோதயத்தினால் சித்திரை 9ம் 10ம் திகதிகளில் காலை 9 தொடக்கம் மாலை 4 வரை நற்கருணை பற்றிய ஆய்வரங்கம் மன்னார் புனித செபஸ்தியார் பேராலய மண்டபத்தில் நடைபெற்றது. அருட்பணி ஜெராட் றொசாய்றோ அ.ம.தி, அருட்பணி இ. ரவிச்சந்திரன், அருட்பணி ஸ்ரனி அன்ரனி அ.ம.தி ஆகியோர் உரைகளை வழங்கினர்.

குறிப்பாக நற்கருணையின் பல்வேறு முகங்களை ஆய்வுசெய்து, அதனை எப்படி வாழ்வாக்கலாம் என்பதைப்பற்றி ஆய்வு செய்யும் களமாக இது அமைந்திருந்தது. அருட்பணி றொசாய்றோ அ.ம.தி, பலி வாழ்வின் அவசியம் குறித்து விவிலிய ஆதாரங்களுடன் தனது கருத்துக்களைப் பகிர்ந்துகொண்டார். அருட்பணி இ. ரவிச்சந்திரன், நற்கருணை எமது சமூகத்தில் எப்படி விருந்தாகலாம் என்பதை வாழ்க்கை அனுபவங்களினூடாக அழகாக வெளிப்படுத்தினார். அருட் பணி. ஸ்ரனி அன்ரனி அ.ம.தி மறைந்த திருத்தந்தையின் நற்கருணை பற்றிய இறுதிச் சுற்றுமடலான 'எங்களோடு தங்கும் ஆண்டவரே' என்பதைப் பற்றியும் தமிழர் போராட்டமும் நற்கருணையும் என்ற தலைப்பிலும் கருத்துக்களை பகிர்ந்துகொண்டார். ஆய்வரங்கத்தில் 100க்கு மேற்பட்ட பொதுநிலையினரும் துறவிகளும் கலந்துகொண்டு பயன்பெற்றனர். இவ் ஆய்வரங்கத்தை ஞானோதய பயிற்சி இணைப்பாளர் அருட் கலாநிதி ஸ்ரனி அன்ரனி அ.ம.தி நெறிப்படுத்தியிருந்தார்.


*அசுந்தா சோசை, வங்காலை,*

## மன்னார் மாவட்டத்தில் 3ம் திரிசாரணர்களின்

# பயிற்சிப் பாசறை

மன்னார் மாவட்டத்தில் 3ம் திரிசாரணர்களினால் மன்னார் மாவட்ட அனைத்துப் பாடசாலை சாரணர்களுக்குமான பயிற்சிப் பாசறை மன்னார் மடுக்கரை எனும் பிரதேசத்தில் 08.04.2005 தொடக்கம் 12.04.2005ம் திகதி வரை நடத்தப்பட்டது. இதில் 200க்கு மேற்பட்ட பாடசாலைச் சாரணர்களும், 3ம் திரிசாரணர்கள் 20 பேரும், 15 சாரண ஆசிரியர்களும் கலந்துகொண்டனர். இப்பயிற்சிப் பாசறையானது சாரணர்களுக்கு பயிற்சி கொடுக்கும் முகமாகவும், மடுக்கரை மக்கள் மத்தியில் விழிப்பூட்டும் முகமாகவும் மடுக்கரை கிராமத்தில் நடத்தப்பட்டது. இதில் மன்னார் மாவட்ட சாரண ஆணையாளர் ஜெ.ஜி.எல்.பிகிறாடோ, திரிசாரணர் உதவி ஆணையாளர் சி. எம். ஏ. ஜெயதாஸ், மாவட்ட ஆணையாளர் பயிற்சி கே. எவ். ராஜேந்திரன், 3ம் திரிசாரண ஆசிரியர் ஏ.சி.எம். இயூஜின், கல்வித் திணைக்கள உத்தியோகத்தர் லியோன் றெவல், மடுக்கரை (ZOA) உத்தியோகத்தர்கள், மன்னார் மாவட்ட சாரண சங்க செயலாளர் அருட்சகோதரர் எஸ். விஜயதாசன், மற்றும் மடுக்கரை மக்களும், பாடசாலை ஆசிரியர்களும், மற்றும் 3ம் திரிசாரண ஆலோசகர்களான திரு. ஞானராஜ், திரு. உதயச்சந்திரன், ஆகியோரும் கலந்துகொண்டனர். தனிப்பட்ட நிறுவனங்களும் சங்கங்களும், வங்கிகளும், அருட்தந்தையர்களும் மற்றும் மக்களும் இந்தப் பாசறையை நடத்த உதவி செய்தனர். இவர்களது உதவி இருந்ததாலேயே இப்பாசறை வெற்றிகரமாக நடாத்தப்பட்டது. இப்பாசறை முடிவில் சான்றிதழ்களும், பரிசில்களும், வழங்கப்பட்டன. 12.04.2005ம் திகதி காலை 12.00 மணியளவில் பாசறை நிறைவுற்றது





## திருமறைக் கலாமன்றத்தினரின் மாத்தறை நோக்கிய

# கலைப்பயணம்



சுனாமி கடல் கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு திருமறைக்கலாமன்றத்தின் அனைத்து மாவட்ட மன்றங்களும் சென்று கலை வழியில் தமது ஆற்றுப்படுத்தும் செயற்திட்டமொன்றை செயற்படுத்தி வருகின்றது. இந்த வகையில் திருமறைக்கலாமன்றத்தின் இயக்குனர். நீ. மரிய சேவியர் அடிகளாரின் வழிகாட்டலில் இணைப்பாளர் திரு. I. C. A.ஜோண் பொஸ்கோ அவர்களின் பணிப்புரையின்படி செயலாளர் செல்வன் A.T. லுஸ்ரின் (மோகன்ராஜ்) தலைமையில் உதவி இணைப்பாளர் திரு. S.E. கீதபொன்கலன் மற்றும் பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் உள்ளிட்ட 53 உறுப்பினர்களைக் கொண்ட மன்னார் திருமறைக் கலாமன்றத்தின் கலைக்குழு கலைவழி பணி செய்ய 18.02.2005 அன்று காலை 8.30 மணியளவில் மன்னாரிலிருந்து புறப்பட்டது. இணைப்பாளர் பொஸ்கோ அவர்கள் விபத்தில் சிக்கி தற்போது ஓரளவு தேறிவரும் நிலையிலும் அதிகாலையிலேயே அலுவலகம் சென்று தமது கலைக் குழுவினரை மிகவும் மகிழ்ச்சியோடு வழியனுப்பிவைத்தார். மாத்தறை சென்ற மன்னார் திருமறைக் கலாமன்றத்தின் கலைக்குழுவினர் தாம் சேகரித்து வந்த அத்தியாவசிய பொருட்களை மடிஹ வீரதுங்கா ராமய பன்சாலையில் அமைந்துள்ள நலன்புரி நிலையத்தில் வண. தேவாலேகம சுமணரத்தன தேரோவிடம் கையளித்தனர். அத்தோடு சிறிதளவு பண உதவியினையும் செய்த மன்னார் குழுவினர் சுனாமியால் பாதிக்கப்பட்ட மாத்தறை திருமறைக் கலாமன்றத்தின் உறுப்பினரான திருமதி தனுஜா குடும்பத்தினருக்கு அவர்களது பிள்ளைகளின் கல்விக்காக ரூபா 5000/= பண உதவியினையும் வழங்கினர். மேலும் இக்குழுவினர் மாத்தறையில் இரண்டு நாட்கள் தங்கி இருந்து வேரேஹெறன பன்சாலை பெரிய சாது வண. கேகல்லே ரத்தன சாரே அவர்களின் முன்னிலையில் மேற்படி பண உதவிகளை வழங்கி விட்டு லேக்கவுஸ் நலன்புரி நிலையம், சோலேஸ் நலன்புரி நிலையம், மாத்தறை மத்திய மகாவித்தியாலய முகாம், மடிஹ பன்சாலை நலன்புரி நிலையம் ஆகிய முகாம்களிற்கும் சென்று அங்கு உள்ள சிங்கள மொழிச் சகோதர சகோதரிகளுடன் உரையாடி பின்னர் அவர்களது மனச் சுமைகளைப் போக்க ஆடல், பாடல் போன்ற கலை நிகழ்வுகளை நடத்தினர். மன்னார் கலைக்குழுவில் அங்கம் வகித்த தாழ்வுபாடு இளைஞர் அமைப்பு திறிலர்ஸ் நடனக்குழு மிகப் பிரமாதமாக நடனமாடி மகிழ்வூட்டியது. மேலும் மாத்தறை கலைப்பயணத்தின் போது மன்னார் திருமறைக்கலாமன்றத்தினருடன், மாத்தறை, காலி ஆகிய மன்றக்குழுவினரும் இணைந்துகொண்டது குறிப்பிடத்தக்கது.

## வாழ்வுதயத்தின் செயற்திட்டங்கள்



அண்மையில் வாழ்வுதயத்தின் நடமாடும் செயற்கைகால் பொருத்தும் பணி பதுளை மாவட்டத்தில் நடைபெற்றபோது வாழ்வுதயப் பணியாளர்களினால் செயற்கை கால் தயாரித்து வழங்கப்பட்டபோது எடுக்கப்பட்ட படம்



விடத்தல்தீவுப் பங்கில் உள்ள கத்தாளம்பிட்டியில் யு.என்.டி.பி. நிறுவனத்தின் நிதி உதவியுடன் வாழ்வுதயத்தினால் அமைக்கப்பட்ட மீனவர் கழக ஒன்றுகூடல் மண்டபக் கட்டிடத்தின் தோற்றம் இது.

## திருத்தந்தையைப் படுகொலை செய்ய முயற்சித்த முகமட் அலி அகா

# சிறையிலிருந்து பாப்பரசருக்காகப் பிரார்த்தனை

பரிசுத்த பாப்பரசர் இரண்டாம் அருளப்பர் சின்னப்பரை 1981ல் சுட்டுக் கொலைசெய்ய முயன்ற துருக்கிய தீவிரவாதி முகமட் அலி அகா மரணத்தறுவாயில் இருந்த பாப்பரசருக்காக இஸ்தான்புலில் உள்ள சிறையிலிருந்து பிரார்த்தனை செய்ததாகத் தெரிவிக்கப்பட்டது. குறிப்பிட்ட துருக்கிய தீவிரவாதியின் வழக்கறிஞர் இதனைத் தெரிவித்துள்ளார். மொஹமெட் அலி அகா பாப்பரசரின் உடல் நிலை குறித்து மிகுந்த கவலையடைந்திருப்பதாகவும் அவரது சிந்தனை அனைத்தும் பாப்பரசர் குறித்தே இருப்பதுடன் அவருக்காகப் பிரார்த்தனை செய்வதாகவும் சட்டத்தரணி முஸ்தபா டெமிர்பக் தெரிவித்துள்ளார்.




அகா (47) பாப்பரசரின் உடல்நிலை குறித்து வரும் தகவல்களால் வேதனையடைந்திருப்பதாகவும் அவர் மிக வேகமாகக் குணமடைய வேண்டும் என பிரார்த்தித்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. 1981ல் சென். பீட்டர்ஸ் சதுக்கத்தில் பாப்பரசர் வாகனத்தில் மக்களை நோக்கி வந்து கொண்டிருந்தவேளை அகா பாப்பரசர்மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தது குறிப்பிடத்தக்கது. இதன்போது பாப்பரசர் வயிற்றில் கடும் காயங்களுக்குள்ளானார். அகாவின் இந்தத் தாக்குதலுக்கான காரணம் இதுவரை வெளியாகவில்லை. இதனைத் தொடர்ந்து 19 வருடம் இத்தாலிய சிறையில் தண்டனையை அனுபவித்த அகா 2000ம் ஆண்டில் துருக்கிக்கு நாடு கடத்தப்பட்டார். அகா துருக்கிக்கு கொண்டுவரப்பட்டதும் பாப்பரசர் அவருக்கு மன்னிப்பு அளித்ததைத் தொடர்ந்து அவரது தண்டனைக் காலம் 10 வருடங்களுக்கு குறைக்கப்பட்டது.

### கால்நூற்றாண்டு வரலாறு விடை பெற்றது!

## வத்திக்கானில் உலகை சங்கமிக்க வைத்த

# திருத்தந்தையின் இறுதி யாத்திரை!

காத்திருப்பதற்கான பொறுமையற்ற தலைமுறை என அவர்களைச் சொல்வதுண்டு. எனினும், திருத்தந்தைக்குத் தமது இறுதி மரியாதையைச் செலுத்துவதற்காக அவர்கள் காத்திருந்தார்கள். 18,20 மணித்தியாலங்களாக அவர்கள் காத்திருந்தார்கள். பாடினார்கள், கதைகள் சொன்னார்கள், பிரார்த்தனை செய்தார்கள், நினைவுகளைப் பகிர்ந்துகொண்டார்கள். உலகின் பல மொழிகளில் இதனை செய்தார்கள். பலர் பல மைல் தொலைவிலிருந்து வெறும் முதுகுப் பைகளுடன் வந்திருந்தார்கள். திருத்தந்தை இரண்டாவது அருளப்பர் சின்னப்பர் காலமாகிவிட்டார் என்ற செய்தி வெளியாகி ஓரிரு தினங்களில் ரோமின் சனத்தொகை இரண்டு மூன்று மடங்காக அதிகரித்துவிட்டது. போலந்தில் மாத்திரம் 2 மில்லியனுக்கும் மேற்பட்டவர்கள் வந்துள்ளனர். ரோமின் விடுதிகளில் கடுமையான இடநெருக்கடி. இதன் காரணமாக பலர் வீதிகளில் படுத்துறங்க வேண்டிய நிலையேற்பட்டது. இதனைத் தொடர்ந்து ரோம் நகரவாசிகள் தங்களது வீடுகளைத் துறந்து வீதிகளிலே படுத்துறங்குபவர்களுக்கு இடமளிக்க வேண்டுமென்ற வேண்டுகோள் விடுக்கப்பட்டது. அரசாங்கம் உதைப்பந்தாட்ட மைதானங்களில் அவசர அவசரமாகத் தங்குமிடங்களை உருவாக்கியது. நகரின் பல பகுதிகளில் தற்காலிகக் கூடாரங்கள் முளைத்தன. போத்தலில் அடைக்கப்பட்ட குடிநீரும், தலையணைகளும் விநியோகிக்கப்பட்டன. உலகின் பல நாடுகளிலிருந்து இவர்கள் வெறுங்கையுடன் வந்திருந்தாலும்கூட தமது கையடக்கத் தொலைபேசிகளை எடுத்துவரத் தவறாததால் இத்தாலிய அதிகாரிகள் தாங்கள் மேற்கொண்டுள்ள ஏற்பாடுகள் குறித்த எஸ்.எம்.எஸ். களை அனுப்பிக்கொண்டிருந்தார்கள்.



திருத்தந்தை 2ம் அருள் சின்னப்பருக்கு அஞ்சலி செலுத்துவதற்காக புனித பேதுரு சதுக்கத்தில் கூடிய பல்லாயிரக்கணக்கான மக்கள்!

இரவானபோது, சென். பீற்றர்ஸ் பசிலிக்கா ஒளி வெள்ளத்தில் மிதந்தது. அவர்கள் தொடர்ந்தும் வந்துகொண்டிருந்தார்கள். அவர்கள் உடல் தளர்ந்த நிலையில் ஜன்னலில் தோன்றும் பாப்பரசரைக் காணவில்லை. மாறாக, அமைதியும் அருளும் கலந்த முகத்துடன் உறங்கும் திருத்தந்தையைக் கண்டார்கள். ஒவ்வொரு மணித்தியாலமும் 18,000 இற்கும் மேற்பட்டவர்கள் பாப்பரசருக்கு தமது இறுதி மரியாதையைச் செலுத்திவிட்டுச் சென்றார்கள். தமது செல்போன்களைப் பயன்படுத்தி உறங்கும் பாப்பரசரின் உருவத்தை பத்திரப்படுத்திக் கொண்டார்கள். வெள்ளிக்கிழமையளவில் உலகின் அநேக தலைவர்கள் உரோமிற்கு வந்து சேர்ந்துவிட்டனர்.

சென். பீற்றர்ஸ் பசிலிக்காவிலிருந்து பரிசுத்த பாப்பரசரின் உடலைத் தாங்கிய பேழை (சிலுவையும், எம்மும் பொறிக்கப்பட்டது.) எடுத்து வரப்பட்டு செங்கம்பளத்தில் வைக்கப்பட்டபோது பாரிய கை தட்டல் எழுந்தது (ரோம் வழமை). ஆராதனைகளுக்குப் பின்னர் மணியொலியின் மத்தியில் வெள்ளைக் கையுறையணிந்த பன்னிருவர் இறுதித் தடவையாக மக்களுக்கு பாப்பரசரின் உடல் அடங்கிய பேழையைக் காண்பித்த பின்னர் சென். பீற்றர்ஸ் பசிலிக்காவிற்கு கொண்டு சென்றனர்.

இவ்வேளையும் சென். பீற்றர்ஸ் சதுக்கத்தில் திரண்டிருந்தவர்கள் மத்தியிலிருந்து கரகோஷம் எழுந்தது. பரிசுத்த பாப்பரசருக்கு உடனடியாக புனிதர் பட்டத்தை வழங்குமாறு வேண்டுகோள்களும் எழுந்தன. சென்.பீற்றர்ஸ் பசிலிக்காவிலுள்ள செயற்கை குகையொன்றினுள் இலங்கை நேரம் மாலை 5.50 அளவில் பாப்பரசரின் உடலடங்கிய பேழை இறக்கப்பட்டது. சுவீடனின் மகாராணி கிறிஸ்டினாவினதும் சைப்பிரஸ் மகாராணி கர்லோட்டாவினதும் கல்லறைகளுக்கு நடுவில் பாப்பரசரின் உடல் வைக்கப்பட்டது. பாப்பரசரின் உடல் அடங்கிய பேழை சிவப்பு நாடாவினாலும், வத்திக்கானினதும் பாப்பரசரினதும் முத்திரைகளாலும் இறுக்கமாக மூடப்பட்டிருந்ததுடன் மூன்று பெட்டிகளால் மூடப்பட்டிருந்தது. முக்கிய பேழையின் வெளியே பாப்பரசரின் பெயரும் சின்னங்களும் பொறிக்கப்பட்டிருந்தன. சென். பீற்றர்ஸ் சதுக்கத்திலிருந்து டைபெர் ஆறு வரையான பகுதியில் 300,000 இற்கும் மேற்பட்ட மக்கள் திரண்டிருந்த அதேவேளை, உரோமின் பல பகுதிகளில் வைக்கப்பட்டிருந்த பாரிய வீடியோ ஸ்கிரீன்கள் மூலம் வேறு பல மில்லியன் கணக்கானவர்கள் பார்த்துக்கொண்டிருந்தனர்.

நாங்கள் எங்களது தந்தையை இறுதித் தடவையாக வழியனுப்ப வந்திருக்கிறோம் என போலந்திலிருந்து தனது சகோதரருடன் வந்திருந்த 24 வயது யுவதி தெரிவித்தார். முப்பது மணித்தியாலங்கள் பயணம் செய்து ரோமை வந்தடைந்ததாக அவர் தெரிவித்தார். நான் இங்கு வந்திருப்பதற்கு வரலாற்றின் முக்கிய ஒருதருணத்தில் தான் வாழ விரும்புவதே காரணமென பிரான்ஸ் இளைஞர் ஒருவர் குறிப்பிட்டார்.



வத்திக்கான் புனித பீற்றர் தேவாலய நிலவறையிலுள்ள பாப்பரசர் இரண்டாம் அருளப்பர் சின்னப்பரின் கல்லறையில் கர்தினால்கள் அஞ்சலி செலுத்துவதை இங்கு காணலாம்.

போலந்தில் 80,000 இற்கும் மேற்பட்டவர்கள் தொலைக்காட்சியில் திருத்தந்தையின் இறுதி நிகழ்வைப் பார்த்துள்ளனர். இறுதி நிகழ்வுகள் ஆரம்பமாவதற்கு முன்னர் போலந்து தலைநகரில் சைரன்ஸ்கள் ஒலித்துள்ளன.

பாப்பரசர் தனது தாய் மண்ணில் முதலாவது ஆராதனையை நடத்திய பில்சுல் ட்ஸ்கி சதுக்கத்தில் 25,000 இற்கும் மேற்பட்டவர்கள் திரண்டிருந்தனர். உலகின் பல பகுதிகளிலும் இதே நிலை காணப்பட்டது.

சென். பீற்றர்ஸ் பசிலிக்காவிற்குள் நுழைந்த உலகத் தலைவர்களை அமெரிக்காவின் பேராயர் ஜேம்ஸ் ஹார்வே வரவேற்றார். இறுதிச் சடங்குகள் ஆரம்பமாவதற்கு 10 நிமிடங்களுக்கு முன்னர் உலகத் தலைவர்கள் தமது ஆசனங்களில் அமர்ந்தனர். அமெரிக்க, பிரான்ஸ் ஜனாதிபதிகள் இருவரும் அருகருகே உட்கார்ந்தனர். கை கொடுத்துக் கொண்டனர். பரிசுத்த பாப்பரசரின் இறுதிச் சடங்கில் பல வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கைகுலுக்கல்கள் இடம்பெற்றன. உலகின் கடந்த 30 வருட வரலாற்றில் இடம் பெற்ற கைகுலுக்கல்களில் மிக முக்கியமானதென வர்ணிக்கப்பட்டுள்ள இஸ்ரேலிய ஜனாதிபதி மொசே கட்சவ்விற்கும், சீரிய ஜனாதிபதிக்கும் இடையிலான கைகுலுக்கல் திருத்தந்தையின் இறுதி நிகழ்வின்போது அரங்கேறியது. இதே போன்று, இஸ்ரேல் ஜனாதிபதியும், ஈரான் ஜனாதிபதியும் கைகுலுக்கிக்கொண்டுள்ளனர்.

பரிசுத்த பாப்பரசரின் இறுதிச் சடங்கில் 4 மன்னர்களும், 5 மகாராணிகளும், 78 ஜனாதிபதிகளும், பிரதமர்களும், வேறு மதங்களைச் சேர்ந்த 14 மதத் தலைவர்களும் கலந்து கொண்டுள்ளனர். உலகில் கடந்த 40 வருடங்களில் இடம்பெற்ற முக்கிய பிரமுகர்களின் மரணச்சடங்குகளில் இதுவே மிகப் பெரியதென தெரிவிக்கப்படுகிறது. 1963ம் ஆண்டு நவம்பர் மாதம் படுகொலை செய்யப்பட்ட அமெரிக்க ஜனாதிபதி ஜோன். எவ். கெனடியின் உடல் அர்லிங்டொன் தேசிய மயானத்தில் புதைக்கப்பட்டவேளை 220 வெளிநாட்டுப் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். இதில் 19 உலகத் தலைவர்களும், அரச குடும்பங்களைச் சேர்ந்தவர்களும் கலந்துகொண்டுள்ளனர். 92 நாடுகளின் பிரதிநிதிகளும் அடங்குவர். பதவியிலிருக்கும்போது இறந்த அமெரிக்க ஜனாதிபதியொருவரின் மரணச்சடங்குகளில் இவ்வளவு பெருமளவு உலகத்தலைவர்கள் கலந்துகொண்டது கென்னடியின் மரணச்சடங்கிலேயே என்பது முக்கியமானது. பிரிட்டனின் முன்னாள் பிரதமர் வின்ஸடன் சேச்சிலின் இறுதி நிகழ்வுகள் லண்டன் சென் போல் கதிட்பிலுலில் இடம்பெற்ற வேளை, 110 நாடுகளின் தலைவர்கள் கலந்துகொண்டனர். இதே போன்று, 1980 மே மாதத்தில் யூக்கொஸ்லாவியாவின் மாபெரும் தலைவர் டிட்டோவின் மரணச்சடங்குகளில் 123 நாடுகளின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். இவர்களில் 4 மன்னர்களும், 32 ஜனாதிபதிகளும் 22 பிரதமர்களும் கம்யூனிஸ்ட் கட்சிகளைச் சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்ட பிரதிநிதிகளும் அடங்குவர். இதே போன்று, ஜப்பானிய சக்கரவர்த்தி ஹிரோ ஹிட்டோவின் மரணச்சடங்கிலும் 150 இற்கும் மேற்பட்ட நாடுகளின் பிரதிநிதிகள் அடங்குவர். உலகில் பெருமளவு பிரதிநிதிகள் கலந்துகொண்ட உலகத்தலைவர்களின் மரணச்சடங்குகள் என வரும்போது படுகொலை செய்யப்பட்ட இஸ்ரேலியப் பிரதமர் யிட்சாக் ராபினின் மரணச் சடங்கினையும் முன்னாள் ஜனாதிபதி யாசீர் அரபாத்தின் மரணச் சடங்கினையும் குறிப்பிடலாம். எனினும், ஆன்மீகத் தலைவர் ஒருவரின் இறுதி நிகழ்விற்கு இவ்வளவு பெருமளவில் உலகத் தலைவர்கள் கலந்துகொண்டது, திருத்தந்தையின் வசீகரத்தன்மையைப் புலப்படுத்தியுள்ளது.

## நோய்களுடன் போராடிய திருத்தந்தை!



*1981 மே 13 :* செயின்ட் பீட்டர்ஸ் சதுக்கத்தில், மெஹ்மது அலி மெக்ஷா என்ற இளைஞன் திருத்தந்தை 2ம் அருள் சின்னப்பரைச் சுட்டான். அடிவயிற்றில் அவருக்கு காயம் ஏற்பட்டது. 5 மணிநேரம் அவருக்கு அறுவைச் சிகிச்சை நடந்தது.

*1981 ஆகஸ்ட் 5 :* சுடப்பட்டதன் தொடர்ச்சியாக ஏற்பட்ட உடல்நல பிரச்சினைகளுக்காக திருத்தந்தை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். மீண்டும் அறுவைச் சிகிச்சை நடந்தது.

*1992 நவ. 11 :* சரிந்திருந்த தோள்பட்டையை சரிசெய்ய திருத்தந்தை அறுவைச் சிகிச்சை செய்துகொண்டார்.

*1994 ஏப். 29 :* கீழே தவறி விழுந்ததால் திருத்தந்தையின் கால் எலும்பு முறிந்தது. இடுப்பு எலும்பு மாற்று அறுவை சிகிச்சையும் அப்போது செய்யப்பட்டது.

*1996 மார்ச் 13 :* குடலில் ஏற்பட்ட பிரச்சினை காரணமாக திருத்தந்தை அவதிப்பட்டார். பொது நிகழ்ச்சியையும் அவர் ரத்து செய்தார்.

*1997 பெப். :* புளு காய்ச்சல் ஏற்பட்டது.

*1999 ஜூன் 15 :* அவரது சொந்த நாடான போலந்தில் உள்ள கிராகாவ் நகரில் திருப்பலி நிகழ்ச்சிக்குப் பின்னர் அவருக்கு கடுமையான புளு காய்ச்சல் ஏற்பட்டது.

*2002 மார்ச் :* மூட்டு வலியால் திருத்தந்தை அவதிப்பட்டார்.

*2003 மே 17 :* 'பர்க்கின்சான் நோயால் திருத்தந்தை அவதிப்படுகிறார்' என்று வத்திக்கான் அதிகாரிகள் அறிவித்தனர்.

*2005 பெப். 1 :* லேசான புளு காய்ச்சல் மற்றும் தொண்டையில் ஏற்பட்ட தொற்று நோய் காரணமாக, ரோம் கெமிலி மருத்துவமனையில் திருத்தந்தை அனுமதிக்கப்பட்டார். அங்கு 10 நாள் தங்கி சிகிச்சை பெற்றார். முதல் முறையாக விபூதிப் புதன் நிகழ்ச்சியில் அவர் பங்கேற்கவில்லை.

*2005 பெப். 24 :* திருத்தந்தைக்கு காய்ச்சல், மூச்சுவிடுதலில் பிரச்சினை மற்றும் பேசுவதில் சிரமம் ஏற்பட்டது. மீண்டும் ரோம் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அவருக்கு மூச்சு குழல் அறுவைச் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.

*2005 மார்ச் 1 :* அறுவைச் சிகிச்சைக்குப் பின்னர் முதல் முறையாகப் பேசினார்.

*2005 மார்ச் 13 :* மருத்துவமனையிலிருந்து திருத்தந்தை வத்திக்கான் திரும்பினார்.

*2005 மார்ச் 20 :* ஈஸ்டர் வழிபாடுகளில் திருத்தந்தை பங்கேற்கவில்லை.

*2005 மார்ச் 24 :* எதிர்பார்ப்புக்கு மாறாகத் திடீரென ஜன்னலில் திருத்தந்தை தோன்றி ஈஸ்டர் ஆசீர்வாதம் வழங்கினார்.

*2005 மார்ச் 30 :* "திருத்தந்தைக்கு குழாய் வழியாக உணவு வழங்கப்படுகிறது" என்று வத்திக்கான் அதிகாரிகள் தெரிவித்தனர்.

*2005 மார்ச் 31 :* கடும் காய்ச்சல் மற்றும் சிறுநீரக குழாய்த் தடத்தில் ஏற்பட்ட தொற்றுநோய் காரணமாக திருத்தந்தை மிகவும் பாதிப்படைந்தார். மாரடைப்பு ஏற்பட்டது

# கலை இலக்கியச் சாரளம்

## கவிதைக் களம்

### உன்னுடன் ஓர் உன்னதமான பகிர்வு

இதயம் இருக்குது நண்பா - அதை
ஏன் வதைக்கிறாய்
உன்னைக் கவனித்துக்கொள் - உன்
குடும்பம் வேதனைப்படுது
சிகரெட் புகையால் - நீ
சீக்கிரம் அழிந்திடுவாய்
மதுவை நாடுகிறாய்- நீயேன்
இளமையில் மரணத்தை தேடுகிறாய்
இறைவனைத் தேடிடு - ஒரு
உன்னத வாழ்க்கையை வாழ்ந்திடு
உன்னை நம்பிடு - நிதம்
உழைத்து உண்டிடு.
நேர்வழி சென்றிடு - இவ்வுலகில்
நல் பெயர்தனை பதித்திடு
அயலவர் பேச்சினை - நன்கு
ஆராய்ந்து பார்த்திடு.
சுயமாக சிந்திக்கக் கற்றுக்கொள் - அந்தச்
சிலந்தியை ஞாபகப்படுத்திப்பார்.
கல்வி என்று சொல்லி - தாய் தந்தை
எதிர்பார்ப்பை கலைத்திடாதே.
உன் மனதில் வளரும் காதல் தீயை
காலம தாமதியாமல் அணைத்திடு
சுய வேலையைத் தேடிக்கொள் - பின்பு
சகலமும் உன்னை நாடிடும்.
விடியட்டும் பொழுது - அதில்
உன் விவேகம் தெரியட்டும்.
அன்புடன் விடைபெறுகிறேன் - நீ
சீக்கிரம் திருந்தி விடணும் - அதைப்
பார்த்து நான் மனம் மகிழணும் நண்பா


*அ. ராசேந்திரன் ஜென்சி,*
*கீளியன்குடியிருப்பு.*

### பரிசுத்த பயணம்

கொல்லும் உருவங்களின்
கோரப் பிடிக்குத் தப்பி
நதியில் மிதந்து
அரண்மனையில் தவழ்ந்து
அஸ்திரங்கள் யாவும் கற்று
மீதியான் வனாந்தரத்தில் பயிற்சி பெற்று
எகிப்திய சாம்ராஜ்ஜியத்தை
அசைத்தான் மோசே.
வாதைகள் வருத்தங்களாயின
கடல்களும் இரத்த அலைகளாய் மாறின
கடலும் பிளந்தது
கசப்பும் மதுரமானது
வானம் தன் யன்னலைத் திறந்து
மன்னாவை வீசியது
காடைகள் காலடியில்,
கர்த்தரின் வாசஸ்தலம்
கருத்தாய் கட்டப்பட்டது
பணிகளும் பழக்கவழக்கங்களும்
நியாயப்பிரமாணமும்
நித்திய உடன்படிக்கைகளும்
நிமலனின் பாதத்திலிருந்து
நித்தியமாய் வந்தது.
சத்தியமாய் மலர்ந்த
யாத்திரை ஆகமம்
இத்தலையில் என்றென்றைக்கும்
வல்லமையின் ஆகமம் ஆகட்டும்

*யே. வதனா, மாதா கோவில் வீதி,*
*தலைமன்னார்.*

## தொடர் கட்டுரை - அங்கம் 26



## கத்தோலிக்க கலை இலக்கிய பாரம்பரியங்கள்

- அருள்பணியாளர் விக்ரர் பிலேந்திரன் -

பகுதி 1 வியாகுல பிரசங்கம் அளிக்கப்படுகின்ற பன்முக வடிவங்கள்

### 11. வியாகுல பிரசங்கத்தில் பண்பாட்டு மயமாக்கலும், சூழமைவாக்கலும்

வியாகுல பிரசங்கம் கிறிஸ்துவின் பாடுகள், மரணம் பற்றிய நிகழ்வுகளையே கருப்பொருளாகக் கொண்டு ஆக்கப்பட்ட இலக்கியம் ஆகும். கிறிஸ்துவின் பாடுகள், மரணம் இவ்விலக்கியம் ஆக்கப்படுவதற்கு 18 நூற்றாண்டுகளுக்கு முன்பு பலஸ்தீனா என்னும் இடத்தில் இடம்பெற்ற வரலாற்று நிகழ்வாகும். பலஸ்தீனாவில் இடம்பெற்ற இச்சம்பவத்தை இலங்கை வாழ் மக்கள் புரிந்துகொள்ளும் வகையில் இலக்கியத்தைப் பண்பாட்டு மயமாக்கி, சம்பவங்களையும், பாத்திரங்களையும் சூழமைவாக்கி வழங்கிய பாங்கு இவ்விலக்கியத்தின் ஆசிரியரின் இலக்கியப் புலமையைத் துலாம்பரமாக எடுத்துக்காட்டுகின்றது.

பண்பாட்டு மயமாக்கல் அல்லது சூழமைவாக்கல் என்பது கிறிஸ்துவின் போதனைகள் அல்லது போதனையின் மதிப்பீடுகள் குறிப்பிட்ட கிறிஸ்தவ சமூக, கலாசார, வரலாற்றுப் பாரம்பரியங்கள் மூலமாக வழங்கப்படுவதாகும். கிறிஸ்துவின் மனித அவதாரமே கிறிஸ்தவத்தின் பண்பாட்டு மயமாக்கலுக்குச் சிறந்த ஆதாரமாகும். கிறிஸ்துவின் பாஸ்கு நிகழ்வின் பின்னணியில் நோக்கப்படும்போதே அவரது மனித அவதாரம் பொருள் பெறுகின்றது. வரலாற்று இயேசு யூதக்கலாசாரத்திற்கும், அதனோடு தொடர்புபட்ட கால, இட, வரலாற்றுக் கூறுகளுக்கும் உட்பட்டவராக, மட்டுப்படுத்தப்பட்ட நிலையில் வாழ்ந்தார். உயிர்ப்பு நிகழ்வின் வழியாக இயேசு யூதகலாசார கூறுகளின் மட்டுப்பாடுகள் எல்லாவற்றையும் கடந்து எல்லாக் கலாசாரத்திற்கும் உரியவராக ஏற்றுக்கொள்ளப்படுகின்றார்.

கிறிஸ்துவின் மனித அவதாரமே பண்பாட்டு மயமாக்கல் அல்லது சூழமைவாக்கல் என்னும் விடயத்தின் ஆரம்பமாகும். கிறிஸ்துவின் மனித அவதாரத்திலேயே இறைவனும், மனிதனும் ஒருவரையொருவர் முழுமையாக எதிர்கொண்டனர். இறைமகன் கிறிஸ்து மனித அவதாரத்தின் வழியாகக் குறிப்பிட்ட யூத, சமூக, கலாசாரத்தில் தோன்றினார். யூதக்கலாசாரமானது கிரேக்க, உரோமைக் கலாசாரக் கூறுகளினால் தாக்கம்பெற்றது என்பது இங்கு கோடிட்டுக் காட்டப்படுதல் பொருத்தமானது. கிறிஸ்து தமது பகிரங்கப் பணியின்போதும், போதனையில் கையாண்ட எடுத்துக்காட்டுகளிலும் யூதகலாசார வாழ்க்கைச் சின்னங்களைப் பயன்படுத்தினார். யூதர்கள் அன்றாடம் உட்கொள்ளும் அப்பத்தையும் பருகும் திராட்சைப்பழ இரசத்தையும் கொண்டே நற்கருணையை ஏற்படுத்தினார். திருச்சபை வரலாற்றின் ஆரம்பகாலத்தை நோக்கும்போது, திருச்சபை விரிவாக்கம் பெற்று பரம்பியபோது அந்தந்த இடங்களில் நிலவிய கலாசாரக் கூறுகளை உள்வாங்கி அவற்றின் வழிநின்றே வளர்ச்சி பெற்றது. ஐரோப்பாவில் கிறிஸ்தவம் பரப்பப்பட்டபோது ஐரோப்பியக் கலாசார கூறுகள் கிறிஸ்தவத்தினுள் உள்வாங்கப்பட்டன. உரோமையரின் ஆட்சி மொழியாகிய இலத்தீன்மொழி திருச்சபையின் வழிபாட்டு மொழியாகவும் நிர்வாகத்திற்குரிய உத்தியோகபூர்வ மொழியாகவும் விளங்கியது. எனினும் கிறிஸ்தவத்தில் பண்பாட்டு மயமாக்கல் இடம்பெறுவதை திருச்சபை எச்சரிக்கையுடனேயே அணுகியது. ஏனெனில் பண்பாட்டு மயமாக்கற் செயற்பாட்டில் திருச்சபை நற்செய்தியின் மதிப்பீடுகள் தொடர்பான தனது தனித்துவத்தை இழக்கலாம் என்னும் ஆபத்தை இரண்டாம் வத்திக்கான் சங்கம் இடம்பெற்ற காலம் வரையும் எச்சரிக்கையுடனேயே எதிர்நோக்கியது. இலங்கையில் முதன்முதல் கிறிஸ்தவத்தைப் பரப்பிய போத்துக்கேய மிஷனறிமார் கிறிஸ்தவத்தைப் பண்பாட்டு மயமாக்கல் செய்வதில் அதிக கவனம் செலுத்தவில்லை. எனினும் இயேசுசபை (மிஷனறிமார்) மறைப்பணியாளர்கள் பண்பாட்டு மயமாக்கலின் ஒரு கூறாகிய இலக்கியப் பண்பாட்டு மயமாக்கலில் கணிசமான பங்களிப்புச் செய்துள்ளனர். இயேசுசபையைச் சார்ந்த அருட்தந்தையர்கள் கென்றிக் கென்றிக்கஸ் (1520-1600), றொபேட் டீ நொபிலி (தத்துவ போதகர் 1557-1656), யோசப் கொன்ஸ்ரன்ரயின் பெஸ்கி (வீரமாமுனிவர் 1680-1746) ஆகிய இவர்களின் பங்களிப்பு தமிழ் இலக்கிய வரலாற்றிலும், தமிழ்க் கிறிஸ்தவ இலக்கிய வரலாற்றிலும் பாரிய பங்களிப்பையும், ஆழமான பதிகையையும் ஏற்படுத்தியுள்ளன. இவர்கள் வரிசையிலேயே ஒல்லாந்தர் காலத்தில் இலங்கையில் மறைபரப்புப் பணியை மேற்கொண்ட யாக்கோமே கொன்சால்வெஸ் அடிகள் தனித்துவமான ஒரு பாங்கில் வியாகுல பிரசங்கம் என்னும் இலக்கியத்தை ஆக்கி, இலக்கிய பண்பாட்டு மயமாக்கலில் பெரும் பங்களிப்பை செய்துள்ளார். ஒல்லாந்தர் காலத்து பல நெருக்குவாரங்கள் மத்தியிலும் யோசேவாஸ் (1651-1711), யாக்கோமே கொன்சால்வெஸ் (1676-1742) ஆகிய இரு அருட்தந்தையர்களும் பண்பாட்டு மயமாக்கல், சூழமைவாக்கல் மறை பரப்பு முறைகளைக் கையாண்டு காலத்தின் சூழலுக்கேற்ற முறையில் தாக்கமானதும், பொருத்தமானதுமான மறைபரப்பு முறைகளை மேற்கொண்டனர்.

*(தொடரும்)*

## மன்னா சிறுகதை

# விதியின் சிரிப்பு

இ. டக்ஷினி,
உப்புக்குளம், மன்னார்



'அப்பா ஒருவாறு பிரச்சினை முடிஞ்சிது" என்று பெருமூச்சு விட்டவாறு பஸ்ஸில் தனக்கென ஒதுக்கியிருந்த ஆசனத்தில் அமர்ந்துகொண்டான் மதன். "எனக்கென்றா ஒன்றரை இலட்சம் தேவைப்பட்டிருக்கும், வெறும் நாலாயிரம் ரூபாய்க்குள்ள எவ்வளவு சுலபமா என் வேலை முடிஞ்சிருச்சி?" என்று மதனின் மனம் திரும்பத்திரும்ப நினைத்துக்கொண்டது. பயணிகள் அனைவரும் ஏறிக்கொண்டதும் பஸ்வண்டி தன் பயணத்தைத் தொடர்ந்தது. இதுவரை நேரமும் நின்று கொண்டிருந்த பெண் ஒருத்தி மதனுக்கு முன்னே சற்றுத் தள்ளி இருந்த ஒரு பெண்ணிடம் ஓடிவந்தாள்.

"ஹய்! இலக்கியா எப்படீ இருக்க? ஏன் கொழும்புக்கு வந்த? தனியாத்தான் வர்றியா?"

என கேள்விக்கு மேல் கேள்விகளை அடுக்கிக் கொண்டேயிருந்தாள். இலக்கியா என்ற பெயரைக் கேட்டதும் மதனின் மனம் திக்கென்றது. "இலக்கியாவா? யாரவள், ஒரு வேளை அவளாக இருக்குமோ? சே.. அவள் எப்படி இந்த பஸ்ஸில, இருக்காது. அவள் யாரா இருந்தா நமக்கென்ன" என நினைத்தவன் தனது கையிலிருந்த இடி பத்திரிகையைப் புரட்டி "அலை கடலுக்கு அப்பால்" என்ற பகுதியில் தனது கவனத்தைச் செலுத்திப் படிக்கத் தொடங்கினான். அந்தப் பெண்களின் பேச்சுத் தொடர்ந்தது. 'ஓ'. தமிழினி உனக்கு எதுவும் தெரியாதில்லே.. தெரிந்திருக்கவும் நியாயமில்லை தான். நீ பல்கலைக்கழகம் போனபின் இந்த மூன்று வருடத்திலேயும் என் வாழ்க்கையில் எத்தனையோ மாற்றங்கள். குவைத்துக்கு பணிப்பெண்ணாகப் போன நான் இரண்டு வருடம் கழித்து இன்றைக்குத்தான் நம்ம நாட்டுக்குத் திரும்பி வந்தேன்..." இலக்கியா சொன்னதைக் கேட்டதும் தமிழினிக்கு பேரதிர்ச்சியாக இருந்தது. "என்னடி சொல்கிறாய்! குவைத்திலிருந்து வருகிறாயா? அப்போ உன்ர அப்பா, தங்கைச்சிகளெல்லாம் எங்கே? உனது காதல் என்னாச்சு..." "ப்ளீஸ் தமிழினி.... தயவு செய்து எனக்கு எதையுமே ஞாபகப்படுத்தாதே" என்றவளின் கண்களிலிருந்து நீர்த்துளிகள் முத்துக்களாய் உதிர்ந்தது. அவளது நிலைமையைப் புரிந்து கொண்ட தமிழினி அவளிடம் வேறெதுவும் கேட்காது தனக்கு இருக்க ஒரு இடம் கிடைத்ததும் அங்கே போய் அமர்ந்து கொண்டாள். இலக்கியா கடந்த கால நினைவுகளை எப்படித்தான் மறக்க நினைத்தாலும் அவளது கண்களிலிருந்து விழும் கண்ணீர்த் துளிகளைப் போலவே பழைய நினைவுகளும் சொட்டத் தொடங்கின. "அண்ணா மூன்று பெண்கள் இருக்கிறார்களே என்று நீ கவலைப்படத் தேவையில்லை. உன்ர மூத்த மகள் இலக்கியாவை என்ர மகனுக்கு கட்டி வைக்கலாம் என நான் நினைச்சிருக்கிறன்." சாந்தா சொன்னதைக் கேட்டதும் அந்தோனி மகிழ்ந்து போனார். தனது தங்கை தன் மேல் வைத்திருக்கும் பாசத்தை எண்ணிப் பெருமைப்பட்டார். அன்று மலர்ந்த இலக்கியா – மதன் காதல் அந்தக் கிராமம் முழுவதும் மணம் வீசியது. யாரென்ன சொன்னாலும் அந்தோனிக்குக் காலம் கை கொடுக்கவில்லை. அவர் நோய்வாய்ப்பட்டார். இலக்கியா மதனிடம் அடிக்கடி சொல்வாள். "மதன் எங்க குடும்பத்திலே ஏற்படுகின்ற கஷ்டத்தைப் பார்க்கும்போது எனக்கு வாழவே பிடிக்கவில்லை. அப்பாவுக்கும் வருத்தம், எனக்கு அடுத்தடுத்து கல்யாண வயசில இரண்டு தங்கைகள், எனக்காவது ஒரு வேலை கிடைச்சிதுன்னா குடும்பப் பாரமாவது தீர்ந்திடும். எங்களுக்கு எப்பதான் விடிவு வரப்போகுதோ தெரியவில்லை." "என்ன இலக்கியா நீ நான் என பிரிச்சுப் பேசுறாய் நீங்கெல்லாம் யாரு? என் மாமன் பொண்ணுங்கதானே, உங்களுக்கு ஒரு கஷ்டம் என்றால் நானும், என் அம்மாவும் பார்த்துக் கொண்டா இருப்போம்" மதன் சொன்ன ஆறுதல் வார்த்தையில் இலக்கியாவின் மனம் குளிர்ந்தது. இப்படிப்பட்ட நல்லவன் எனக்குக் கணவனாக வரப்போகிறான் என்று மகிழ்ச்சியடைந்தாள். வழமையைப் போன்றே அன்றும் இலக்கியா, மதனுடன் பேசிக் கொண்டிருந்தாள். அந்த நேரம் இலக்கியாவின் உறவினர்களில் ஒருவர் வந்து அந்தோனிக்கு சீரியஸாக இருக்கு என்று சொன்னதும் பதறியடித்துக் கொண்டு ஓடியவள், அப்பாவின் நிலையினைக் கண்டு கதறியழுதாள். அந்தோனி மீளாத்துயிலில் மூழ்கியிருந்தார். காலம் யாருக்காகவும் காத்திராமல் சீக்கிரமாய்ச் சுழன்றது. அந்தோனி இறந்து மூன்று மாதங்கள் கடந்தன. இலக்கியா, மதனின் அம்மாவைச் சந்தித்தாள். "அத்தை, அப்பாவும் எங்களைத் தவிக்க விட்டுட்டுப் போயிட்டார். நானும் தங்கச்சிமாரும் வாழுறதற்கு எந்த வசதியும் இல்ல. எனக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. வறுமையில் எத்தனை நாள்தான் வாடுறது. அதனால நா ..... நான் வெளிநாடு போகலாம் என்று.." இலக்கியா பேச்சை முடிப்பதற்கு முன்னே அத்தை கோபத்தின் உச்சிக்கே சென்று "என்ன.... என்னடி சொன்னாய்.... வெளிநாடு போகப் போறாயா? போ... போறதென்றால் ஒரேயடியாய் போய் விடு. அப்புறம் மதனை நீ கனவுலகூட நினைக்க முடியாது." அத்தை பாம்பாகச் சீறினாள். அவளது சீற்றத்தைக் கண்ட இலக்கியா பயந்தவளாக மதனிடம் திரும்பினாள். "மதன் அத்தை என்ன சொன்னாங்க என்று பார்த்தீங்களா?" "அம்மா சொல்வதில என்ன தப்பு... இத பாரு இலக்கியா உன்ர குடும்பத்தில நீயொருத்தி மட்டும்தான் இருக்கிறியா? உன் தங்கைகளில் ஒருத்தியை அனுப்பன். நீ வெளிநாடு போய் வந்தா... அப்புறம் நான் எப்படி உன்னைக் கல்யாணம் முடிப்பன்? இந்த ஊரு உலகம் என்னைத்தான் கேவலமாகப் பேசும்" மதன் சொன்னதைக் கேட்டதும் இலக்கியாவின் கண்கள் நெருப்பாய்ச் சிவந்தன. "மதன் என்ன பேசுறீங்க, நான் வெளிநாடு போவது ஆடம்பரத்திற்காகவும், ஆசைக்காகவுமில்லை. நாங்கள் வாழறதற்குத்தான் வழியைத் தேடிப் போறன். எங்க குடும்பத்தைக் காப்பாற்றுவேன் என்று சொன்னதெல்லாம் உங்க சுயநலம் தானா? சின்ன வயசிலேயே தாயையிழந்து, வளருகின்ற வயசில தந்தையையிழந்து தனிமரமாய் தவித்து நிற்கின்றோம். தாயாய், தந்தையாய் இருந்து என் தங்கைகளை அரவணைக்க வேண்டிய என்னிடமே அவர்களை அலையவிடச் சொல்கிறீர்களே..." "இல்லை இலக்கியா வந்து.... வெளிநாடு போற பெண்கள் அனேகமாக கற்பிழந்துதான் நாடு திரும்புவார்களாம். நீ வெளிநாடு போய்.. உன்னை எப்படி... நான்..." மதன் பேசி முடிக்கும் முன்னரே இலக்கியாவின் வார்த்தைகள் ஈட்டியாய்ப் பாய்ந்தன. "மதன் உங்களுக்கு என்னைக் கல்யாணம் முடிக்க கஷ்டமாகவிருந்தால் உங்க வழியில போயிடுங்க. நான் கடல் கடந்து போறது என்ர கற்பை காசுக்கு விற்று விபச்சாரம் செய்ய இல்ல. கால் வயிறேனும் கஞ்சி குடித்து நிம்மதியாய் வாழத்தான். இனி எனக்கு எனது வாழ்க்கை முக்கியமில்லை. என் தங்கைகள் வாழ்ந்தாலே போதும்." என்று சொல்லியவள் சில நாட்களின் பின்னர், தன் தாய் நாட்டை விட்டு வெளியேறினாள். தங்கையின் கடிதம் மூலம் மதனின் திருமணம் பற்றியும் அறிந்து கொண்டாள். "ம்...ம்.. துறையூர் வந்திற்று. இறங்குங்க... இறங்குங்க" பஸ் சாரதியின் குரலைக் கேட்டதும் சுயநினைவுக்கு வந்தவள் தனது தங்கைகளைக் காணும் ஆவலுடன் பெட்டிகளைத் தூக்கிக் கொண்டு பஸ்ஸை விட்டு இறங்கினாள். துறையூர் என்றதும் பத்திரிகை பார்த்துக் கொண்ட மதனும் இறங்கினான். சாலையைக் கடப்பதற்காக சுற்றும் முற்றும் பார்த்தவன் இலக்கியாவைக் கண்டதும் அதிர்ச்சியடைந்தான். இலக்கியாவும் மதனையங்கே எதிர்பார்க்கவில்லை. "நீங்களா?" என அவளும், "நீயா?" என அவனும் ஒருவரையொருவர் நோக்கினர். இருவர் முகங்களிலும் அதிர்ச்சியின் அலைகள் மின்னலாய்த் தோன்றி மறைந்தன. இலக்கியா மதனுடன் எதுவுமே பேசக்கூடாது என்று நினைத்தாலும்.... அவள் மனது அவனுடன் பேசத்துடித்தது. மனதையடக்க முடியாதவள் கேட்டே விட்டாள். "எப்படி இருக்கிறீங்க மதன்? உங்க அம்மா, மனைவி எல்லோரும் சுகமா?" எனக் கேட்டதும் அவன் திடுக்கிட்டான். இலக்கியாவின் முகத்தை நேரே பார்த்து பதில் சொல்ல அவனுக்கு அவமானமாக இருந்தது. இந்த நிமிடமே தான் செத்துவிடக் கூடாதா? என நினைத்தான். "என்ன மதன் நான் இத்தனை வருடம் கழிச்சு வந்திருக்கிறேன். நான் கேட்டதற்குப் பதில் சொல்லக்கூட உங்களுக்கு விருப்பமில்லையா..?" "இல்லை இலக்கியா அம்மா நல்லா இருக்கிறார். எனது மனைவி வெ.. வெளிநாடு போய்விட்டார். அவளை அனுப்பிவிட்டுத்தான் நான் வாறன்" என்றான் தரையைப்பார்த்தபடியே. "என்ன வெளிநாடு போயிற்றாவா? உங்க மனைவியா?" அவள் கேட்டதும் மதன் அவமானத்தால் துடித்தான். தனது நிலைமையை அவள் புரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காக நடந்ததை அவளிடம் கூறினான். "இலக்கியா எனக்கு உன்கிட்ட பேசவே வெட்கமாயிருக்கு. என்ன செய்வது? என் வாழ்க்கையிலே விதி விளையாடிவிட்டது. நான் எதிர்பாராத விதமாக எனக்கு நோய்யேற்பட்டதால தொழிலிலே ஏகப்பட்ட நஷ்டம் கையிலே இருந்தவைகளும் கரைந்து போயிற்று. குடும்பச் சுமை ஒரு பக்கம். அதற்கு மனைவியை வெளியேயனுப்பிறதைத் தவிர வேறு வழியேயில்லை. நானும் தீராத நோயாளி. என்ன செய்வேன்." மதன் சொல்லி முடிக்கும்போது அவன் கண்களில் நீர் திரையிட்டது. மதனின் கண்களில் கண்ணீரைக் கண்டதும் இலக்கியா பரிதாபப்பட்டாள். அவளுக்கு மதனும் அவனது தாயும் செய்த துரோகத்தை எண்ணிப் பார்த்தாள். இருந்தாலும் இறைவன் தன் எதிரிக்கும் இப்படி தண்டனையைக் கொடுத்துவிடக் கூடாது என பிரார்த்தித்தவள் மதனுக்கு ஓரிரு ஆறுதல் வார்த்தைகளைக் கூறி, அவ்விடத்தை விட்டு அகன்றாள். மதன் அவ்விடத்திலேயே நின்று கொண்டிருந்தான். இலக்கியா வெளிநாடு செல்லுமுன் அவனும் அவனது தாயும் சொன்ன வார்த்தைகள் மீண்டும், மீண்டும் அவன் நினைவில் தோன்றி மறைந்தன.

## திருத்தந்தை 2ம் அருள் சின்னப்பரின்

# வியர்வை முகமும் வெற்றிச் சிறப்பும்

## சில வரலாற்றுப் பதிவுகள்

சுமார் 2000 வருடங்கள் வரலாற்றைக் கொண்ட உரோமன் கத்தோலிக்க திருச்சபையின் வரலாற்றிலே, 3வது நீண்ட ஆட்சிக்காலத்தை கொண்ட பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பர் 26 வருடங்கள் 5 மாதங்கள் 15 நாட்கள் ஆட்சி செலுத்தியுள்ளார்.

மிகவும் நீண்ட பாப்பரசர் ஆட்சிக்காலமென 34 வருடங்கள் தலைமைதாங்கிய வண. பீற்றரின் காலம் கருதப்படுகின்றது. எனினும், பல பாப்பரசர்கள் மாதமொன்றோ அல்லது அதை விடக் குறைவான காலத்திற்கே ஆட்சி செலுத்தியிருந்துள்ளனர். பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பருக்கு முன்னர் தலைமை தாங்கிய 1ம் அருளப்பர் சின்னப்பர் 33 நாட்கள் மட்டும் ஆட்சியிலிருந்தமை குறிப்பிடத்தக்கது.

*1978ம் ஆண்டு அக்டோபர் மாதம் 16ம் திகதி தனது ஆட்சிக்காலத்தை ஆரம்பித்த பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பர் தனது ஆட்சிக் காலத்தில்,*


* மொத்தமாக 1247613 கி. மீ. தூரம் பயணம் செய்துள்ளார். இது பூமிக்கும் சந்திரனிற்குமிடையிலான தூரத்தின் 324 மடங்காகும்.
* இத்தாலிக்கு வெளியே 104 சுற்றுலாக்களை மேற்கொண்டுள்ளார்.
* 129 நாடுகளுக்கு விஜயம் செய்துள்ளார்.
* இத்தாலியில் 146 பயணங்கள் மேற்கொண்டுள்ளார்.
* ரோமிலுள்ள திருச்சபை வட்டாரங்களுக்கு 301 தடவை விஜயம் செய்துள்ளார்.



* வத்திக்கானுக்கு வெளியே மேற்கொண்ட பயணங்களில் 822 நாட்களை செலவிட்டுள்ளார்.
* 20,000 இற்கு அதிகமான பிரசங்கங்களை நிகழ்த்தியுள்ளார்.
* சுமார் 100,000 பக்கங்களை கொண்ட பிரசங்கங்களை நிகழ்த்தியுள்ளார்.
* சுமார் 17.8 மில்லியன் மக்கள் சமுகமளித்திருந்த 1,161 பொது வைபவங்களுக்கு தலைமை தாங்கியுள்ளார்.
* 14 சுற்றறிக்கைகள், 45 திருத்தூதர் கடிதங்கள், 14 சமயச் சொற்பொழிவுகள் மற்றும் 11 திருத்தூதர்களுக்குரிய சட்டங்கள் உள்ளடக்கிய 114 நீண்ட ஆவணங்களைத் தயாரித்துள்ளார்.
* கடந்த 4 நூற்றாண்டுகளில் இவருக்கு முன்னர் ஆண்ட பாப்பரசர்களின் மொத்த சாதனையை விஞ்சும் அளவுக்கு 1,338 மக்களுக்கு திருச்சபை அங்கீகாரம் அளித்தும் 482 புனிதர்களை தூய்மைப்படுத்தியுள்ளார்.
* 231 கர்தினால்களை நியமனம் செய்ததுடன் அவர்களில் 183 பேர் இன்னும் உயிர் வாழ்கின்றனர். 117 பேர் 80 வயதிற்கு குறைந்தவர்கள் மற்றும் அவர்கள் புதிய பாப்பரசர் தேர்ந்தெடுக்கும் கூட்டத்திற்குள் செல்லும் தகுதிபெற்றவர்களாக உள்ளனர்.
* 776 ஜனாதிபதிகள், 246 பிரதமர்கள் அடங்கலாக 1,600 அரசியல் தலைவர்களுடன் சந்திப்புகளை மேற்கொண்டுள்ளார்.
* 1998ம் ஆண்டு மணிலாவில் இடம்பெற்ற இவரின் வழிபாட்டிற்கே மிகக் கூடியளவு மக்கள் திரண்டு வந்திருந்தனர். (4 மில்லியன் மக்கள்)
* 1989ல் ஸ்கண்டினேவிய நாடுகளுக்கு மேற்கொண்ட விஜயமொன்றின்போது இடம்பெற்ற வழிபாட்டிற்கே மிகக் குறைந்தளவிலான மக்கள் பங்குகொண்டனர். 200 பேர் சமுகமளித்திருந்தனர்.
* பாப்பரசரால் விஜயம் செய்யப்பட்ட மிகக் குறுகிய பெயரைக் கொண்ட நகர் டென்மார்க்கிலுள்ள ஓம் நகராகும் (1989 ஜூன் 07)
* மிக நீண்ட பெயரைக் கொண்ட நகர். மெக்சிக்கோவிலுள்ள அகுவாஸ்கலியன்டஸ் ஆகும். (1990 மே.08)







# திருத்தந்தை விட்டுச்சென்ற வரலாற்றுத் தடங்கள்

**திருத்தந்தை இரண்டாவது அருளப்பர் சின்னப்பரின் வாழ்விலும் சேவைக் காலத்திலும் இடம்பெற்ற முக்கிய நிகழ்வுகளும் வாழ்க்கைச் சுருக்கமும்.**

*மே 18, 1920* - போலந்திலுள்ள வடோவைஸ் எனும் ஊரில் இராணுவ வீரரான தந்தையாருக்கும் லிதுவானியன் வழித் தோன்றலான தாயாருக்கும் இரண்டாது மகனாகப் பிறந்தார். இயற்பெயர் கரோல் யோசப் வோஜ்ட்ய்லா.

*1942* - நாஸிகளின் ஆக்கிரமிப்புக் காலப்பகுதியில் மிக நெருங்கிய குடும்ப அங்கத்தவர்களை இழந்த நிலையில், இரகசியமாக குருத்துவப் படிப்பைத் தொடங்கினார்.

*நவ. 1, 1946* - க்ராகோவில் குருவாக்கப்படுகிறார். ரோமிலுள்ள பாப்பரசர் சர்வகலாசாலையில் கல்வியை முடித்து போலந்து திரும்புகிறார்.

*செப். 28, 1958* - க்ராகோவின் உதவி ஆயராக நியமிக்கப்படுகிறார்.

*ஜன. 13, 1964* - க்ராகோவின் தலைமைக் குருவாக நியமிக்கப்படுகிறார்.

*ஜூன் 26, 1967* - பாப்பரசர் 1ம் அருளப்பர் சின்னப்பர் அவர்களால் நியமன அதிகாரமுடைய பாதிரியாராக்கப்படுகிறார்.

*ஒக். 16, 1978* - 455 வருட காலத்தில் இத்தாலியர் அல்லாத முதல் பாப்பரசராக தெரிவு செய்யப்படுகிறார். ஆறு நாட்களின் பின்னர் சேவைக்காலம் ஆரம்பமாகிறது.

*ஜூன் 2 - 10,1979* - கம்யூனிச ஆட்சி நாடான தனது தாயகத்துக்குத் திரும்புகிறார். கூட்டொருமை இயக்கத்தின் (Solidarity Movement) எழுச்சியில் காரணியாகக் கருதப்பட்ட பயணம் இது.

*மே. 13, 1981* - துருக்கியைச் சேர்ந்த மெஹ்மட் அலி அக்ஸா என்பவரால் சென். பீற்றர் சதுக்கத்தில் வைத்து துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி, சத்திர சிகிச்சையின் பின்னர் உயிராபத்தின்றித் தேறுகிறார்.

*மே 12, 1982* - புரட்சிகர ஸ்பானிய பாதிரியான ஜுவான் பெர்னாண்டஸ் க்ரோஹன் பாத்திமாவில் வைத்து பாப்பரசரைக் கத்தியால் குத்த முயற்சிக்கிறார். எனினும், அனர்த்தம் எதுவும் நேரவில்லை.

*ஜூன் 8 - 14, 1987* - அவரது தாயகத்துக்கான மூன்றாவது விஜயத்தின்போது, தடை செய்யப்பட்டிருந்த கூட்டொருமை வர்த்தக ஒன்றியத்தை பலமாக ஆதரிக்கிறார்.

*ஜூன் 25, 1987* - ஆஸ்திரிய ஜனாதிபதி குர்த்வெல்டெய்மை வரவேற்கிறார். இது வெல்டெய்மை நாஸிஸ யுத்தகாலக் குற்றச் செயல்களுக்காக எதிர்த்து வந்த யூதர்களிடையே கோபத்தை உண்டு பண்ணுகிறது.

டிசம். 1, 1989 - ஜனாதிபதி மிகெய்ஸ் கோர்பச்சேவ் பாப்பரசரை சோவியத் யூனியனுக்கு வருகை தருமாறு அழைப்பு விடுக்கிறார். பாப்பரசர் இவ்வழைப்புக்களை ஒருபோதும் ஏற்றுக்கொள்ளவில்லை.

*ஏப்ரல் 21, 1990* - ஜனாதிபதி வக்வால் வெலுடன் கம்யூனிஸ வீழ்ச்சியை முன்னிலைப்படுத்தும் பொருட்டு சொகொஸ்லோ வாக்கியாவுக்குச் செல்கிறார்.

*ஒக். 18, 1990* - கிறிஸ்தவ மதத் தலைவர்களுடனான ஒன்றுகூடலின்போது திருமண பந்தத்துடனான குருத்துவ வாழ்வை நிராகரிக்கிறார்.

*ஒக். 31,1992* - பூமி சூரியனைச் சுற்றி வருகிறது என்று சொன்னமைக்காக திருச்சபையால் அவதூறு செய்யப்பட்டிருந்த கலிலியோவை 359 வருடங்களுக்குப் பிறகு பாப்பரசர் மீள அங்கீகரிக்கிறார்.

*நவ. 11, 1992* - பெண்களைக் குருக்களாக்குவதற்கு அனுமதிக்கும் அங்கிலிக்கன் தேவாலயத்தின் தீர்மானம் வத்திக்கானுடனான உறவுகளை புதிய ஆட்டத்துக்குக் கொண்டு வருகிறது.

*டிசம். 28, 1993* - இரண்டாயிரம் வருட கிறிஸ்தவ - யூத எதிர்ப்புக்குப் பின்னர் வத்திக்கானும் இஸ்ரேலும் இராஜதந்திர உறவுகளை முன்னெடுக்கின்றன.

*ஏப்ரல் 28, 1994* - குளிக்கும்போது தவறி விழுகிறார். வலது தொடையில் முறிவு ஏற்பட்டது.

*ஒக். 17, 1994* - விசுவாசத்தின் தொடக்கப் புள்ளியைக் கடத்தல், (Crossing the Thershold of Faith) என்ற நூலின் வெளியீட்டோடு உலகில் மிகப் பெரியளவில் விற்பனையாகும் புத்தகத்தின் ஆசிரியராகிறார்.

*மே 17, 1995* - 75 [illegible] பிறந்த நாளின் முடிவில் மற்றைய ஆயர்கள் செய்வதைப் போன்று தானும் ஓய்வுபெற வேண்டுமென்ற முன்மொழிவுகளை நிராகரிக்கிறார். கடவுள் வேண்டும் வரையில் பணியில் இருக்கப் போவதாகக் கூறுகிறார்.

*டிசம். 25, 1995* - வைரஸ் காய்ச்சலால் பீடிக்கப்பட்டதால் நத்தார் பிரார்த்தனைகளில் கலந்துகொள்ள முடியாதபடி சேவைக்காலத்தில் முதற்றடவையாக நிர்ப்பந்தத்துக்குள்ளாகிறார்.

*செப். 19, 1997* - கல்கத்தாவில் இடம்பெற்ற அன்னை திரேசாவின் இறுதி ஊர்வலத்தில் கலந்துகொள்ள முடியாதபடி உடல்நிலை சீரின்மை பாப்பரசரைப் பாதிக்கிறது.

*ஒக். 31,1997* - இரண்டாம் உலக மகா யுத்தத்தில் ஜேர்மன் நாஸிப் படைகளால் முன்னெடுக்கப்பட்ட மனிதப் படுகொலைகளின் போது (The Holocaust) கிறிஸ்தவர்கள் உரிய முறையில் செயற்படத் தவறிவிட்டதாக முக்கிய பேச்சொன்றின்போது குறிப்பிடுகிறார்.

*ஜன. 01, 2000* - கிறிஸ்தவத்தின் மூன்றாவது ஆயிரமாம் ஆண்டில் காலடி பதிப்பதற்காக சென். பீற்றர் தேவாலயத்தில் புனிதக் கதவுகளை திறந்து வைக்கிறார்.

*மார்ச் 13, 2000* - யூதர்கள், மத நம்பிக்கை எதிர்ப்பாளர்கள், பெண்கள், சிறுபான்மையினர் ஆகியோர்க்கு எதிரான செயற்பாடுகள் உள்ளிட்ட திருச்சபையின் பாவங்களுக்காக மன்னிப்புக் கோருகிறார்.

*மார்ச் 20 - 26, 2000* - புனித பூமிக்கு விஜயம் மேற்கொள்கிறார். இஸ்ரேலியர்களுக்கும் பலஸ்தீனியர்களுக்கும் இடையிலான சமாதானத்துக்கு அழைப்பு விடுக்கிறார்.

*மே 8, 2001* - சிரியா விஜயத்தை முடித்துக்கொண்டு இஸ்லாமிய பள்ளிவாசலுக்கு உட்சென்ற முதலாவது பாப்பரசர் என்று வரலாறு படைக்கிறார்.

*நவம்பர் 22, 2001* - குருக்களின் பாலியல் துஷ்பிரயோகத்தால் பாதிப்படைந்தவர்களிடம் மன்னிப்புக் கோருகிறார்.

*ஏப்ரல் 2002* - குருக்களின் சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பில் திருச்சபைக்கு ஏற்பட்ட சலசலப்பைத் தொடர்ந்து ஐக்கிய அமெரிக்காவிலுள்ள ஆயர்களை அழைத்துப் பேசுகிறார்.

*ஜன. - மார்ச் 2003* - அமெரிக்காவில் ஈராக்கிய ஆக்கிரமிப்புக்கு எதிரான பிரசாரங்களில் பாப்பரசர் முன்னிலை நிற்கிறார்.

*ஒக். 19, 2003* - 300,000 பேர் கூடியிருந்த கூட்டத்தில் அன்னை திரேசாவை அன்பின் உருவமாக முத்திப்பேறு பெற்றவராகப் பிரகடனப்படுத்துகிறார்.

*டிசம். 18, 2004* - ஓரினத் திருமணங்களை சமூக அடிப்படைகளின் மீதான தாக்குதல் என்று கூறிக் கண்டிக்கிறார்.

*பெப். 1, 2005* - பாரிய சுவாசப் பிரச்சினைகள் காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுகிறார். 10 நாட்கள் சிகிச்சை பெறுகிறார்.

*மார்ச் 24, 2005* - கடவுளின் விருப்பின்பேரில் அமைதியாக விடைபெற்றுச் செல்வதாக கர்தினால்களுக்குத் தெரிவிக்கிறார்.

*மார்ச் 31, 2005* - இருதய நோயால் தாக்கப்படுகிறார். வைத்தியசாலையில் தாம் அனுமதிக்கப்படுவதை நிராகரிக்கிறார்.

*ஏப்ரல் 2, 2005* - ஜி.எம்.ரி. நேரம் 19.37ல் காலமானார்.

# இளைஞர் பொழிவு

## வாழ்க்கை

நாம் வாழ்கின்ற வாழ்க்கையை, வரலாற்றை மாற்றியமைத்துவிட்ட ஒரு நிகழ்வே சுனாமி! மட்டக்களப்பு, திருகோணமலை, யாழ்ப்பாணம், முல்லைத்தீவுப் பகுதிகளில் ஏற்பட்ட அழிவுகளினைப் பார்த்தவர்களால் இன்னும் மன அழுத்தத்திலிருந்து மீள முடியாதுள்ளது.

உடன்பிறப்புக்களை இழந்து, உடமைகளைப் பறிகொடுத்து, இல்லிடங்களை இழந்து பதறித் துடிக்கும் மக்களின் குரலை இன்னும் கேட்க முடிகிறது. கடல் அன்னைக்கு ஏன்தான் எங்கள்மீது இவ்வளவு கோபமோ? ஏன் ஆண்டவரே எங்களுக்கு இந்த நிலை? போரினால் ஏற்பட்ட பாதிப்பு முடியுமுன்னே நீரினால் ஏன் இப்படியொரு பாதிப்பு? இந்தக் கேள்விகளுக்கு யாரால்தான் பதில் சொல்ல முடியும்?

ஆனால் வாழ்க்கையில் சுனாமி சில பாடங்களைக் கற்றுக்கொடுத்துத்தான் சென்றுள்ளது. இது இறைவனின் திருவிளையாடல் என்போரும் உண்டு. இறைவன் நம்மைத் தண்டித்திருக்கிறார் என்போரும் உண்டு. இயற்கையை நாம் அழித்து வருவதால் அது நம்மை அழித்து விட்டது என்று சொல்பவர்களும் உண்டு. அன்பே உருவான இறைவன் அன்பற்ற செயலை எப்படி அனுமதித்திருக்க முடியும் என்று இறைவனையே கேள்விக்குறியாக்குபவர்களும் உண்டு.

வாழ்க்கை நிரந்தரமற்றது, பாதுகாப்பற்றது. நாம் வாழ்கின்ற இந்த நிமிடம் மட்டுமே உண்மையானது. இந்த நிகழ்காலத்தில் நாம் எப்படி வாழப்போகிறோம் என்பதுவே சுனாமி நமக்குக் கற்றுத்தரும் பாடம்.

உச்சி வெயிலில் செங்கற்களை சுமந்து கொண்டிருந்தான் ஒருவன். அங்கே வந்த சாமியார் அவனைப் பார்த்து, "நீ என்ன செய்து கொண்டிருக்கிறாய்?" என்று கேட்டார். அதற்கு அவன் "உனக்கு கண்ணு தெரியவில்லையா? என் தலைவிதி நான் கல்லு சுமக்கணும்னு, அதை சுமந்துகொண்டிருக்கிறேன்" என்று பொருமினான். இதே கேள்வியை பக்கத்திலிருந்த இன்னொருவனிடமும் கேட்டார் சாமியார். அதற்கு அவன் "நான் என் குடும்பத்திற்காக உணவைச் சம்பாதித்துக் கொண்டிருக்கிறேன்" என்றான். மூன்றாவது நபரிடம் இதே கேள்வியைக் கேட்டார். அதற்கு அவன், "நான் தெய்வத்திற்குக் கோவில் கட்டும் புண்ணிய காரியத்தைச் செய்துகொண்டிருக்கிறேன்" என்றான். மூன்றுபேரும்

### சிந்தனைத் தொடர் – 7

ஒரே பணியைச் செய்தாலும் அவர்களுடைய மனநிலையைப் பொறுத்தே வாழ்க்கை அமைவதைப் பார்க்கிறோம். வாழ்க்கையை எந்தக் கண்ணோட்டத்தில் ஏற்றுக்கொள்கிறோமோ அதற்கு ஏற்பதான் வாழ்க்கையில் நிறைவும் மகிழ்ச்சியும் ஏற்படுகிறது.

இரண்டு பேர் ஒரே சிறைச்சாலையில் அடைக்கப்பட்டிருக்கிறார்கள். ஒருவன் ஜன்னல் வழியாகத் தெரியும் நிலவைப் பார்த்து ரசித்து கவிதை எழுதிக்கொண்டிருக்கிறான். மற்றொருவன் தலையைத் தரையிலே முட்டிக்கொண்டு அழுதுகொண்டிருக்கிறான்.

வாழ்க்கையை சொர்க்கமாக்கப் பிறந்து இருக்கின்றோமா? நரகமாக்கப் பிறந்திருக்கின்றோமா? இது நம்முடைய வாழ்க்கை இதற்கு நாம்தான் பொறுப்பு. வாழ்க்கையை நிறைவாக வாழ்ந்தவர்கள் கூறுவார்கள் "The natural condition of human being is to be happy" மனிதனுடைய இயற்கையான குணம் அவன் மகிழ்ச்சியாக வாழ்வதுதான். அவன் அப்படி வாழவில்லை என்றால் அவனுடைய வாழ்க்கையில் எங்கோ, ஏதோ சரியாகக் கையாழப்படவில்லை என்றுதான் அர்த்தம்.

இந்த மகிழ்ச்சி எங்கே உள்ளது? இதை எப்படிக் கையாழ்வது? "Happiness is within you" மகிழ்ச்சி நம்முள்ளே உள்ளது. நம் உள்ளம் இதை உணரவில்லையென்றால் எத்தனைகோடி பணம் இருந்தாலும் மகிழ்ச்சியை நாம் அனுபவிக்க முடியாது.

*வாழ்க்கையை நாம் நிறைவாக மகிழ்ச்சியாக மாற்ற இவற்றைப் பின்பற்றலாமா?*

- வாழ்க்கையில் அனேக விசயங்களை நம்மால் புரிந்துகொள்ள முடியாது. நமது அறிவு என்பது ஓர் எறும்பு என்றால் வாழ்க்கையும் இந்த உலகமும் யானை போன்றது. யானையால் எறும்பை என்றுமே முழுமையாகப் பார்த்துவிட முடியாது. ஆகவே வாழ்க்கையில் உள்ள அத்தனை புதிர்களுக்கும் நம்மால் விடை கண்டுவிட முடியாது.
- வாழ்க்கையில் எதையெல்லாம் மாற்ற முடியுமோ, அதை மாற்றவும், மாற்ற முடியாதவற்றை ஏற்றுக்கொள்ளவும் மனப்பக்குவத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.
- பயத்தை அறவே ஒழியுங்கள், எதிர்காலத்தில் என்ன நடக்கும் என்ற கற்பனைகளில் பயப்படுவதால் நமது மகிழ்ச்சிதான் பாழாகும். எதிர்காலத்தைப் பற்றி திட்டம்கொள்: தவறில்லை.
- இறந்த காலத்தில் நடந்ததைப் பற்றி நினைத்து நினைத்து வருந்தி, கண்ணீர் விடுவதால் பயனில்லை. அதிலிருந்து கற்றுக்கொண்டதை நிகழ்காலத்தில் வாழ்வாக மாற்றுங்கள்.
- ஓட்டை வாளியில் தண்ணீர் ஊற்றினால் எப்படி நிற்காதோ அதேபோல திருப்தியற்ற மனம் உடையவர்களுக்கு எத்தனை மகிழ்ச்சி வந்தாலும் அது தங்காது. அவர்களுக்கு மனம் சோகமானதாகவே இருக்கும்.

### Fr. வின்னி யோசப் எழுதுகிறார்




- தன்னையே அழித்துக்கொண்டு, ஏமாற்றிக்கொண்டு மது, சிகரெட், போதைப் பொருட்கள் மூலமாகக் கிடைக்கின்ற தற்காலிக மகிழ்ச்சியை உண்மையென்று நினைத்து அதைப் பின்பற்றினால் அது வாழ்க்கையைக் கெடுத்து அழித்துவிடும்.
- வாழ்க்கையில் பிரச்சனைகளால் ஏற்படும் பதற்றம் (tension) உண்மையையும், நிதானத்தையும் பார்க்கவிடாமல் மறைத்துவிடுகிறது. பிரச்சனைகளைப் புரிந்துகொள்ள வேண்டுமென்றால் மனம் பதற்றமில்லாமல் சமநிலையில் இருக்க வேண்டும்.
- என்ன வாழ்க்கை என்று சலித்துக்கொள்ளும் மனநிலையில் செயல்பட்டால் ஓர் அடிகூட வாழ்க்கையில் முன்னேற முடியாது.
- வெற்றி என்பது எவ்வாறு சுகமான அனுபவமோ அதேபோல் தோல்வியும் ஒருவித அனுபவமே! தோல்வி என்பது தள்ளிப்போடப்பட்டிருக்கும் வெற்றி! அதில் உற்சாகம், மகிழ்ச்சி இழக்க ஒன்றுமே இல்லை.
- சிந்திக்கும்போதும் சரி, பேசும்போதும் சரி எதிர்மறை (Negative) வார்த்தைகளைப் பயன்படுத்தாதீர்கள். இது சோர்வை உண்டாக்கி எரிச்சலூட்டி வாழ்க்கையை நரகமாக்கிவிடும். நல்ல எண்ணங்களை மட்டுமே மனதில் கொண்டு எல்லவற்றிலும் நல்லதையே பார்ப்போம்.
- பிறர் நம்மைத் திட்டுகின்றபோதும், கேவலமாகப் பேசும்போதும் அது அவர்களைத்தான் சார்ந்து நிற்கிறது. ஆகவே பிறருடைய வார்த்தைகள் நம்மைப் புண்படுத்தவிடாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். நாய் சூரியனைப் பார்த்துக் குரைப்பதால் சூரியனுக்கு எந்த மாசும் ஏற்படுவதில்லை. *(வாழ்க்கை தொடரும்)*



# திருச்சபையின் நோக்கும் போக்கும்



அண்மையில் மறைந்த திருத்தந்தையின் பிரிவினால் அமைதிக்காக, அன்புக் கலாச்சாரத்திற்காக குரல் கொடுத்த ஒருவரை இழந்து உலகம் தவித்ததை தொடர்பாடல் சாதனங்கள் மூலம் அறிந்துகொண்டோம். உலகம் வேறு, திருச்சபை வேறு என்ற எல்லைகளைக் கடந்து முழுமனிதகுல ஒன்றிப்பிற்காக உழைப்பதே திருச்சபையின் இருப்பின் இலக்காகும் என்பதை யாரும் மறுக்க முடியாது. இதனைத் திருத்தந்தையின் மறைவையொட்டி வெளியாகிய செய்திகள் மூலம் திருச்சபை தன்னை ஒரு பயணம் செய்யும் திருச்சபையாக அடையாளப்படுத்தியுள்ளது என்பது கண்கூடு. திருத்தந்தை உலக அமைதிக்காக, நீதிக்காக, மனித மாண்பிற்காக குரல் கொடுத்தபோதெல்லாம், இறைமக்கள் திருக்கூட்டத்தின் சார்பாகத்தான் குரல் கொடுத்தார். எனவே ஒரு தனிமனிதனாக அவரை உலகம் நோக்க முடியாது, ஏனெனில் அது தனி மனித (Hero worship) வழிபாட்டிற்கு வழிவகுத்துவிடும். திருச்சபை இறைமக்கள் சமூகம் எனில் அதன் ஒட்டுமொத்த குரலாகவே திருத்தந்தையின் பணியும் செயற்பாடும் அமைந்ததேயொழிய, அதை ஒரு தனிமனிதனின் பணியாக மிகைப்படுத்த முடியாது. இத்தகைய ஒரு தனி மனித வழிபாட்டின் பின்னணியில்தான் அவர் மறைந்த அடக்கச் சடங்கில் கலந்து கொண்டோர் "இவரை விரைவில் புனிதராக்குங்கள்" (Santo Subito) என்று இத்தாலிய மொழியில் குரலெழுப்பினார்கள். திருத்தந்தை திருச்சபையின் தலைமைத்துவத்தை ஏற்று 26 வருடங்கள் வழிநடத்தியது அவரது தனிப்பட்ட ஆற்றலினால் மட்டுமல்ல, மாறாக திருச்சபையின் ஆன்மாவாக விளங்கும் ஆவியானவரின் வழிநடத்தலுமாகும்.

## திருச்சபையும் தலைமைத்துவமும்

திருச்சபையின் ஆட்சியமைப்பில் அதி உயர்ந்த உன்னத நிலை திருத்தந்தை நிலையாகும். திருத்தூதர் மரபிலே, புனித இராயப்பரின் வழித்தோன்றலாகவே திருத்தந்தை நோக்கப்படுகின்றார். திருத்தந்தை மறைந்தவுடனேயே யார் அடுத்த திருத்தந்தை என்ற கணிப்பீடுகள் பரவலாக வெளிவரத் தொடங்கிவிட்டன. சிலர் பகிரங்கமாகவே இம்முறை தென் அமெரிக்க நாட்டிலிருந்தே வரவேண்டும் என்று ஆரூடம் கூறத்தொடங்கிவிட்டனர். இன்னும் சிலர் குறிப்பிட்ட கருதினாலே வரவேண்டும் என்ற ஆதங்கத்தை வெளியிட்டுள்ளனர். இவையெல்லாவற்றிற்கும்

பதிலடியாக வத்திக்கான் பேச்சாளர் அடுத்த திருத்தந்தையை தெரிவுசெய்வது "ஆண்டவரின் வேலை" (Work of God) என்று கூறுமளவிற்கு மனித தலையீடுகள் இருந்துள்ளது.

திருச்சபை எப்படித்தான் தான் ஒரு ஆன்மீக, பொதுமையான அமைப்பு என்பதை இனம் காட்டிக்கொண்டாலும், நமது திருத்தந்தை வத்திக்கான் தேசத்தின் தலைவர் என்ற அரசியல் இருப்பையும் மறுக்க முடியாது.

திருச்சபையின் வரலாற்றில் அரச ஆதரவைப் பெற்ற மதமாக மாறியபின் ஆடம்பரமான திருச்சபையாக, சிறப்பான சலுகைகளையும் உரிமைகளையும் பெற்ற அரசு மதமாக திருச்சபை மாறியது. அதன் தலைவர்கள் அரசர்கள் அணியும் சிவப்பு நிற, ஊதா நிற அங்கிகளையும், கிரீடம் சூட்டாத மகுடங்களையும் அணிந்து, கைகளில் மோதிரங்கள் அணிந்து ஒரு உலக அரசருக்குரிய வெளியரங்க பண்புகளோடு இன்றும் பவனிவருவதைக் காணக்கூடியதாகவுள்ளது.

இரண்டாம் வத்திக்கான் திருச்சங்க ஏட்டில் திரு ஆட்சி அமைப்பைப்பற்றிக் கூறுகையில் பணிக்காகவும், இறைமக்களை

### ஓர் விமர்சனக் கண்ணோட்டம்

### தொடர் 10

அருட்கலாநிதி ஸ்ரனி அன்ரனி (அமதி)



ஊட்டி வளர்த்து, மீட்புப்பணியை இயேசுவின் மனநிலையில் முன்னெடுத்துச் செல்லவுமே அமைக்கப்பட்டது என்று குறிப்பிடப்பட்டுள்ளது (தி. எண். 18) எனவே, இயேசுவின் பணிவிடை மனநிலையிலும், வெறுமையிலும் ஊற்றெடுக்கின்ற வகையில் திருச்சபையின் தலைமைத்துவம் செயற்படுகின்றதா என்ற வினா எழுகின்றது. திரு ஆட்சியமைப்பு இயேசுவின் மனநிலையை அமைப்பு ரீதியாகவும், ஆட்கள் ரீதியாகவும் உள்வாங்கி இயேசுவைப் போன்று ஒரு சாட்சியமாக நல்ல ஆயனாக, பணிவிடை செய்யும் ஆயனாக திகழவேண்டியது காலத்தின் கட்டாயமாகும். இறைமக்கள் சமூகம்தான் திருச்சபை என்பதும், கத்தோலிக்கத்தின் அனைத்துலகத் தன்மை வெறும் கண்துடைப்பாக அமையாது பார்த்துக்கொள்ளுதல் திருச்சபை தலைமைகளின் கடமையாகும்.

கத்தோலிக்க திருச்சபையும், தலைமைத்துவமும் மேற்கத்தைய பண்பாடு கொண்டவர்களுக்கு மட்டுமே உரித்தானது என்ற மனநிலையும், இயேசு பூகோளரீதியாக ஆசியராக இருந்தாலும், அனைத்துலக மக்களின் மீட்பர் என்ற பார்வையும் வத்திக்கானை மையமாகக் கொண்டு செயற்படும் அனைத்துலக திருச்சபைக்கு இன்றியமையாதது. இன்றும் 2ம் வத்திக்கான் சங்கம் நிறைவுபெற்று 40 வருடங்கள் கழிந்தும் திருஆட்சியமைப்பின் மனநிலைகளும், ஆதிக்க உணர்வுகளும் மாறியதாகத் தெரியவில்லை. இன்றும் ஆளும் திருச்சபை, ஆளப்படும் திருச்சபை என்ற பிளவுகள், இடை[illegible]கள் குறைந்ததாகத் தெரியவில்லை.

## எல்லைகளைக் கடப்போமாக?

மனிதகுல ஒன்றிப்பிற்காக உழைக்க வேண்டிய திருச்சபை தன்னுள் பிளவுகளை, வேறுபாடுகளை கொண்டிருக்க முடியாது. குறிப்பாக திருச்சபைத் தலைமைகளுக்கும், நம்பிக்கை கொண்டோர் (இறைமக்கள்) சமூகத்திற்கும் இடையேயுள்ள இடைவெளி நிரப்பப்படுதல் அவசியமாகின்றது. இன்று தேசங்களுக்கிடையிலான எல்லைகள் சுருங்கிப் போகின்றன. பூகோளமயமாக்கலினால் உலகம் ஒரு பூகோள கிராமமாக மாறி வருகின்றபோதிலும் மக்களுக்கிடையில் அன்புறவும், தோழமையும், ஒன்றிப்பும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை.

இன்றும் மதத்தின் பெயரால், இனத்தின் பெயரால் சண்டைகளும், போரும் அடக்குமுறைகளும் தலைவிரித்தாடுவதைக் காணலாம். இத்தகைய சூழ்நிலையில் திருச்சபை நம்பிக்கை கொடுக்கும், உலகை உருமாற்றும் திருச்சபையாக மாற மனித வரையறைகளை, எல்லைகளைக் (Borders) கடந்த இறையரசுப் பார்வை திருச்சபைக்கு தேவை. இன்றும் திருச்சபையும், தலத்திருச்சபைகளும் உள்வீட்டுப் பிரச்சினைகளை தீர்ப்பதில் மட்டும் கவனம் செலுத்துவதோடு மட்டும் நின்றுவிடாது, இயேசுவின் நற்செய்திப் பணியை முன்னெடுத்துச் செல்ல ஆவன செய்ய வேண்டியது தலையாய கடமையாகும். இதன் அடித்தளத்தில் திருச்சபையிலிருந்து பிரிந்து சென்ற சபைகளுக்கிடையிலான திறந்த உரையாடல், சமய நல்லிணக்கம் போன்ற பணிகளை முதன்மைப்படுத்துதல் இன்றியமையாதது.

## பொதுநிலையினர் பொற்காலம் என்பது வெறுமனே கோஷம்தானா?

இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் திருச்சபை பற்றிய மறைக்கொள்கைத் திரட்டு (எண்கள் 43 - 44) பொதுநிலையினரின் மறைப்பணியானது உலகத்தைச் சார்ந்தது என்று கூறப்பட்டுள்ளது. இது கிறிஸ்துவின் எண்ணத்திற்கும், விவிலியத்தின் கோட்பாடுகளுக்கும் உட்பட்டு உலகத்தை மாற்றியமைப்பதிலேயே அடங்கியுள்ளது. பொதுநிலையினரின் குருத்துவப் பணி, அவர்களின் வாழ்வு, செயல் அனைத்தையும் கிறிஸ்துவுக்காக அர்ப்பணித்து இந்த உலகை மாற்றியமைப்பதில் இருக்க வேண்டும். சமூகச் சூழலில் தங்களையே முழுமையாக ஈடுபடுத்தி, இறைவனுக்கு சான்றுபகரக்கூடியதே அவர்களின் இறைவாக்குப்பணியாக இருக்க வேண்டும். இதன் அடிப்படையிலேயே மறைந்த திருத்தந்தை 2வது அருள் சின்னப்பர் 1988ம் ஆண்டு வெளியிட்ட "கிறிஸ்தவ நம்பிக்கையாளரான பொதுநிலையினர்" என்ற திருமடலில் எண் 7ல் "இறைவார்த்தையைப் போதிப்பதிலும், அதற்குச் சான்று பகர்வதிலும் பொதுநிலையினரின் பங்கு மிகவும் இன்றியமையாதது, ஈடுசெய்ய முடியாதது ஆகும். அவர்களின் நம்பிக்கை, அன்பின் வழியாகக் கிறிஸ்துவின் திருச்சபையை இந்த உலகத்தில் நிலைபெறச் செய்ய வேண்டும்" என்கிறார். இவைகள் எல்லாம் வெறும் போதனைகளாகத்தான் இன்று திருச்சபையில் காணப்படுகிறதா?

ஆலயத்தில் பூக்கள் வைத்து அலங்காரம் செய்வதும், ஆலயத்தைச் சுத்தமாக்கி கூட்டுவதும்தான் பொதுநிலையினரின் பணிகளா? இன்றும் குருக்கள் குட்டி ராஜாக்களாக பங்குகளில் ஆதிக்க மனநிலையோடு செயற்படுவதைத்தான் காண முடிகின்றது. இன்று குருக்கள் பொதுநிலையினரை உருவாக்கும் முயற்சிகளில் முனைப்புடன் செயல்படுகின்றனரா? மாறாக அவர்களை அறியாமையில் வைத்திருந்து குளிர்காய முனைகின்றனரா? என்ற கேள்விகள் இன்று எழுகின்றன. பொதுநிலையினரின் முக்கிய பங்களிப்பு இல்லாமல் திருச்சபை வேரூன்ற முடியாது. அவர்களின் முழுமையான ஈடுபாடுதான் திருச்சபையை மக்களின் ஒளியாக (Lumen gentium) உலகின் முன் துலங்கச் செய்யும். மறைந்த திருத்தந்தை இரண்டாம் யோவான் பவுலும் "கைதேர்ந்த, ஆர்வமுள்ள, ஆவியால் நிரப்பப்பட்ட பொதுநிலையினர் அவர்களின் குறிப்பான அழைத்தலையும் உணர்ந்திருக்கிறார்கள்" என்று கூறுகின்றார். பொதுநிலையினரை இன்றும் 'கொடு, செபி, கீழ்ப்படி' என்ற போர்வைக்குள் முடக்காது, ஒளியாக, உப்பாக திகழச் செய்ய அவர்களின் உருவாக்கத்திற்கு கரம் கொடுக்க வேண்டியது திருச்சபைத் தலைமைகளின் தலையாய கடமையாகும். *(கண்ணோட்டம் தொடரும்)*

## உலகம் நீண்ட நாட்களாக எதிர்பார்த்திருந்த

# பத்திமா மாதாவின் 3வது இரகசியம்?

**பத்திமாவின் 3ம் இரகசியம்பற்றி பலவிதமான அச்சங்கள் நிலவிவந்தன. 2000ம் ஆண்டில் உலகம் அழியும், 3ம் உலகப்போர் தொடங்கும் என பல வதந்திகள் பேசப்பட்டன. இவற்றுக்கெல்லாம் முற்றுப்புள்ளி வைத்துவிட்டது இந்த 3ம் இரகசியம்.**

2000ம் ஆண்டு மே மாதம் 13ம் திகதி பத்திமாவிலுள்ள செபமாலை மாதா ஆலய மைதானத்தில் திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பர் பத்திமா பதியில் தேவதாயின் தரிசனம் பெற்ற பிரான்சிஸ்கோ, ஜசிந்தா என்னும் இரு சிறுவருக்கும் முத்திப்பேறு பெற்ற பட்டம் அளிக்கும் திருச்சடங்கை நிறைவேற்றினார். திருச்சபையின் புனிதர் பட்டியலில் மிகக் குறைந்த வயதில் முத்திப் பேறு பெற்ற வேதசாட்சிகளல்லாதோர் இவர்களேயாவார். இந்த வழிபாட்டின்போது இவர்களோடுகூட தேவதாயின் தரிசனம் பெற்ற 93 வயதான அருட்சகோதரி லூசியாவும் சமூகமளித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த விழாவின் இறுதியில் சற்றும் எதிர்பாராதவிதமாக வத்திக்கான் வெளிவிவகாரங்களுக்குப் பொறுப்பான கருதினால் அஞ்சலோ சொடானோ இதுவரை வெளியிடப்படாமலிருந்த பத்திமாவின் மூன்றாவது இரகசியத்தை வெளியிட்டபோது அது அங்கு குழுமியிருந்த ஆறு இலட்சம் மக்களுக்கும் மட்டுமல்லாது முழு உலகிற்கே பரபரப்பூட்டுவதாக அமைந்தது.




## பத்திமாபதிக் காட்சிகள்

போர்த்துக்கல் நாட்டிலுள்ள பத்திமா என்னும் சிற்றூரைச் சேர்ந்த லூசியா, ஜசிந்தா, என்னும் சிறுமியரும் பிரான்சிஸ்கோ என்னும் சிறுவனும் தமது ஆட்டு மந்தைகளை மேய்க்க அண்மையிலுள்ள கோவாடா 'இரியா' என்னுமிடத்திற்குச் செல்வதுண்டு. அங்குதான் 1917ம் ஆண்டு மே மாதம் 13ம் திகதி தேவதாய் இவர்கள் மூவருக்கும் முதல் முறையாகக் காட்சி தந்தார். அக்டோபர் மாதம்வரை ஒவ்வொரு மாதமும் 13ம் திகதியன்று இக்காட்சிகள் தொடர்ந்தன. ஒரு 'ஓக்' மரத்தின் மேலே தோன்றிய மரியன்னை அவர்களுக்குப் பல விடயங்களை வெளிப்படுத்தியதுடன் மூன்று இரகசியங்களையும் கூறியிருந்தார். முதலிரண்டு இரகசியங்களும் மனிதனின் பாவத்தால் வரப்போகும் தண்டனைகளையும் மனந்திரும்புதலின் அவசியத்தையும் பற்றியதாகும். இரண்டாம் உலகப்போர் நிகழும் என்பதும் ரஷ்யாவில் ஆரம்பித்த நாஸ்திக கம்யூனிசம் உலகின் ஏனைய பகுதிகளுக்கும் பரவி திருச்சபைக்குப் பல துன்பங்கள் நேரும் என்பதும் இவற்றால் அறிவிக்கப்பட்டன. இவ்விரு இரகசியங்களும் விரைவில் வெளியிடப்பட்டுவிட்டன. ஆனால் மூன்றாவது இரகசியத்தை விரைவில் வெளியிடவில்லை. அது எழுத்தில் வடிக்கப்பட்டு வீரியா ஆயரிடம் ஒப்படைக்கப்பட்டது. 1960ல் அதை வெளிப்படுத்தலாம் என்று லூசியா கூறியிருந்தாலும் திருச்சபை அதனை வெளிப்படுத்தவில்லை. திருத்தந்தையர் 12ம் பத்திநாதரும், 23ம் அருளப்பரும், 6ம் சின்னப்பரும், 2ம் அருள் சின்னப்பரும்கூட அதைப் படித்திருந்தனர். ஆனால் அதை வெளியிடுவது அவர்களுக்கு உகந்ததாகப்படவில்லை. இந்த மிலேனியம் ஆண்டிலேயே அது வெளியிடப்படலாயிற்று.

## மூன்றாவது இரகசியம்

லூசியா தனது கைப்பட எழுதிவைத்ததும் அண்மையில் திருத்தந்தையின் பிரதிநிதியான பேராயர் தார்சீசியோ பேட்டோனே அவர்களுடன் உரையாடி உறுதிப்படுத்தியதுமான வாசகம் பின்வருமாறு

"இறைவா நீர் பேரருட்திரு வீரியா ஆயர் மூலமாகவும் பரிசுத்த திருத்தாயார் மூலமாகவும் எனக்கிட்ட கட்டளைகளுக்கமைய இதனை எழுதுகிறேன்" நான் ஏற்கனவே விளக்கிய இரு பகுதிகளின் பின் தேவதாயின் இடப்புறத்தில் சற்று மேலாக சுடரும் வாளொன்றைக் கையில் ஏந்திய ஒரு தேவதூதரைக் கண்டோம். அந்த வாளிலிருந்து வெளிவந்த தீச்சுவாலைகள் உலகையே எரித்துவிடும்போல் தோன்றியது. ஆனால் தேவதாய் தனது வலக்கரத்திலிருந்து அவரை நோக்கிப் பரப்பிய ஒளிபட்டதும் அவை அணைந்துபோயின தேவதூதர் தனது வலக்கரத்தால் உலகைச் சுட்டிக்காட்டியவாறு "தவம்! தவம்! தவம்!" என்று உரத்த குரலில் கூறினார்.

"பின்பு இறைவனின் பேரொளியில் கண்ணாடியின்முன் மக்கள் செல்லும்போது அதிற்தோன்றும் பிரதி விம்பத்தைப்போல் வெண்ணாடை அணிந்த ஆயர் ஒருவரைக் கண்டோம். அவர் திருத்தந்தையே என எங்களுக்குத் தோன்றியது. வேறு பல ஆயர்களும் குருக்களும் துறவியரான ஆண்களும் பெண்களும் செங்குத்தான மலையொன்றில் ஏறிச்சென்றனர். அதன் உச்சியில் பட்டையோடுகூடிய தங்க மரத்தைப்போன்ற கரடு முரடான மரத் துண்டங்களால் அமைக்கப்பட்ட பாரிய சிலுவையொன்று இருந்தது. அதை அடைவதற்குமுன் திருத்தந்தை பாதி அழிவுற்றிருந்த ஒரு பெரிய நகரினூடாகச் சென்றார்.

அப்போது உடல் நடுங்க, நடை தடுமாற, துன்பமும், துயரமும் மேலிட்டவராய் தான் வழியில் கண்ட பிரேதங்களுக்குரிய ஆன்மாக்களுக்காகச் செபித்தார். மலையுச்சியை அடைந்து, சிலுவையடியில் முழந்தாளிட்டபோது அவர் துப்பாக்கிக் குண்டுகளையும், அம்புகளையும் செலுத்திய போர்வீரர் குழு ஒன்றால் கொல்லப்பட்டார். அதேவிதமாக வேறுபல ஆயர்களும், குருக்களும், ஆண் பெண் துறவியரும், பல்வேறு அந்தஸ்துகளையும், தரங்களையும் சார்ந்த பொதுநிலையினரும் ஒருவர் பின் ஒருவராக அங்கு இறந்தனர். சிலுவையின் இரு கைகளுக்கும் கீழே இரு தேவதூதர் நின்றனர். அவர்கள் தம் கையிலுள்ள பளிங்குச் செம்புகளில் மறைசாட்சிகளின் இரத்தத்தைச் சேகரித்து, இறைவனை நோக்கிச் சென்றுகொண்டிருந்த ஆன்மாக்கள்மீது அதைத் தெளித்தனர்

## தேவதாயின் பாதுகாவலுக்கு திருத்தந்தை நன்றி

காட்சியில் காணப்பட்ட வெண்ணாடை அணிந்த மனிதர் திருத்தந்தையே என்பதை லூசியா உறுதிப்படுத்தினார். அன்னை காட்சி கொடுத்த தினமான 13.05.1981ல் திருத்தந்தை அலிஅகா என்னும் தீவிரவாதியால் சுடப்பட்டதை இது குறிப்பதாக இருக்கலாம். தேவதாயின் தரிசனம் பெற்ற இந்த இடைச்சிறாரை முத்திப்பேறு நிலைக்கு உயர்த்தும் திருச்சடங்கை நிகழ்த்தும் பொருட்டு அவர் பத்திமாவுக்கு வருகை தந்தபோது இதுவரை காலமும் தேவதாய் அளித்த பாதுகாப்புக்கு நன்றி செலுத்தும் யாத்திரையாகவும் அது அமைய வேண்டுமென விரும்பினார். 1981ல் நிகழ்ந்த கொலை முயற்சியில் அவர் உயிரிழக்கவில்லை "ஓர் அன்னையின் கரம் துப்பாக்கிச் சன்னத்தை விலக்கியதால்" தம் சாவின் விளிம்பில் உயிர் காக்கப்பட்டதாக அவர் கருதுகிறார்.

லீரியா ஆயர் ரோமாபுரிக்கு வந்தபோது வாகனத்தில் கண்டெடுக்கப்பட்ட துப்பாக்கிக் குண்டை அவரிடம் கொடுத்து தேவதாயின் திருத்தலத்தில் வைக்குமாறு கேட்டுக்கொண்டார். ஆயரோ அதைத் தேவதாயின் திரு முடியிலே வைக்கும்படி செய்தார்.

முத்திப்பேறு வழிபாட்டிற்கு முதல் நாள் அன்னையின் திருச்சுரூபத்தின் முன்பாக தியானத்தில் ஈடுபட்டிருந்த திருத்தந்தை தாம் பாப்புவாகத் தெரிவு செய்யப்பட்டபோது கருதினால் விசென்ஸ்கி தமக்கு அளித்த மோதிரத்தையே காணிக்கையாகச் செலுத்தினார்.

## காட்சியின் அர்த்தம் என்ன?

இக்காட்சியைக் குறித்து கருதினால் சொடானா விளக்குகையில் இது திருநூலில் காணப்படும் காட்சிகளைப் போன்றது என்றும் அது திட்டவட்டமாக எதிர்கால நிகழ்ச்சிகளைத் தெளிவாகப் படம் பிடித்துக் காட்டவில்லை என்றும் குறிப்பிடப்படாத ஒரு கால எல்லைக்குள் நடைபெறும் சம்பவங்கள் ஒரே பின்னணியில் சுருக்கமாகத் தரப்பட்டுள்ளன என்றும், ஆகவே இதனை ஒரு காட்சியாக அமைந்த அடையாளம் என்றே கொள்ளவேண்டும் என்றும் கூறினார். நிகழ்வுகளின் காலமோ, இடமோ, ஆட்களின் பெயர்களோ தரப்படவில்லை. இக்காட்சியானது 20ம் நூற்றாண்டில் திருச்சபையும், கிறிஸ்தவர்களும் நாஸ்திகத்தின் எழுச்சியினால் அடைந்த துன்பங்களையும், அவர்கள் விசுவாசத்திற்கு சான்று பகர்ந்ததையும் காட்டுகிறது.

லூசியா தான் கண்ட காட்சிக்கு எந்த விளக்கமும் கூறாவிட்டாலும் கருதினால் சொடானாவின் விளக்கத்தை வாசித்தபின் தனது அனுபவமும் அதை ஒத்திருந்ததாகவும் இவ்விளக்கம் சரியென தான் கருதுவதாகவும் கூறினார். தேவதாய் பத்திமா பதியில் கொடுத்த செய்தியை மக்கள் நன்கு விளக்கமாய் பெற்றுக் கொள்ளும்பொருட்டு திருத்தந்தையின் விருப்பப்படி விசுவாசக் கோட்பாடுகள் ஆயரின் மேலாளர் கருதினால் ரட்சிங்கர் இக்காட்சியின் பல்வேறு அம்சங்களுக்குப் பின்வரும் விளக்கங்களைத் தயாரித்துள்ளார்.

முதலாவது தேவதாயின் இடப்புறமிருந்த சுடரும் வாள் கொண்ட தேவதூதர் இடப்புறமிருந்த சுடரும் வாள் கொண்ட தேவதூதர் இக்காட்சி திருவெளிப்பாட்டில் காணப்படும் இது போன்ற காட்சிகளை நினைவூட்டுகின்றது. இது உலகின்மேல் வரப்போகும் தண்டனைத் தீர்ப்பைக் குறிக்கிறது. உலகம் நெருப்பினால் அழிக்கப்படுவது இன்று வெறும் கற்பனையாகத் தோன்றவில்லை. மனிதன் தானே தனது விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்களால் சுடரும் வாளை உருவாக்கிவிட்டான். இந்த அழிவுச்சக்தியை எதிர்த்து நிற்கும் மற்றொரு சக்தியும் காட்டப்படுகிறது. அதாவது தேவதாயின் ஒளி. ஒரு விதத்தில் இது மனந்திரும்புதலுக்கான அழைப்பாக இருக்கலாம். இங்கு மனித சுதந்திரம் வலியுறுத்தப்படுகின்றது. எதிர்காலம் மாற்ற முடியாதபடி நிர்ணயிக்கப்பட்டுவிடவில்லை. மனிதன் தனது மனமாற்றத்தினால் தன் சுதந்திரத்தை சரியான வழியில் திருப்ப வேண்டும் என்பதையே இது உணர்த்துகின்றது. தேவதூதன் கூறிய "தவம்! தவம்! தவம்!" என்னும் வார்த்தைகள் இதைக் காட்டுகின்றன. "மனம் திரும்பி நற்செய்தியை நம்புங்கள்" என்ற வேதாகம வார்த்தைகளை இது நினைவூட்டுகிறது.





அடுத்த கட்டங்கள் அடையாளங்களாகவே உள்ளன. மக்கள் கண்ணாடியில் தோன்றுவதுபோல் காணப்படுகின்றனர். காட்சி நிகழும் இடம் மூன்று குறியீடுகளால் உணர்த்தப்படுகின்றது. செங்குத்தான மலை, பாழடைந்த பெருநகர், ஒரு பெரிய கரடுமுரடான சிலுவை. மலையும் நகரும் மனித வரலாற்றைக் குறிக்கும் அரங்கைக் குறிக்கின்றன. செங்குத்தான ஏற்றம் மனித முன்னேற்றத்தையும், அதே வேளையில் மனிதனது கைவேலை அவனாலேயே அழிவுறுவதையும் காட்டுகின்றது. நகரானது தொடர்பு, முன்னேற்றம் நிகழும் இடமாக இருக்கலாம். ஆபத்தும், பயங்கரக் கேடுகளும் நிறைந்த இடமாகவும் இருக்கலாம். வரலாற்றின் இலக்கும் வழிகாட்டியுமான சிலுவை மலைமீது உள்ளது. சிலுவை அழிவை மீட்பாக மாற்ற வல்லது.

இக்காட்சியில் தோன்றும் மனிதர்களுள் பாப்பானவர் தன்னைச் சூழவுள்ள பயங்கரங்களினால் நடுக்கத்தோடும் துயரத்தோடும் முன்செல்வதாகக் காணப்படுகின்றது. வன்முறைகள், அழிவுகள், துன்புறுத்தல்களின் ஊடாக திருச்சபை செல்லும் பயணம் ஒரு சிலுவைப்பாதை என வர்ணிக்கப்படுகின்றது. இந்த சிலுவைப்பாதையில் திருத்தந்தைக்கு ஒரு விசேட இடம் உண்டு. 10ம் பத்தினாதர் முதல் இன்றைய திருத்தந்தை ஈறாக எல்லோரும் இந்நூற்றாண்டின் துன்பங்களில் பங்குகொண்டவர்கள். இத்துன்பங்களின் ஊடாக சிலுவையை நோக்கி முன்னேற முனைந்தவர்கள்.

காட்சியில் குறிப்பாகக் காட்டப்படும் கடந்த நூற்றாண்டு வேதசாட்சிகளின் நூற்றாண்டாக உலகப் போர்களும், பிரதேசப் போர்களும் பாரிய கொடுமைகளும் நிறைந்த நூற்றாண்டாக இருந்தது என்பதை எவரும் மறுக்க முடியாது.

இக்காட்சியின் இறுதிப் பகுதியில் தேவதூதர் மறைசாட்சிகளின் இரத்தத்தை சேகரித்து அதைத் தெளிப்பது இறைவனை நாடிச் செல்லும் ஆன்மாக்களுக்கு வாழ்வளிப்பதாக உள்ளது. இங்கு கிறிஸ்துவின் இரத்தமும், மறைசாட்சிகளின் இரத்தமும் ஒன்றாகக் கருதப்படுகின்றன. கிறிஸ்துவின் இரத்தத்திலிருந்து திருச்சபை பிறந்ததுபோல் மறைசாட்சிகளின் மரணம் திருச்சபையின் எதிர்கால வாழ்வுக்கு பலன் தருகின்றது.

ஆகவே, இரகசியத்தின் மூன்றாவது பகுதி, முதலில் மனதிற்குத் துன்பம் தருவதாக இருந்தாலும், நம்பிக்கை தரும் ஒரு செய்தியோடு முடிவுறுகின்றது. எந்தத்துன்பமும் வீணாகப் போவதில்லை. மேலும் சாட்சிகளின் துன்பத்திலிருந்து ஒரு தூய்மைப்படுத்தலும், புதுப்பிக்கும் சக்தியும் பிறக்கின்றது. ஏனெனில் இவர்களது பாடுகள் கிறிஸ்துவின் பாடுகளை நிறைவு செய்கின்றன.

## இரகசியம் தரும் செய்தி

பத்திமாவின் இரகசியம் (அதன் மூன்று பகுதிகளும்) இன்று எமக்குக் கூறும் செய்தி என்ன? நவீன காலக் காட்சிகளுள் அதிக தீர்க்கதரிசனங்களைக் கொண்டது பத்திமாபதியின் காட்சி எனலாம். அதில் வெளிப்படுத்தப்பட்ட விடயங்களை 1917ல் எவரும் கற்பனை செய்து பார்த்தும் இருக்க மாட்டார்கள். ஆனால் அன்று முன்னுரைக்கப்பட்டவை அனைத்தும் நிறைவேறியுள்ளன. அதனால்தான் மூன்றாவது இரகசியம் குறித்து மக்கள் மத்தியில் ஆர்வமும், பரபரப்பும் இருந்து வந்தன. ஆனால் இப்போது அந்த இரகசியம் வெளியிடப்பட்டு விட்டது. அதிலுள்ள நிகழ்வுகள் எல்லாம் கடந்த காலத்திற்கு உரியனவாக உள்ளன. எதிர்காலத்தைப் பற்றிய பரபரப்பூட்டும் வெளிப்பாடு ஒன்றும் இல்லாதது மக்களுக்கு ஒரு விதத்தில் ஏமாற்றத்தை அழித்திருக்கும்.

வரலாற்றில் இது போன்ற எத்தனையோ காட்சிகள் நிகழ்ந்துள்ளன. திருச்சபையால் அங்கீகரிக்கப்பட்ட காட்சிகள் அனைத்தும் கிறிஸ்துவின் போதனையை, அதாவது மக்களை மனமாற்றத்திற்கு இட்டுச் சென்று அவர்களுக்குத் தேவையான அருளைத் தருகின்ற தந்தையின் அன்பைஅடிப்படையாகக் கொண்டுள்ளன. பாத்திமா காட்சிகளின் செய்தியும் இதுவே. மனமாற்றத்தினாலும் தவத்தினாலும் நற்செய்தியின் வழிக்குக் கொண்டுவருவதாகும். "முதல் இரண்டு பகுதிகளிலும் தரப்பட்ட எச்சரிக்கைக்கு நாம் செவிசாய்க்காததால் அதில் கூறப்பட்ட அனர்த்தங்கள் நிறைவேறலாயின. இப்போது நாம் இறுதிக் கட்டத்தை நோக்கி போய்க்கொண்டிருக்கின்றோம். இரக்கமுள்ள இறைவன் எம்மை சரியான வழிக்குத் திரும்புமாறு அழைக்கின்றார்" என திருத்தந்தை கூறியுள்ளார். திருச்சபைக்கு எதிரான வன்முறைகளும் இன்னும் தொடர்ந்து கொண்டே செல்கின்றன. உளமாற்றம் பெற்று தவம் செய்யும்படி இந்நூற்றாண்டின் ஆரம்பத்தில் தேவதாய் விடுத்த அழைப்பு இன்றைக்கும் பொருந்துவதாகவும், அவசரமானதாகவும் இருக்கின்றது.

எல்லாக் காட்சிகளின் நோக்கமும், மக்களை விசுவாசம், நம்பிக்கை, அன்பு, ஆகியவற்றில் வளரச் செய்வதே மற்றதெல்லாம் இதற்கு இட்டுச்செல்ல வேண்டும் என்பது தனக்கு மேலும் மேலும் தெளிவாகத் தோன்றுவதாக லூசியா கூறியுள்ளார்.

# தற்கால ஊடகங்களை செம்மையாகப் பயன்படுத்தி



## முழு மனித குலத்துடனும் தொடர்பைப் பேணிய பாப்பரசர்



## திருத்தந்தையின் வாழ்வு பணி பற்றிய ஓர் பார்வை

அவரது இளமைப் பருவம் துன்பம் மிகுந்ததாயிருந்தது. 9 வயதில் தாயை இழந்தார். தந்தையின் பராமரிப்பில் மிகுந்த கட்டுப்பாட்டுடன் வளர்க்கப்பட்டார். சிறுவன் கரோலுக்கு விளையாட்டுகளில் அதிக ஆர்வமிருந்தது. இலக்கியம், இசை, கவிதை, நடிப்புக் கலை ஆகியவற்றிலும் ஈடுபாடு இருந்தது. படிப்பிலும் சிறந்து விளங்கினார்.

உலகின் மிகச் சிறிய நாடான வத்திக்கானின் தலைவரான பாப்பரசரின் மறைவுக்கு உலகம் முழுவதும் இரங்கல் தெரிவித்தது. 445 ஆண்டுகளுக்குப்பின் தேர்வு செய்யப்பட்ட இத்தாலியர் அல்லாத பாப்பரசர் இவர்தான். அதுமட்டுமல்ல, பாப்பரசராக தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் போலந்துக்காரரும் இவர்தான். இவர் 264 வது பாப்பரசர். இயற் பெயர் கரோல் வோஜ்டிலா. போலந்திலுள்ள கிராகோவ் நகரத்து கார்டினல் பேராயராக இருந்தபோதுதான் 1978 அக்டோபர் 16ல் பாப்பரசராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

கிராகோவ் நகருக்கு தென் கிழக்கில் உள்ள சிறிய நகரான வாடோவிஸ் என்ற இடத்தில் 1920 மே 18ல் அவர் பிறந்தார். அவரது தந்தை ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரி. பெயர் வோஜ்டிலா. அவரது இரண்டாது மகன்தான் கரோல் வோஜ்டிலா.

அவரது இளமைப் பருவம் துன்பம் மிகுந்ததாயிருந்தது. 9 வயதில் தாயை இழந்தார். தந்தையின் பராமரிப்பில் மிகுந்த கட்டுப்பாட்டுடன் வளர்க்கப்பட்டார். சிறுவன் கரோலுக்கு விளையாட்டுகளில் அதிக ஆர்வமிருந்தது. இலக்கியம், இசை, கவிதை, நடிப்புக் கலை ஆகியவற்றிலும் ஈடுபாடு இருந்தது. படிப்பிலும் சிறந்து விளங்கினார். 1938 ல் இடைநிலைக் கல்வியை முடித்ததும் கிராகோவ் நகரில் ஜெகிலோனியன் பல்கலைக்கழகத்தில் இலக்கியமும் தத்துவமும் பயின்றார். 1939ல் போலந்துமீது ஜெர்மன் படையெடுப்புடன் இரண்டாம் உலகப் போர் தொடங்கியது. ஜேர்மன் ஆக்கிரமிப்பாளர் தொல்லையிலிருந்து தப்பிக்க, கல்குவாரியில் கல் உடைத்தும் இரசாயன ஆலையில் தொழிலாளியாகவும் பணி புரிந்தார்.

1941ல் அவரது தந்தை 61 வயதில் காலமானார். தனது மகன் ஒரு கிறிஸ்தவ குருவாக பணிபுரிவதைக் காண வேண்டும் என்ற அவரது எண்ணம் அப்போது நிறைவேறவில்லை. அதன்பின் அவரது மூத்த சகோதரர் ஆதரவளித்தார். அதனால் கரோல் கிராகோவில் இரகசியமாக இயங்கி வந்த குருமடத்தில் படித்தார். 1945ல் போர் முடிந்தது. 1945 ல் குருப்பட்டம் பெற்றார். அதன்பின்னரும் தம் படிப்பைத் தொடர்ந்து இரு முதுகலைப் பட்டங்களும் டாக்டர் பட்டமும் பெற்றபின்புதான் 1949 ல் கிராகோவ் நகரில் துணைப் பங்குத்தந்தையாகப் பொறுப்பேற்றார்.

போலந்தில் யுத்தத்திற்குபின் பதவி ஏற்ற கம்யூனிஸ்ட் அரசு கத்தோலிக்க திருச்சபைக்கு எதிரான போக்கைக் கொண்டிருந்தது. 1954ல் அங்குள்ள பல்கலைக்கழகத்தில் இறையியல் துறையை நீக்கி விட்டது. எனினும் குருமடத்தில் அந்தத் துறை தொடங்கப்பட்டது. கரோல் வோஜ்டிலா தமது ஆய்வைத் தொடர்ந்தார். பேராசிரியர் பணி மற்றும் பொறுப்புகளைத் தவிர கிறிஸ்தவ குடும்ப ஆலோசகராகவும் சேவை புரிந்தார். 1956ல் கத்தோலிக்க பல்கலையில் நன்னெறித்துறைத் தலைவராக நியமிக்கப்பட்டார். 1958ல் கிராகோவ் துணை ஆயராக உயர்ந்தார்.

கத்தோலிக்க திருச்சபையின் செயற்பாடுகள் மற்றும் சட்டதிட்டங்களில் பெரும் மாறுதல்களை ஏற்படுத்திய 1962 இரண்டாம் வத்திக்கான் கவுன்சில் நடவடிக்கைகளில் பங்கு பெற்றார். அதே ஆண்டில் கிராகோவ் நகரத்தின் தற்காலிக பேராயராக இவர் நியமிக்கப்பட்டார். 1967ல் கார்டினலாக உயர்த்தப்பட்டார். திருச்சபையில் அவர் பெற்ற உயர் பதவியை கம்யூனிஸ்ட் நாடான அவரது தாய்நாடு வரவேற்றது. கம்யூனிசத்தை அவர் அடியோடு வெறுத்தாலும் அதனை வெளிக்காட்டும் வகையில் எதுவும் பேசவில்லை.

ஆலயங்கள் கட்டுவதற்கு அரசிடம் அனுமதி பெற்றார். இளம் குருக்களுக்கு பாதுகாப்பளித்தார். அப்போது மற்றுமொரு கம்யூனிஸ்ட் நாடான செக்கோஸ்லோவாகியாவில் இரகசியமாக பணிபுரிவதற்கு குருக்களை தயார் செய்தார். அரசுக்கு இந்தவிடயம் தெரிந்தால் ஆபத்து ஏற்படுமே என்று கேட்டதற்கு "நான் அவர்களைக் கண்டு பயப்படுவதில்லை. அவர்கள்தான் என்னைக் கண்டு பயப்படுகிறார்கள்" என பதிலளித்தார்.

'காதலும் பொறுப்பும்' என்ற ஆய்வுக் கட்டுரையை 1960ல்



வெளியிட்டார். அது தற்கால கத்தோலிக்க பாலியல் ஒழுக்க நெறிகளை விளக்குகின்றது.

பாப்பரசர் முதலாம் அருளப்பர் சின்னப்பர் 1978 செப்டம்பரில் பதவி ஏற்ற 34 நாட்களிலே திடீரென மரணமடைந்தார்.

புதிய பாப்பரசரைத் தேர்வு செய்ய கார்டினல்கள் வத்திக்கானில் கூடினர். 8வது சுற்று வாக்கெடுப்பில் பெரும்பான்மை வாக்குகள் பெற்று இவர் பாப்பரசராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அக்டோபர் 22 ல் பாப்பரசராக திருநிலைப்படுத்தப்பட்டார். 455 ஆண்டுகளுக்குப் பின் இத்தாலியர் அல்லாத ஒருவர் பாப்பரசராகத் தேர்ந்தெடுக்கப்பட்டது அனைவருக்கும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியது. (1523ல் ஆறாம் அட்ரியான் என்ற இத்தாலியர் அல்லாத ஒருவர் பாப்பரசராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்) அது மட்டுமல்ல கடந்த நூற்றாண்டில் மிக இளமையான (58 வயது) பாப்பரசராகவும் கருதப்பட்டார். பாப்பரசராக பதவி ஏற்கும் முதல் ஸ்லாவ் இனத்தவர், முதல் போலந்து நாட்டுக்காரர் என்ற பெருமையும் உண்டு.

கம்யூனிஸ்ட் நாட்டிலிருந்து பாப்பரசர் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பது அக்கட்சியினருக்கு அதிர்ச்சி ஏற்படுத்தியிருக்க வேண்டும். அச்சமயத்தில் சோவியத் ரஸ்யா பொலிட்பீரோவில் "நமக்கு அடுத்து தொல்லை காத்திருக்கிறது" என எச்சரிக்கப்பட்டதாம்.

பாப்பரசர் பதவி ஏற்ற 8 மாதங்களுக்குள் போலந்துக்கு விஜயம் செய்தார். வோஜ்டிலாவாக ரோம் நகருக்கு சென்ற அவர் பாப்பரசர் இரண்டாம் அருளப்பர் சின்னப்பராக திரும்பி வந்தார்.

அவர் சென்ற இடமெல்லாம் இலட்சக்கணக்கில் மக்கள் திரண்டு ஆரவார வரவேற்பளித்தனர். 33 ஆண்டுகாலம் 'நாத்தீக அரசின்' கீழ் வாழ்ந்த மக்களிடையே எழுந்த ஆன்மீக உணர்வு ஆட்சியாளர்களை அதிர்ச்சியடையச் செய்தது. பொதுவாக பாப்பரசர்கள் ரோம் நகரைவிட்டு வெளிவருவதில்லை. கடந்த நூற்றாண்டில் இருபத்தி மூன்றாம் அருளப்பர் என்ற பாப்பரசர்தான் வெளிநாட்டுப் பயணங்களில் ஈடுபட்டார். ஆறாம் சின்னப்பர் இந்தியாவிற்குக்கூட வந்தார்.

வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொண்ட பாப்பரசர்களில் இரண்டாம் அருளப்பர் சின்னப்பர் முன்னணியில் நிற்கின்றார். 20 ஆண்டுகளில் 117 நாடுகளுக்கு விஜயம் செய்துள்ளார். போலந்து விஜயத்திற்குப்பின் அயர்லாந்து சென்றார். அங்கு 12 இலட்சம் மக்கள்முன் திருவழிபாடு நிகழ்த்தினார். இதற்கு முன் இவ்வளவு மக்கள் ஒரு வழிபாட்டில் பங்கெடுத்ததில்லை. அமெரிக்காவிற்கு சென்றபோதும் அதே வரவேற்புதான். அந்தக் கூட்டங்களில் அவர் நடந்து கொண்ட முறை அவர் பெருமையை மேலும் உயர்த்தியது. அரசியல் தலைவர்களோடு கைகுலுக்கினார். பிற மதத் தலைவர்களை ஆலிங்கனம் செய்தார். புன்னகை பூத்த முகத்தோடு கூட்டத்தினரை பார்த்து கை அசைத்தார். குழந்தைகளைக் கொஞ்சினார்.

பொதுவாக பாப்பரசர்கள் அரசியல் பிரச்சினைகளில் தலையிடுவதும் கருத்து தெரிவிப்பதும் இல்லை. ஆனால் தனி மனித உரிமைகளுக்கு போதிய கௌரவம் அளிக்கப்பட வேண்டும் என்பதில் பாப்பரசர் தீவிரமாயிருந்தார். 1979ல் ஐ. நா. பொதுச் சபையில் உரையாற்றிய போது அதனை வலியுறுத்தினார். அவர் தமது போலந்து விஜயத்திலும் அதனை வலியுறுத்தத் தவறவில்லை. இறுதியில் போலந்தில் கம்யூனிச வீழ்ச்சியில் பாப்பரசரின் பங்கினை குறைத்து மதிப்பிட்டுவிட முடியாது. அதே போல் பராகுவேயில் ஆல்பிரட் ஸ்ட்ரோஸ்னர், சிலியில் அகஸ்டோ பினோசெ, பிலிப்பைன்ஸில் பெர்டினன்ட் மார்க்கோஸ் போன்ற சர்வாதிகாரிகளின் செயற்பாடுகளை பாப்பரசர் குறைகூறத் தயங்கவில்லை. அதனால் உற்சாகமடைந்த எதிர்ப்பாளர்கள் அவர்களது ஆட்சிகளை வீழ்த்தினர் என்பது வரலாறு.

1998ல் பாப்பரசர் கியூபாவிற்கு விஜயம் செய்தார். சோசலிச கோட்பாடுகளைக் கைவிடாதிருப்பதாக கூறிக்கொள்ளும் பிடல் காஸ்ட்ரோ பாப்பரசரின் நிகழ்ச்சிகள் பலவற்றில் கலந்துகொண்டார். அந்த வருகையின் பயனாக 36 ஆண்டுகளுக்குப்பின் கிறிஸ்மஸ் தினத்திற்கு அரசு விடுமுறை அளிக்கப்பட்டது.

அமெரிக்காவிற்கு சென்றபோது சுயநலமிக்க உலகியல் நாட்டம், மதச் சார்பற்ற வாழ்க்கை ஆகியவற்றை கண்டித்ததோடு மூன்றாவது உலகத்தையும் வளம் பெறச்செய்யும் தார்மீகப் பொறுப்பு இருப்பதையும் நினைவூட்டினார். கிறிஸ்தவ பாரம்பரியங்களில் பற்றுறுதி கொண்ட பாப்பரசர் முற்போக்குச் சீர்திருத்தங்களுக்கு எதிரானவர் என்ற குற்றச்சாட்டு கூறப்படுவதுண்டு. குறிப்பாக குடும்பக் கட்டுப்பாட்டு திட்டத்தின் படியான கருக்கலைப்பு முறைகளுக்கு கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளார். கெய்ரோவில் நடைபெற்ற உலக மக்கள் தொகை மாநாட்டில் அதனை எதிர்ப்பதற்கு இஸ்லாமிய நாடுகளின் ஆதரவைக்கூட நாடினார். "தனது குழந்தைகளை கொல்லும் நாட்டிற்கு எதிர்காலமே இல்லை" என்பது அவர் கருத்து.

புத்த சமயம் பற்றி பாப்பரசர் கூறிய கருத்து பிக்குகளுக்கு கோபத்தை ஏற்படுத்தியது. புத்தமதம் பெரும்பாலும் கடவுள் இல்லை என்ற கருத்தினைக் கொண்டது என்று கூறியதுதான் கோபத்திற்கு காரணம். அதனால் பாப்பரசர் இலங்கைக்கு வருகை தந்தபோது புத்தபிக்குகள் அவரைப் புறக்கணித்தனர். ஆனால் பின்னர் பாப்பரசர், புத்த மதத்தின்மீது தமக்கு ஆழ்ந்த மதிப்பும், மரியாதையும் உண்டு என்ற கருத்தை வெளியிட்டார்.

கருணைக் கொலைக்கும் மரண தண்டனைக்கும் எதிர்ப்பு தெரிவித்தவர். பெண்கள் திருச்சபை குருவாக பணிபுரியும் கருத்தையும் அவர் ஏற்றுக்கொள்ளவில்லை. எட்டு மொழிகளில் புலமை பெற்ற பாப்பரசர் ஒரு சிறந்த எழுத்தாளராக விளங்கியவர். அவர் ஆயர்களுக்கு அனுப்பும் சுற்றுக்கடிதத்தில் தத்துவக் கருத்துகள் மிகுந்திருக்கும். சுற்றுக் கடிதங்கள் மற்றும் எழுத்துக்கள் ஆகியவை 150 தொகுதிகளாகத் தொகுக்கப்பட்டுள்ளன. விட்டோரியோ மிஸோரி என்ற பத்திரிகையாளர் எழுப்பிய வினாக்களுக்கு பாப்பரசர் அளித்த எழுத்து மூலமான பதில் *கிராஸிங் தி திரஸ்ஹோல்டு ஒப் ஹோப்* (Crossing the threshold of Hope) என்ற நூலாகத் தொகுக்கப்பட்டு 1994ல் வெளியிடப்பட்டது. அப்போது அதிக விற்பனையான நூல்களுள் அதுவும் ஒன்று.

பன்மொழிப் புலவரான பாப்பரசர் தற்கால ஊடகத்தை நல்ல முறையில் பயன்படுத்தி உலகின் எத்திசையிலுமுள்ள நாடுகளுடன் தொடர்புகொண்டார். அவரது செயல்களும் பேச்சுக்களும் அனைத்து மக்களையும் சென்றடைந்தன என்றே கூறலாம்.


பகைவன்மீதும் கருணை காட்டும் இரக்க சிந்தனையாளர். 1981ல் அவரை சுட்டுக்கொல்ல முயன்ற மெஹ்மத் அலி என்ற துருக்கிய இளைஞனைக்கூட மன்னித்தார். 'யூதர்கள் நமது மூத்த சகோதரர்கள்' என்று கூறி அரவணைத்தார். இவர் காலத்தில்தான் வத்திக்கான் இஸ்ரேல் நாட்டோடு ராஜ்ஜியத் தொடர்புகொண்டது.

ஐந்தடி பத்தரை அங்குலம் உயரம் கொண்ட பாப்பரசர் தமது புஜங்களை சற்று சாய்த்து நடக்கும் வழக்கமுள்ளவர். பாப்பரசர் மூன்று முறை உயிர்தப்பிப்பிழைத்தவர். இளமைப் பருவத்தில் ஒரு கார் மோதியபோதும் கல்லூரிப் படிப்பின்போது டிரக் ஒன்று மோதியபோதும் பாப்பரசர் ஆனபின் மெஹ்மத் அலியின் இரு துப்பாக்கி குண்டுகள் அடிவயிற்றிலும் புஜத்திலும் பாய்ந்தபோதும் உண்மையில் தப்பித்தான் பிழைத்தார். குடலில் ஒரு கட்டியை அகற்றுவதற்காக அவருக்கு சத்திர சிகிச்சை செய்யப்பட்டது. ஏற்கனவே அப்பன்டிஸ் சத்திர சிகிச்சை செய்யப்பட்டுள்ளது.

பாப்பரசரின் மனிதாபிமான கண்ணோட்டத்தைப் பாராட்டிய 'ரைம்' இதழ், அவரை 1994ல் சிறந்தவர் எனத் தேர்ந்தெடுத்தது. 'இன்சைட் வத்திகான்' என்ற நூலின் ஆசிரியர் தோமஸ்ரீஸ், "நேர்மையும் ஜெபத்தில் நம்பிக்கையும் கொண்டவர் பாப்பரசர்" என குறிப்பிட்டுள்ளார் ●



பலஸ்தீனா முன்னாள் தலைவருடன்




கியூபா ஜனாதிபதியுடன்



எலிசபெத் மகாராணியுடன்

# மறைக்கல்வி நிலையச் செய்தி மடல்

## மறைக்கல்வி, கல்வி, விவிலியப் பணிகள்

### நற்கருணை ஆண்டையொட்டி மன்னார் மறைமாவட்ட மறையாசிரியர்களுக்கான சிறப்புத் தியானமும் ஒன்றுகூடலும்

**மையப்பொருள்:**

**“நற்கருணையும் பணி வாழ்வும்”**

நற்கருணை ஆண்டையொட்டி மன்னார் மறைமாவட்டத்தில் உள்ள அனைத்து மறையாசிரியர்களுக்குமான சிறப்புத் தியானத்தையும் ஒன்றுகூடலையும் நடாத்தத் திட்டமிட்டுள்ளோம. இத்தியானத்தை வழிநடத்த இந்தியாவில் இருந்து குருக்கள் மற்றும் சகோதரர்கள் வருகைதர உள்ளனர்.

இடம்: மறைக்கல்வி நிலையம், மன்னார்.

காலம்: 06.05.2005 (வெள்ளி) தொடக்கம் 08.05.2005 (ஞாயிறு) வரை

நேரம்: வெள்ளி மாலை 5.00 மணி தொடக்கம் ஞாயிறு காலை 10.00 மணிவரை.

பங்குகளில் உள்ள அனைத்து மறையாசிரியரும் இதில் பங்கேற்றுப் பயன் அடையுமாறு அன்போடு கேட்டுக் கொள்கிறோம்.




### தன்னார்வப் பணியாளருக்கான தொடர் பயிற்சி

**(உபவாசத் தியானமும் ஒன்று கூடலும்)**


மன்னார் மறைமாவட்டத்தில் உள்ள தன்னார்வ இறைவார்த்தைப் பணியாளருக்கான தொடர் பயிற்சிகள் மறைக்கோட்ட ரீதியாக நடைபெற்றன. முருங்கன் மறைக்கோட்டப் பங்கில் உள்ள பணியாளருக்கான பயிற்சி முருங்கன் கிறிஸ்து அரசர் ஆலயத்தில் 13.04.2005 அன்று நடைபெற்றது. மன்னார் மறைக்கோட்ட பங்குகளிலுள்ள பணியாளருக்கான பயிற்சி 14.04.2005 அன்று மன்னார் மறைக்கல்வி நிலையத்தில் நடைபெற்றது. வவுனியா மறைக்கோட்ட பங்குகளிலுள்ள பணியாளருக்கான பயிற்சி 22.04.2005 அன்று வவுனியாவில் நடைபெற்றது. மடு மறைக்கோட்ட பங்குகளிலுள்ள பணியாளருக்கான பயிற்சி 23.04.2005 ஆட்காட்டிவெளியில் உள்ள புனித சவேரியார் ஆலயத்தில் நடைபெற்றது.

காலை 9.00மணி தொடக்கம் மாலை 4.00 மணிவரை இடம் பெற்ற இப்பயிற்சியில், புகழ்ச்சி வழிபாடும், இறைவார்த்தையோடு கூடிய செய்தியும், பணி அனுபவப் பகிர்வும் இடம்பெற்றது. பணி பற்றிய அனுபவப் பகிர்வில் பல பங்குகளில் தன்னார்வப் பணியாளர்கள் தமது பங்கு எல்லைக்கு உட்பட்ட தூர இடங்களில் உள்ள துணைப்பங்கு ஆலய மக்களின் குடும்பங்களைச் சந்தித்த அனுபவத்தைப் பகிர்ந்துகொண்டார்கள். மறைக்கல்வி நிலைய இயக்குனர் அருட்பணியாளர் பா. கிறிஸ்து நேசன் அவர்களும், அருட்சகோதரி தியோனி மற்றும் வேதியர்களான திரு. செபஸ்ரியாம்பிள்ளை, திரு. சவிரி, திரு. மரியசெல்வம் ஆகியோர் இத்தியானத்தை நெறிப்படுத்தினார்கள்.

### மடுத் திருப்பதியில் மன்னார் மறைமாவட்ட கத்தோலிக்க ஆசிரியர்களுக்காக நடாத்தப்பட்ட



## தவக்காலத் தியானத்தில் பங்கேற்ற ஆசிரியர்களின் அனுபவங்கள்



நான் என்னையறிய எந்நிலையில் உள்ளேன் என்பதனை அறிய முடிந்தது. இத்தியானம் உண்மையான ஒரு மனமாற்றத்தினைத் தந்தது. எனது பொறுப்புக்கள் அதாவது கத்தோலிக்க ஆசிரியர் என்ற வகையில் எனது பொறுப்புக்களையும், கடமைகளையும் அறிய, உணர முடிந்தது. திருவிவிலியத்தை நான் வாசிப்பதுண்டு. ஆனால் நாளாந்தம் வாசிப்பதில்லை. இத்தியானத்தின் மூலம் நாளாந்தம் வாசிக்க வேண்டும் என்ற ஒரு உணர்வு உதித்துள்ளது. என்னிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள மாணவர்களை நான் எவ்வாறு வழிநடத்த வேண்டும் - குறிப்பாக ஆன்மீகத்தில் வழிநடாத்த வேண்டும் என்பதனை உணர்ந்துகொண்டேன்.

*திருமதி. ஸ்ரான்லி செபமாலை குரூஸ், தாழ்வுபாடு, மன். புனித சவேரியார் பெண்கள் கல்லூரி.*

உண்மையிலேயே மனமாற்றத்தைத் தூண்டக் கூடியதாகவிருந்தது. பல காலமாக பாவசங்கீர்த்தனம் என்னும் திருவருட்சாதனத்திற்கு முக்கியத்துவம் கொடுக்காமல் இருந்த எனக்கு அதன் முக்கியத்துவத்தை உணரக்கூடியதாக இருந்தது. குழுச் செயற்பாட்டின்போது பகிரப்பட்ட சாட்சியமானது என்னை இன்னும் பணியைச் சிறப்பாகச் செய்யத் தூண்டியது. இறைபிரசன்னத்தை உணர்ந்தேன். நான் இங்கு வரும்போது இருந்த எனது மனநிலை மாற்றம் பெற்றுள்ளதை உணருகின்றேன்.

*திருமதி. C.S.P. பீரிஸ், பள்ளிமுனை, மன். எருக்கலம்பிட்டி மகளீர் ம.வி.*

தியானம் ஒழுங்கு செய்யப்பட்ட விதம் நல்லது. தவக்காலத்தில் இதை நடத்தியது மிகப் பொருத்தமானது. உரைகள், பாடல்கள் அனைத்தும் சிறப்பாக அமைந்தன. உள்மனக் குணமாக்கல் வழிபாடு புதுமையாகவிருந்தது. நல்லதொரு ஒப்புரவு அருட்சாதனத்தைப் பெறக்கூடியதாகவிருந்தது. குறிப்பாக பயனுள்ளதாக இத்தியானம் அமைந்தது.

திருமதி. பெப்பி விக்ரர் லெம்பேட், வங்காலை, வலயக் கல்வி பணிமனை.

தவக்காலத் தியானம் இக்காலப் பகுதியில் நடைபெற்றது மிகவும் பொருத்தமானது. அதேவேளையில் மனமாற்றத்தை ஏற்படுத்தக கூடியதாகவும் இருந்தது. மனமாற்றம் வாழ்க்கையில் மாற்றத்தையேற்படுத்த வேண்டும் என்ற நோக்கோடு செல்கிறேன். நான் கிறிஸ்துவை மாதிரியாகக் கொண்டு வாழ விரும்புகிறேன். சமூகம் அந்நிலையில் என்னை வாழவிடுமா என்பது ஏக்கம். இவ்வேளையில் எனது தாரக மந்திரம் கிறிஸ்துவின் இரத்தமே ஜெயம் என்ற முடிவோடு தியான அனுபவத்தோடு வீடு செல்கிறேன். நீதியே வெற்றி.

*கி.ம.கூஞ்ஞ, வங்காலை பங்கு, மன். வஞ்சியங்குளம் றோ.க.த.க.பாடசாலை.*

ஆன்ம தாகம் தீர்க்கப்பட்டது. எமது பணியின் ஆழம், பொறுப்பு செய்யாமல் இருக்கும் பணித்திட்டங்கள் ஆழமாக விளக்கப்பட்டது. குழுக் கலந்துரையாடலில் தனிப்பட்டவர்களின் வாழ்வு பற்றிய சகலதும் அறிந்து பகிரப்பட்டது மிகவும் சிறப்பானதாக அமைந்தது. அருட்சகோதரியின் உரைகள் அனுபவங்கள் பணிவாழ்வு எமக்கு உந்து சக்தியாக அமைந்தது. எமக்குள்ளவற்றுடன் திறமையாக ஆழமாக, வாழ்வுடன் இணைந்ததாக, செயலாற்ற வேண்டுமென்னும் ஆர்வத்துடன் அமைந்தது போற்றுதற்குரியது.

*திருமதி. சறோஜினி அமலதாசன், உயிலங்குளம்.*

ஞானஒடுக்கம் ஒரு நல்ல ஆத்ம திருப்தியைத் தந்தது. நல்ல பாவசங்கீர்த்தனம் செய்யத் தூண்டியது. ஞான அறிவை வளர்க்க உதவியது. இறையனுபவத்தில், இறைபிரசன்னத்தில் இருக்கத் துணை செய்தது. அழைப்பின் மேன்மையையும், பணியையும், கடமையையும் ஆழப்படுத்தியது. விசுவாச வாழ்விற்கு வெளிச்சமாக அமைந்தது. சாப்பாடு, உபசரணைகள் நன்றாக இருந்தன. உதவியாளர்கள் வினைத்திறனுடையவர்களாக இருந்தனர். உரையாற்றியவர்களின் பேச்சு கவர்ச்சியுடையதாகவும் உள்ளத்தைத் தொடுவதாகவும் இருந்தது.

*திருமதி பயஸ் ரதியுடெக்சியா பீரிஸ், பேசாலை, வலயக்கல்வி அலுவலகம், மன்னார்.*

தியானத்தில் நான் பெற்றுக்கொண்டவை: மன அமைதி, உளமாற்றம், கருத்தாழம் மிக்க இறைவார்த்தைப் பகிர்வு, இறை ஒன்றிப்பில் மகிழ்வு, செபத்தில் இணைந்த வாழ்க்கைக்கான ஆயத்தம் போன்றவை! உள்மனக் காயங்கள் ஆறியதால் பெரியதொரு மனமாற்றத்தை உணர்ந்தேன். என்னை ஆராய்ந்து பார்க்க எனக்கு கொடுக்கப்பட்ட ஒரு சந்தர்ப்பமாக இத்தியானம் இருந்தது. பங்களித்தவர்கள் நயம்படப் பேசி மற்றவர்களை கவர்ந்திழுத்து இறைவார்த்தையில் ஒருங்கிணைத்தனர்.. பாவமன்னிப்பு பெற்றதில் உளத்திருப்தி ஏற்பட்டது.

*செல்வி. யூடிற் றெவ்வல், வங்காலை, மன். அல் - அஸ்ஹர் மு.ம.வி*

இயேசுவிற்கே நன்றி. உண்மையிலேயே இத்தியானம் நன்றாக, மிக மிக நன்றாகவே இருந்தது. விசேடமாக மடுத்தாயின் இல்லத்திலே நடாத்தியது மிகச் சிறப்பான ஒன்றாகவே இருந்தது. எங்களுடைய கஷ்டங்கள் யாவற்றையுமே மிகவும் மகிழ்வுடன் ஏற்று வாழும் தன்மை கொண்ட உள்ளம் என்னில் உதயமாகியுள்ளது. எல்லாவற்றையுமே இறைவனுக்காக செய்ய ஒரு மனநிலை உருவாக காரணமாகியுள்ளது. இவ்வாறாக ஒவ்வொன்றாக சொல்லிக்கொண்டே போகலாம். இயேசுவே உமக்கு நன்றி.

*பெனடிக்ற் மிதிலா, மன்னார், மன்/எருக்கலம்பிட்டி மகளீர் பாடசாலை.*

இரண்டு நாட்கள் நடாத்தப்பட்டு அவற்றினூடாக எங்களுக்கு வழங்கப்பட்ட நல் ஆலோசனைகளும் கருத்துக்களும் என்னுடைய வாழ்வை மிகவும் தொட்டிருக்கின்றது. எல்லாவற்றையும்விட மேலானவர் கடவுள் ஒருவரே அவரின் விருப்பப்படி வாழ்வதே என் வாழ்வின் இலட்சியம் என்பதை இத்தியானம் என் மனதில் ஆழமாகப் பதியவைத்துள்ளது. அதோடு இல்லாது மாணவர்களுக்கு எப்படி எமது முன்மாதிரிகையான வாழ்வால் அவர்களையும் அன்புச் சமூகத்திற்குள் வாழ வைக்க முடியும் என்பதையும் உணர்ந்துகொள்ளக் கூடியதாயிருந்தது. எங்களுடைய வாழ்வில் இன்னும் மாற்றங்களை ஏற்படுத்த இப்படியான நல்ல கருத்தமர்வுகள் தேவை என்பதை மிகவும் சந்தோஷத்துடனும் நம்பிக்கையடனும் தெரியப்படுத்துகின்றேன். இவ் ஒன்றுகூடலின் மூலம் வேறு பாடசாலை ஆசிரியர்களுடைய விசேஷ அனுபவங்களையும் பெற்றுக்கொள்ள அரிய சந்தர்ப்பத்தை ஏற்படுத்தித் தந்ததற்காக நன்றியும் கூறிக்கொள்கின்றேன்.

*திருமதி. லோறன்சா சாள்ஸ் காந்த ரூபன், முருங்கன், மன்/முருங்கன் ம.வி.*

# மறைக்கல்வி ஓர் அறிமுகம் ~ 2

## மறைக்கல்வியியல் பற்றிய சில புதிய புரிதல்கள்

அண்மையில் ஒரு “மறைக்கல்விக் கருத்தரங்கில் மறைக்கல்வி என்றால் என்ன?” என்று ஆசிரியர்களிடம் கேள்வி கேட்டேன். அதற்கு ஆசிரியர். “மற்றப் பாடங்களுக்குள் மறைந்து கிடப்பதால் மறை(ந்த)க்கல்வி” என்று வேடிக்கையாகச் சொன்னார். மறைக்கல்வி மறைந்த கல்வியானது எப்போது? இது காலத்தின் கோலமா? இல்லை கடவுள் செய்த மாயமா? கேள்விதான் எழுந்தது. ஏன் இந்த நிலை? இன்றைய சூழ்நிலையில் பலரும் இது போன்றுதான் உள்ளனர்.

விசுவாசம் கடவுளின் கொடையாகவும், முன்முயற்சியாகவும் இருப்பதால் நம்பிக்கை கொண்டோர் அனைவரும் கடவுளின் அழைப்புக்குப் பதில் அளிக்கவும், வளரவும், முதிர்ச்சி பெறவும், இறையாட்சிக்காகத் தம்மையே அர்ப்பணிக்கவும் முடிகிறது. திருச்சபை இந்த நம்பிக்கை கொண்டோரின் விசுவாசப் பயணத்தில் இணைநது நிற்பதோடு சிறப்பாகப் பயணம் செய்ய உறுதுணையாகிறது.

### மறைக்கல்வி என்ற சொல்லின் விளக்கம்

மறைக்கல்வி (Catechism) என்ற சொல் கிரேக்க மூலச் சொல்லான ‘கேட்டசெய்ஸ்’ லிருந்து வருகிறது. இது வாய்மொழியாக அறிவிப்பதை, கேட்கும்படியாகச் சொல்வதைக் குறிக்கும் (லூக். 1 : 4, தி.ப. 18 : 25, உரோ. 12 : 18, கலா. 6 : 6). ஆங்கில மற்றும் ஜெர்மனி மொழிப் பயன்பாட்டில் இச்சொல் கேள்வி – பதில் முறையில் அமைந்து கிறிஸ்துவக் கோட்பாட்டு விளக்கத்தைக் குறிக்கிறது. இது ஜெர்மனி மொழியில் ‘கேட்டிகிஸாமுஸ்’ என்றும் பிரெஞ்சு மொழியில் ‘கேட்டிசிஸ்ம்’ என்றும் அழைக்கப்பட்டாலும் அனைத்துமே கிறிஸ்துவக் கோட்பாட்டைக் குறிக்கின்றன.

### மறைக்கல்வியின் நோக்கம்

மறைக்கல்வியின் நோக்கம் இறைவார்த்தையின் ஒளியில் கிறிஸ்துவின் மறையுண்மைகளைப் புரிய வைப்பதே ஆகும். இறையருள் செயல்படுவதால் கிறிஸ்தவன் ஒரு புதுப்படைப்பாக மாற்றப்பட்டு கிறிஸ்துவைப் பின்பற்றவும் அவரைப்போல் சிந்திக்கவும் செயல்படவும் அவருடைய கட்டளைப்படி நடக்கவும் அவரது அழைப்பில் நம்பிக்கை கொள்ளவும் திருச்சபையில் மென்மேலும் கற்றுக்கொள்கிறான்.

### மறைக்கல்வி என்பது

- விசுவாசத்தில் சிறுவருக்கும் இளைஞருக்கும், முதியோருக்கும் பயிற்சி அளிக்கிறது.
- கிறிஸ்துவக் கொள்கையை கட்டமைப்புடன் போதிக்கிறது.
- திருச்சபையின் மேய்ப்புப்பணி, மறைப்பணியில் ஊன்றி நிற்கிறது.
- விசுவாசத்திற்கான ஆதாரங்களைத் தருகிறது.
- கிறிஸ்துவ வாழ்க்கை அனுபவத்தைப் பகிர்கிறது.
- திருவருட்சாதனக் கொண்டாட்டத்தைக் கொண்டாடுகிறது.
- கிறிஸ்துவ சமுதாயத்தில் முழுப் பங்கேற்பு பெறுகிறது.
- இவற்றுடன் சான்று வாழ்வு வாழப் பயிற்றுவிக்கிறது.

### நோக்கம்

- மறைக்கல்வியின் தனிப்பட்ட நோக்கம் : தொடக்க நிலையில் உள்ள விசுவாசத்தை இறைவனின் அருட்துணையால் வளர்ப்பது.
- இளவயதினர், முதிர் வயதினரான விசுவாசிகளின் கிறிஸ்துவ வாழ்வுக்கு வலுவூட்டி அதை நிறைவுக்கு இட்டுச் செல்வது.
- தொடக்க அறிவிப்பில் தூய ஆவி விதைத்ததும் திருமுழுக்கில் பெற்றதுமான விசுவாச விதையை முளைக்கச் செய்து வளர்ப்பது.

முதலாம் அறிவிப்புப் பணி (நற்செய்திப் பணி) நடைபெறாமலே போயிருந்தால் இன்றைய நிலை என்னவாயிருக்கும்?

(இக்காலத்தில் மறைக்கல்வி அளித்தல் 19)

### பொருளடக்கம்

“தூதுரையின் பொருளடக்கமும் முழுமையும்” மறைக்கல்வி நற்செய்திப் போதனையின் ஒரு பகுதி அல்லது ஒரு வகையாயிருப்பதால் முழுமையான நற்செய்திப் போதனையில் இருப்பவைதான் மறைக்கல்வியிலும் இருக்கவேண்டும்.

(இக்காலத்தில் மறைக்கல்வி அளித்தல் - 26)

ஒரே தூதுரை - மீட்பின் நல்ல செய்தி ஒரு முறை அல்லது பன்முறை செவியில் ஒலித்து, இதயத்தில் ஏற்கப்பட்ட தூதுரை, தியானிப்பதாலும், முறையான படிப்பினாலும் வாழ்க்கையில் அது ஏற்படுத்தும் பிரதிபலிப்புகளை உணர்வதாலும் சமுதாயத்திலும் உலகிலும் உள்ள கிறிஸ்துவ வாழ்வு என்னும் ஓர் உறவில் இணைந்திணைந்த, முரண்பாடற்ற முழுமையினுள் அதை நுழைப்பதாலும் அது மறைக்கல்வியில் பயன்படுத்தப்படுகிறது.

(இக்காலத்தில் மறைக்கல்வி அளித்தல் - 20)

### செய்யவேண்டியவை

மனமாற்றத்திற்குத் தயார் செய்து மனம்மாறச் செய்தல்

(இக்காலத்தில் மறைக்கல்வி அளித்தல் - 19)

கிறிஸ்துவின் முழுமையான மறைபொருளுக்கு இட்டுச்செல்தல்

(இக்காலத்தில் மறைக்கல்வி அளித்தல் 20, 27, 28, 30)

### மறைக்கல்வி யாருக்கு?

எல்லாருக்கும், மழலையருக்கு, சிறுவருக்கு, இளையோருக்கு, வயது வந்தோருக்கு, உடல் ஊனமுற்றோருக்கு என்று மாறுபட்ட மற்றும் ஒன்றை ஒன்று தழுவியதாக அமைவதே சரியான மறைக்கல்வி. இவ்வாறு முழு மனித வளர்ச்சிக்கான மறைக்கல்வி மனிதனின் உள்ளார்ந்த உணர்வு நற்செய்தியை எல்லாருக்கும் எல்லா நிலையினருக்கும், எல்லாப் பண்பாட்டிற்கும் எல்லாக் கலாச்சாரத்திற்கும் ஏற்றதாகக் கொடுப்பது மறைக்கல்வியின் கடமையாகும்

*(தொடரும்)*

# அன்பின் கங்கை அன்னை தெரேசா

**விறு விறுப்புத் தொடர் 16**

*எழுத்துருவாக்கம்*
*சொல்லின் செல்வர் அமுது*

## மூச்சுப்போன உடலங்கள்

ஒருநாள் காளி கோயிலின் பக்கத்தில் நடைபாதையில் சனக்கும்பல் மொய்த்துக்கொண்டு நின்று வேடிக்கை பார்த்தது. அங்கே ஒரு மனிதன் நடக்க முடியாமல் இருமி வீதியில் சத்தியெடுத்து அருவருப்பான நிலைமையில் கிடந்தான். அவனைத் தொட ஒருவரும் முன்வரவில்லை. காசநோய் முற்றி கடைசிப்படியில் அவன் கிடந்தான். அது பொல்லாத தொற்றுநோய். அன்னை திரேசா அவனைத் தூக்கித் தனது இடத்துக்குக் கொண்டுபோய்க் கழுவித் துடைத்து படுக்கையில் கிடத்தி கவனமாகப் பராமரித்தார். "காளிகோயிலின் அர்ச்சகர் ஒருவர் இங்கே வந்து நல்ல மரணம் அடைந்தார். அவர் ஒரு இளைஞர். 24 - 25 வயதுதான் இருக்கும். இங்கே வந்தபோது அவருக்கு ஆத்திரமும் வெறுப்பும் இருந்தது. அவர்தான் எல்லோருக்கும் தலைமையான அர்ச்சகரென நான் நினைக்கிறேன். ஒரு வைத்தியசாலையாவது அவரை ஏற்றுக்கொள்ளவில்லை. அவரை வெளியே அனுப்பிவிட்டன. இதற்காகவே அவர் வெறுப்பைக் காட்டினார். அவர் சாவை எதிர்பார்க்கவில்லை. இங்கு வந்து அமைதியும், ஆறுதலும் அடைந்தார். கோயிலில் இருந்து அவரோடு சேர்ந்தவர்கள் நாளாந்தம் வந்து பார்ப்பார்கள். அவரிலே ஏற்பட்ட மாற்றத்தை அவர்களால் நம்ப முடியவில்லை. இரண்டு வாரம் இங்கே இருந்தார்" என்று அன்னை திரேசா கூறுகிறார். தங்கள் அர்ச்சகர்களில் ஒருவருக்குக் காட்டப் பெற்ற அன்பையும், இரக்கத்தையும், அக்கறையையும் அவர் அமைதியாகவும் கௌரவத்தோடும் மரணமாவதையும் கண்ட கோயில் குருக்கள் அன்புப் பணியாளர் சபை சமய பேதங்களைக் கவனிப்பதில்லையென்பதில் உறுதியாயிருந்தனர். அதனால் பின்னர் தொந்தரவுகளுக்குப் போகவில்லை.

இன்னொரு பெருங் கூட்டத்தினர் - அவர்கள் அனைவரும் மாணவர்கள். இந்தச் சகோதரிகள், நோயாளர் மரணமாகும் முன்னர் மதம் மாற்றம் செய்கிறார்கள் என அஞ்சினார்கள். அவர்கள் காவல் துறை ஆணையாளரைச் சந்தித்து அந்த மாசற்ற நெஞ்சின் மன்றத்தை உடனே மூடிவிட வேண்டுமெனக் கேட்டுக்கொண்டனர். அவரும் உடன்பட்டார். ஆயினும் முதலில் தானே நேரில் சென்று பார்வையிட வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். அவர்கள் அந்த இடத்திற்கு வந்த வேளையில் அன்னை திரேசா புழு நெளிந்து கொண்டிருந்த அழுக்குப் பாண்டமான ஒரு புண்ணுக்கு வைத்தியம் செய்து கொண்டிருந்தார். வெறுப்பூட்டுகின்ற புண்ணின் மணம் அவ்விடத்தில் ஆதிக்கம் செலுத்தியது. ஆணையாளரைக் கவனித்த அன்னை அவர்கள் எல்லா இடத்தையும் சுற்றிப் பார்க்கத் தான் உதவி செய்வதாகக் கூறினார். ஆனால் அவரோ, தானே ஏனைய இடங்களையும் பார்க்க விரும்புவதாகக் கூறினார். அவ்வேளை மாணவர் கூட்டம் உள்ளே வந்து அன்னை திரேசா செய்யும் பணியைக் கண் வெட்டாமல் கவனித்தது. அன்பும் அரவணைப்பும் இரக்கமும் இரகசியமாய் மகுடம் அணிந்து அங்கே அரசாட்சி செய்தன. ஆணையாளர் வெளிச்சத்தை மறைத்துக்கொண்டு நெருக்கமாய் அங்கு கூடி நின்ற மாணவர் கூட்டத்தை திரும்பிப் பார்த்தார். "நான் உங்களுக்குக் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்ற ஒரு தடையுமில்லை. இங்கே இருக்கும் இந்த அம்மையாரை வெளியே தள்ளிவிட ஆயத்தம். ஆனால் நான் அதைச் செய்யும் முன்பு உங்கள் தாய்மாரோ, சகோதரிமாரோ இங்கு வந்து இவர்கள் செய்யும் வேலைகளைச் செய்ய வேண்டும். அப்படியானால் நான் உங்களுக்கு அளித்த வாக்குறுதியை நிறைவேற்றத் தடையில்லை." என்றார். சத்தமின்றி அங்கு நின்றவர்கள் சென்றனர். காதில் கேள்விப்பட்ட தழும்புகளைவிட கண்ணாற் கண்ட காயங்களே அவர்களுக்கு சாட்சி கூறின. கங்கை நதியுடன் கூக்ளி நதி கலக்கும் நதிக்கரையில்தான் கள்ளிக்கோட்டை உள்ளது. சிறந்த ஞானியாகிய இராமகிருஷ்ண பரமஹம்சர் கல்கத்தாவின் தெற்கே காளிகோயிலில் பூசாரியாக இருந்தவரென்பது நாம் நினைவு கூரத்தக்கது.

இந்தக் கோயில்களுக்கெல்லாம் கள்ளிக்கோட்டை தேவஸ்தானம் ஒரு மணிமுடி. ஐப்பசி மாதம் திருவிழா நடக்கும்போது மக்கள் கூட்டம் அலையடிக்கும். பல மடங்கள் தர்மசாலைகளாக நிர்மாணிக்கப்பட்டவை. ஏனைய காலங்களில் இந்த மடங்களிலே வௌவால் கால் போட்டு ஊஞ்சலாடும். ஊரை வெறுத்து வந்த உடம்பு வற்றிய நாய்கள் கீழே நீட்டி நிமிர்ந்து படுத்துறங்கும். அன்பின் நயாகராவைத் திசை திருப்பி அன்னை திரேசா இந்த இடத்திற்குக கொண்டு வந்துள்ளார். அங்கு வந்து சேர்ந்த ஒவ்வொரு மனிதனும் ஒரு புத்தகம். அடுத்த 5 வருடங்களில் 8000 பேரை இந்த மாசற்ற மன்றம் கண்டு கொண்டது. சாக்கடையொன்றின் குப்பை மேட்டில் புழுக்கள் அரைவாசி உடம்பை உருசி பார்த்த நிலையில் வந்த ஒருவர் கூறிய கடைசி வார்த்தைகள் நெஞ்சத்தை நெகிழ வைக்கும். "நான் தெருவில மிருகங்களைப்போல வாழ்ந்து வந்தேன். ஆனால் இப்போது ஒரு தேவதூதனைப்போல சாகப் போகிறேன். கவனிப்பும் அன்பும் என் மீது கவரி வீசிக்கொண்டிருக்கின்றன." இவ்வாறு கூறியது அவருடைய பெருந்தன்மையைக் காட்டுகிறது. யாரையும் திட்டிக் கொள்ளாமல்,



வசை கூறாமல், ஒப்பிட்டுக் கூற ஒரு உவமை தேடாமல் தனது பெருந்தன்மைக்கு சான்றுகூறக்கூடிய வாக்கியங்களைக் கூறி ஒரு தேவதூதன்போலப் பிரிந்தார். எங்கள் மக்களின் உயர்ந்த பண்புகளுக்கு இவை உரை கல்லுகள்.

மேல் நாடுகளிலும் கீழ் நாடுகளிலும் வயது சென்றவர்கள் இன்று எங்கே இருக்கிறார்கள்? மருத்துவமனைகளில் வயோதிபர் சாலைகளில் அவர்களைக் காண்கிறோம். ஏன்? அவர்கள் பிள்ளைகளுக்குச் சுமையாகிவிட்டதால் அவர்கள் புறக்கணிக்கப்பட்டார்கள். வயது சென்ற பெற்றோர்கள் ஒருவருக்கும் தேவையற்றவர்கள் ஆனார்கள். "நான் சில காலத்திற்கு முன் ஒரு முறை வயோதிபர்களைப் பராமரிக்கும் ஒரு சிறந்த மருத்தவமனைக்குச் சென்றேன் ஒருவருக்குத் தேவையான அத்தனை பொருட்களும் அங்கே இருந்தன. பூக்கள் வைக்கப் பெற்ற அழகான இடம். அங்கே இருந்த 40 பேருக்கும் தேவையான அத்தனை பொருட்களும் குறைவற்றிருந்தன. ஆனால் எல்லோரும் வாசலையே பார்த்துக்கொண்டிருந்தனர். ஒருவர் முகத்திலாவது நான் புன்சிரிப்பைக் காணவில்லை. நான் அவர்களைப் பராமரிக்கும் தாதியிடம் "என்ன இது! எல்லாம் இருந்தும் இவர்கள் கதவு வாசலையே பார்த்தபடியே இருக்கிறார்களே!" என்றேன். உடனே தாதி "இது எப்போதும் நடக்கிற சம்பவம்தான். அவர்கள் தங்களுடைய மகன் அல்லது மகள் தங்களைக் காண வருவார்கள் என்று எதிர்பார்க்கிறார்கள். அந்த நம்பிக்கையில் வாசல் கதவைப் பார்க்கிறார்கள். தாங்கள் மறக்கப்பட்டவர்களாக விட்டோம் என்பது அவர்களை வருத்துகிறது. 'எனது மகன் அல்லது மகள், குடும்பத்தைச் சேர்ந்த வேறு ஒருவர் அல்லது நண்பர்களில் ஒருவர் என்னைப் பார்க்க இன்று வருவார்கள்.' என்று எப்போதும் சொல்லிக் களைத்துப் போவார்கள்." இதுதான் உண்மையான வறுமை. ஒரு முறை சாகுந்தருணத்தில் குப்பை மேட்டில் கிடந்த ஒரு பெண்ணைக் காப்பாற்றி எங்களுடைய மாசற்ற மன்றத்துக்குக் கொண்டு வந்தேன். அந்தப் பெண் திருப்பித் திருப்பிச் சொன்னாள். "எனது மகன் தான் எனக்கு இப்படிச் செய்தவன்." இந்த வசனமே வெளிவந்தது. பசிக்கிறது! நோகிறது! சாகிறேன்! சகிக்க முடியவில்லை! இவ்வாறு ஒரு வார்த்தை அந்தக் கடைசி நேரத்திலும் அவள் வாயில் வரவில்லை. அவள் மகனில் வைத்திருந்த பாசம் மற்றவற்றை நினைக்க இடந்தரவில்லை. நீண்ட நேரம் அவளுடன் கலந்து பேசி மகனை மன்னிக்குமாறு மன்றாடினேன். இதயத்தில் உறைந்த சோகம் கண்ணின் வழியே வெளியில் இறங்கியது. சாகப்போகும் கடைசி வேளையில் "நான் என் மகனை மன்னிக்கிறேன்." என்றாள். இந்த விபரங்கள் அன்னை திரேசாவின் வாயிலிருந்து வந்தவை. எனக்கு உங்களுடைய மிச்ச சொச்சங்கள் வேண்டாம். எங்களுடைய ஏழை மக்களுக்கு உங்களுடைய பரிவும் வேண்டாம். உங்கள் அனுதாபமும் தேவையற்றது. உங்களுடைய அன்பும் கருணையுமே எனக்குத் தேவையென்று அன்னை ஓரிடத்தில் குறிப்பிட்டார்.

அன்பளித்துவிட்டாய் : ஆண்மை தந்துவிட்டாய்
துன்பந் தீர்த்துவிட்டாய்: தொல்லை போக்கிவிட்டாய் :
வானகத்தின் ஒளியைக் கண்டே : மனமகிழ்ச்சி பொங்கி
யானெதற்கும் அஞ்சேனாகி எந்த நாளும் வாழ்வேன்

ஞானம் ஒத்த அம்மா! என்பது பாரதியாரின் காளிப்பாட்டில் காண்பது இந்த வரிகள் அன்னை திரேசாவை முன்னரே நினைந்து அமர கவிஞன் கைகள் தீட்டினவோ?

கங்கை தொடர்ந்து பாயும்..

# மருத்துவப் பொழிவு

## கொஞ்சம் கேளுங்க!

1. நாவல்ப்பழம் சாப்பிட்டு விட்டு அதனுடைய விதையைக் கீழே வீசியெறிய வேண்டாம். அவ்விதையை நன்றாக அரைத்து சாப்பிட்டால் நீரழிவு நோய் தீரும்.
2. தேத்தா மரத்து விதையை வீணாக வீச வேண்டாம். அந்த விதையை அரைத்துக் குடித்தால் மார்புச்சளி தீரும்.
3. வெள்ளைப்பூண்டு, வெற்றிலை, வேப்பிலை, கொன்றம் இலை குருத்து இவையனைத்தையும் எலுமிச்சம் புளியில் அரைத்துப் பூசவும். வட்டக்கடி இல்லாமல் போய்விடும்.
4. குறிஞ்சா இலையை எடுத்து வறுத்து அதனை தூள் செய்து சாப்பிட்டால் இருமலும், நெஞ்சு நோவும் மாறும்.



*ப. நிறஞ்சலா (சோபனா), பாலைப்பொருமாள்கட்டு.*

## இடுப்பு வலியா?

இடுப்புவலி ஒருவகை வாய்வினால் வருகின்றது. இதனைத் தவிர்ப்பதற்காக ஒரு யக் பசுப்பாலுடன் சக்கரையைச் சேர்த்து கொதிக்க வைத்துக் குடித்து வந்தால் இடுப்புவலி பறந்து போகும். அல்லது கஸ்துாரி மஞ்சள், மிளகு, கடுகு, வெள்ளைப்பூடு, சாம்பிராணி என்பனவற்றை அரைத்துக் துாளாக்கி தேங்காய் எண்ணெய்யில் சேர்த்துப் பூசிவந்தால் இடுப்பு வலி அற்றுப் போகும்.

## இருமல் தொல்லையா?

வாரம் இருமுறையாவது தலைக் தேங்காய் எண்ணெய் பூசி நன்றாகத் தலையை ஊற வைத்து வாரம் ஒரு முறையாவது நன்றாக நீராடி வந்தால் இருமல் தணிந்து போகும்.

## காயங்கள் விரைவில் ஆற வேண்டுமா?

துளசி இலையும், கீழ்காய் நெல்லி இலையையும் காயவைத்து அரைத்து துாளாக்கிய சரக்குடன் மிளகு துாளும் சேர்த்துப் பச்சைப் பசுப்பாலுடன் மூன்று சந்தி காலையில் அருந்தி வந்தால் காயங்கள் விரைவில் சுகமாகும்.

*தகவல் : ம. சர்மினி, ஆட்காட்டிவெளி, அடம்பன்*

# உங்களுக்கு தெரியுமா?

## மறையறிவுப் பகுதி இல.24

இந்த மாதத்திற்கான இப்பகுதியின் வினாக்கள் பெப்ரவரி மாதத்து மன்னாவில் இருந்து எடுக்கப்படுகின்றன. இதுவரை அதைத் தூக்கி எறிந்து விட்டிருக்கமாட்டீர்கள்தானே?

பலர் இதிலே தொடர்ச்சியாக முயன்று வருவது பாராட்டிற்குரியது. அதிகமானோர் இதில் பங்குகொண்டு பயனடைய வேண்டும் என்பதே எமது அவா!

### இனி வினாக்களுக்கு வருவோம்

1. அருட்தந்தை வின்னியோசவ் அவர்கள் தனது சிந்தனைத் தொடர் நான்கில் படிப்பில்லாமல், பணம் இல்லாமல் ஏன் கை, கால்கள் இல்லாமல் வாழ்க்கையில் வெற்றி பெற்றவர்கள் உண்டு. ஆனால் இது இல்லாமல் வாழ்க்கையில் வெற்றி பெற்றவர்கள் யாருமில்லை என்று குறிப்பிடுகின்றார்கள். அது என்ன?

2. அவரது சித்தாந்தத்தின்படி தோல்வி என்பது என்ன?

3. "உங்களுடைய உடைகளை அல்ல இதயங்களை கிழித்துக் கொள்ளுங்கள்" இவ்வாக்கியம் வேதாகமத்தில் எங்குள்ளது?

4. "கிறிஸ்துவின் பலியும், நற்கருணைப் பலியும் ஒரே பலியே" இதை புனித யோண் கிறிஸ்சோஸ்தோம் மிக அருமையாகச் சொன்னார். எப்படி?

5. பொதுநிலையினருக்கான இறையியல் ஒரு வருடக்கற்கை நெறி, குருமுதல்வர் அவர்களால் ஞானோதயத்தில் ஆரம்பித்துவைக்கப்பட்டது எப்போது? இதன் பயிற்சி இணைப்பாளர் யார்?

6. வெரித்தாஸ் தமிழ் ஒலிபரப்பு சிறப்புமலர் ஒன்றை அண்மையில் வெளியிட்டது. இதில் மன்னார் மறைமாவட்ட ஆயர் திருமலை மட்டுநகர் ஆயர் இவர்களது ஆசிச் செய்தியும் இடம் பெறுகின்றது இம்மலரின் பெயர் என்ன?

7. சிலாபம் மறைமாவட்டத்தில் அடுத்த ஆயராக (ஆயர் பணியை பெறுவதற்கு உரித்துடையவராக) அருட்பணியாளர் ஒருவரை ஜனவரி 17ம் திகதி திருத்தந்தை நியமித்துள்ளார். அவர் யார்?

8. அந்தோனியார் பிரான்சிஸ்கன் சபையின் உடை அணிந்து 1220ம் ஆண்டு கப்பலேறினார். அவர் மிகவும் ஆனந்தமாக பயணம் செய்வதைக் கண்ட பயணிகள் "நீங்கள் ஏன் எப்போதும் ஆனந்தமாக இருக்கிறீர்கள். ஏதாவது புதிய நாட்டை கண்டுபிடிக்க போகிறீர்களா?" என்று கேட்டதற்கு அந்தோனியார் என்ன பதில் சொன்னார்?

9. "கடவுளைப் போற்றி திருவிருந்துக் கிண்ணத்திலிருந்து பருகுகிறோமோ? அது கிறிஸ்துவின் இரத்தத்தில் பங்கு கொள்ளுதல் அல்லவா? அப்பத்தைப் பிட்டு உண்கிறோமே அது கிறிஸ்துவின் உடலில் பங்கு கொள்ளுதல் அல்லவா?" இது யாருடைய கூற்று யாருக்கு கூறப்பட்டது?

10. தேசிய கத்தோலிக்க எழுத்தாளர் சங்கம் 2004ம் ஆண்டிற்கான இலக்கியப் போட்டிகளை நடாத்தி போட்டிகளில் வெற்றி பெற்றோருக்குப் பரிசில்களை 2004 டிசெம்பர், மாதம் 5ந் திகதி வழங்கியுள்ளது. இவ்விழா பேராயர் ஒஸ்வேல்ட் கோமிஸ் ஆண்டகை தலைமையில் இடம் பெற்றது. இவ்விழா எங்கு நடைபெற்றது?

மாணவர் மறையறிவுப் பகுதி இல. 22 இற்கான கேள்விக்கு 16 பேர் விடையளித்திருந்தனர். அவர்களுள் எல்லாக் கேள்விகளுக்கும் சரியான விடையளித்து பரிசுக்குரியவராக தெரிவு செய்யப்பட்ட அதிஸ்ரசாலி,

**பெ. பிரபாலினி,**
**133 திருநாவற்குளம்,**
**வவுனியா.**

## பாராட்டுக்குரியவர்கள்

1. எம். லிட்வின் தனுசியா, சென். பீற்றர்ஸ் லேன், நிந்தனி, புத்தளம்.
2. தி. ரவிச்சந்திரன், முருங்கன்பிட்டி. முருங்கன்.
3. பெ. பிரசாந்தினி, முருங்கன்பிட்டி, முருங்கன்.
4. க. கிறிஸ்ரோ பொபிர்சாண், 133 திருநாவற்குளம், வவுனியா
5. அ. ஷறோமி, பெரிய முறிப்பு, குஞ்சுக்குளம்.
6. தி. யசோ, முருங்கன் பிட்டி, முருங்கன்.
7. அ. றோகினி, பெரியமுறிப்பு, பெரியகுஞ்சுக்குளம்.
8. தி. கலைவாணி, முருங்கன் பிட்டி, முருங்கன்.
9. மை. லிவேனிக்கா, முருங்கன் பிட்டி, முருங்கன்.
10. ரி.இவோன் கிறிஸ்டினா, அம்மா தோட்டம், கற்பிட்டி.

### *மாணவர் மறையறிவுப் பகுதி இல. 20 இற்கான சரியான விடைகள்*

1. பேராயர் மேதகு மாரியோ செனாரி ஆண்டகை.
2. 25 வயது.
3. I. அன்பிய வாழ்வு, II. குடும்ப வாழ்வு, III. நற்கருணை வாழ்வு
4. நற்கருணை ஆண்டு.
5. பிலிப்பைன்ஸ் நாட்டின் பேராயர்.
6. பங்கேற்கும் திருச்சபையை நோக்கி இலங்கைத் திருச்சபை.
7. இறையாட்சியைக் கட்டியெழுப்புதல்.
8. அன்புச் சமூக வாழ்வு.
9. மைக்கல் கோமஸ் என்பவர்
10. 1949 மாசி மாதம்.


*இப்போட்டி பற்றிய உங்கள் அபிப்பிராயங்களை, கருத்துக்களை, ஆலோசனைகளை எமக்கு எழுதுங்கள். (பதிப்பாசிரியர்)*

# திருத்தந்தையின்

# மன்னிப்பும் மனிதத்துவமும்

**அருட்சகோதரர் கலாநிதி பப்ரிஸ்ற் குருஸ் எழுதுகிறார்...**

திருத்தந்தை அறையில் நுழைந்ததும் அவரைச் சுட்டுக் கொல்ல முயன்ற முகமது அலி அச்கா முழந்தாள்படியிட்டு, கண்ணீர் சிந்தி, அவரின் பரிசுத்த கரங்களை முத்தமிட்டான். திருத்தந்தை அவனைத் தூக்கி தன்னுடன் அணைத்துக்கொண்டார். அவன் அடிவயிற்றில் செலுத்திய குண்டுக்குப் பதிலாக, வெள்ளியினால் செய்த ஒரு செபமாலையை அன்பளிப்புச் செய்தார். அவனுடன் பல நிமிடங்கள் உரையாடினார்.....!




1981ம் ஆண்டு நான் எமது டிலாசால் சபை ஆரம்பித்து 300ம் ஆண்டு நிறைவு நிகழ்வில் கலந்துகொள்வதற்காக இத்தாலி நாட்டிற்குச் சென்றிருந்தேன். காலஞ்சென்ற திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பர் உரோமாபுரியிலுள்ள எமது டிலாசால் தலைமை இல்லத்திற்கு வைகாசி மாதம் 15ம் திகதி வருகை தந்து சிறப்பிப்பதாக வாக்களித்திருந்தார். நாங்கள் எமது தலைமை இல்லத்தைச் சுத்தப்படுத்தி திருத்தந்தையை வரவேற்கும் வைபவத்திற்காக ஆயத்தப்படுத்திக்கொண்டிருந்தோம்.

ஆனால் குறித்த திகதிக்கு இரண்டு நாட்களுக்கு முன்னர், வைகாசி 13ம் திகதி 1981ம் ஆண்டு திருத்தந்தை இரண்டாம் அருளப்பர் சின்னப்பர் துருக்கி நாட்டைச் சேர்ந்த முகமது அலி அச்கா என்ற வாலிபனால் சுடப்பட்டார் என்ற செய்தியைக் கேட்டுத் திடுக்கிட்டோம். எங்களுடைய ஆயத்த வேலைகளையெல்லாம் கைவிட்டு வத்திக்கானுக்கு விரைந்து சென்றோம். அங்கே புனித பேதுருவானவரின் சதுக்கத்தில் பல்லாயிரக்கணக்கான மக்கள் திரண்டு முழந்தாள்படியிட்டு திருத்தந்தையின் சரீர சுகத்திற்காக செபித்துக்கொண்டிருந்தார்கள். திருத்தந்தை சூடுபட்ட இடத்தில் மலைபோல மலர்கள் குவிக்கப்பட்டிருந்தன. நாங்களும் முழந்தாள் படியிட்டு செபத்தில் பங்குபற்றினோம்.


சத்திரசிகிச்சை ஐந்து மணித்தியாலங்கள் நீடித்தது. ஏனெனில் குண்டு, திருத்தந்தையின் அடிவயிற்றில் சின்னாபின்னமாக சிதறியிருந்தது. சத்திரசிகிச்சை முடிந்து ஒரு வாரத்தின்பின், திருத்தந்தையின் தாழ்மையானதும், மனதை உருக்குவதுமான வசனம் உலக மக்களையே அதிர்ச்சிக்குள்ளாக்கி விட்டது. "முகமது அலி அச்கா, நீ என் சகோதரன், நீ அறியாமல் செய்துவிட்டாய். யேசுவின் புனித நாமத்தினால் நான் உன்னை மனப்பூர்வமாக மன்னிக்கிறேன்" சிலுவையில் தொங்கி அவஸ்தைப்பட்டுக்கொண்டிருந்த எங்கள் இரட்சகர் இயேசுவின் பரிசுத்தமான வார்த்தைகளையொத்த இந்த வார்த்தைகள் பாரெங்கும் ஒலித்தன.


கவிஞர் கண்ணதாசன் கூறியதுபோல, "மன்னிக்கத் தெரிந்த மனிதனின் உள்ளம் மாணிக்கக் கோயிலடா". அது மட்டுமல்ல திருத்தந்தை நன்றாகக் குணமாகி இருந்தபொழுது, தன்னை சுட்டுக்கொல்ல எத்தனித்த முகமது அலி அச்காவை சிறைச்சாலையில் சந்திக்கச் சென்றார்!

உலக சரித்திரத்திலேயே பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய சம்பவம் இது. திருத்தந்தை தன்னைச் சந்திக்க வருகிறார் என்ற செய்தியைக் கேட்ட முகமது அலி அச்கா ஆச்சரியப்பட்டான். "நான் சுட்டுக்கொல்ல முயன்ற அந்தப் பெரியார் என்னை நிபந்தனையின்றி மனப்பூர்வமாக மன்னித்துவிட்டார். அதற்கு அத்தாட்சியாக அவர் என்னைச் சந்திக்க வருகின்றார். எவ்வளவு உயர்ந்த, பண்புள்ள மனிதப்பிறவி இவர்!"

திருத்தந்தை அறையில் நுழைந்ததும் அவரைச் சுட்டுக்கொல்ல முயன்ற முகமது அலி அச்கா முழந்தாள்படியிட்டு, கண்ணீர் சிந்தி, அவரின் பரிசுத்த கரங்களை முத்தமிட்டான். திருத்தந்தை அவனைத் தூக்கி தன்னுடன் அணைத்துக்கொண்டார். அவன் அடிவயிற்றில் செலுத்திய குண்டுக்குப் பதிலாக, வெள்ளியினால் செய்த ஒரு செபமாலையை அன்பளிபுச் செய்தார். அவனுடன் பல நிமிடங்கள் உரையாடினார். நல்லாயன் வழிதவறிய ஆட்டுக்குட்டியை தன் மந்தையில் திரும்பவும் சேர்த்துக்கொண்டார்.


இந்த அபூர்வமான சம்பவம் நடந்து 24 ஆண்டுகள் உருண்டோடிவிட்டன. ஆனால் அதைப்பற்றிய செய்தியை இன்னும் பல பத்திரிகைகளிலும், புத்தகங்களிலும் நாம் படிக்கின்றோம். விசேடவிதமாக மனோதத்துவ ஆசிரியர்களும் நிபுணர்களும் இந்த மன்னிப்பின் மகிமையைப்பற்றி போற்றிப் புகழ்ந்து விபரித்துள்ளார்கள். திருத்தந்தையைப் *உலகிலேயே மிகச்சிறந்த மனிதன்* எனப் பாராட்டியிருக்கின்றார்கள். ஏனெனில் மனிதத்துவத்தின் உச்ச நிலை, நிபந்தனையற்ற மன்னிப்பு ஆகும். மனதில் சாந்தி வேண்டுமா? வாழ்க்கையில் சந்தோஷம் வேண்டுமா? உங்கள் பகைவர்களை நிபந்தனையின்றி மனப்பூர்வமாக மன்னியுங்கள். உங்கள் வாழ்க்கையில் மறுமலர்ச்சி உண்டாகும்.






1995ம் ஆண்டு ரைம் (TIME) பத்திரிகை திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பரை *"உலகிலேயே மிகச் சிறந்த மனிதர்" **(Man of the Year)*** எனப் பிரகடனப்படுத்தியது. இதற்குப் பல காரணங்கள் உண்டு. அதில் மிகவும் சிறந்த காரணங்களில் இரண்டு முக்கிய காரணங்கள்.

1. அவர் ஒரு நீதிமான்.
2. மனப்பூர்வமாக மன்னிக்கத் தெரிந்தவர்.



அருட்சகோதரர் பப்ரிஸ்ற் குருஸ் திருத்தந்தையைச் சந்தித்தபோது.

2004ம் ஆண்டு நியூஸ் வீக் (NEWS WEEK) (4ம் திகதி ஐப்பசி மாதம்) என்ற பிரபல பத்திரிகையில், மனோதத்துவ நிபுணர்கள் திருத்தந்தையின் நிபந்தனையற்ற மன்னிப்பைப்பற்றி மனோதத்துவ ரீதியில் மிகச் சிறந்த ஆழமான எண்ணங்களையும் கருத்துக்களையும் தெரிவித்து, பாப்பரசரைப் புகழ்ந்து பாடி மனிதகுலத்திற்கே ஒரு எடுத்துக்காட்டாக வைத்துள்ளார்கள். சுருக்கமாகக் கூறப்போனால், நிபந்தனையின்றி மன்னிப்பளிப்பவன் அதி உன்னத கிறிஸ்தவன் மட்டுமல்ல, சிறந்த மனிதனும்கூட.

## திருத்தந்தையின் தாழ்ச்சி

*இரண்டாம் உலக யுத்த காலத்தில் போலந்து நாட்டில். ஜேர்மனிய ஹிட்லரின் படையினரால் படுகொலை செய்யப்பட்ட பல்லாயிரக்கணக்கான யூத மக்களின் உடல்கள் புதைக்கப்பட்ட ஒஸ்விற்ஸ் சவக்காலையில் நிறுவப்பட்டிருக்கும் சிலுவையை அவ்விடத்தை விட்டு அகற்றும்படி பரிசுத்ததந்தையை போலந்தின் யூத தலைமைக்குரு மிஸ்ரர் போப்* **Mr. Pope** *என விழித்து அதட்டி. கடுமையான தொனியில் கூறுகிறார். ஆயினும் அவரின் கூற்றை பொறுமையுடன் செவிமடுக்கிறார் நமது பரிசுத்த தந்தை இரண்டாம் அருள் சின்னப்பர்.*

*இந்நிகழ்வு பரிசுத்த தந்தையின் போலந்து விஜயத்தின்போது இடம்பெற்றது. அந்நிகழ்வையே அருகில் உள்ள படத்தில் பார்க்கிறீர்கள். அவரின் தாழ்ச்சி உலகுக்கு ஓர் எடுத்துக்காட்டு*



# பெரியப்பா பதில்கள்





கே. புதிய திருத்தந்தையை பழமைவாதி எனச் சாடுகிறார்களே..?

*- எம். மிக்கேல், அடம்பன்.*

ப. எது பழமைவாதம்? கருவில் வளரும் குழந்தைகளை அழிக்க அனுமதி மறுப்பது பழமைவாதமா? ஆணும் ஆணும், பெண்ணும் பெண்ணும் திருமணம் செய்வதை அனுமதிக்காதது பழமை வாதமா? குருக்கள் திருமணம் செய்வதை ஏற்றுக்கொள்ளாதது பழமை வாதமா?

..............................

கே. பள்ளிக் கூடத்தில் பிள்ளைகளுக்கு அடிக்கலாமா?

*- சி. செல்வராசன், செட்டிகுளம்.*

ப. அடிக்கக்கூடாது என்பது அரசாங்கச் சட்டம். வெளிநாடுகளில் மாட்டுக்கு அடித்தாலே பெரிய சர்ச்சை கிளம்பி விடுகிறது. மனுசனுக்கு அடிப்பது தண்டனைக்குரிய குற்றம்.

..............................

கே. உங்களுக்குப் பிடித்த வாசகர் யார்?

*- மதனக் குமார், மன்னார்.*

ப. ஓசியில் மன்னா படிக்காமல் காசு கொடுத்து வாங்கிப் படிப்பவர்கள்.

கே. மௌனம் பலமா? பலவீனமா?

*- சௌந்தரநாயகம், திருகோணமலை*

ப. பலம்! மௌனமாக இருந்த கடல், சுனாமி பேரலையாக எழுந்தபோது அதன் பலம் தெரிந்ததல்லவா?

..............................

கே. குண்டக்க மண்டக்க பதில் சொல்லும் உம்மை நாடு கடத்தலாமா?

*- மதிமலர், பேசாலை.*

ப. மன்னாரில் வெயில்! வெக்கை தாங்க முடியவில்லை! ஏதாவது குளிர் நாட்டுக்கு நாடு கடத்தினால் மிகவும் சந்தோசப்படுவேன்!

..............................

கே. காஞ்சி சங்கராச்சாரியார்கள் கைது பற்றி?

*- றமணன், வவுனியா.*

ப. இடைவேளையில் விமர்சனம் செய்வது என் வழக்கமல்ல.

..............................

கே. உங்களுக்கு வாய்ப்பான கேள்விகளையே நீங்கள் தெரிவு செய்வதாகத் தெரிகிறதே...?

*- கார்மேகன், மட்டக்களப்பு.*

ப. பரீட்சையில் தெரிவுக்குரிய வினாக்கள் இருந்தால் - பதில் தெரிந்த வினாக்களைத் தெரிந்தெடுத்து எழுதுவதில் எந்தத் தப்பும் இல்லையே..!

க. உலகத்தில் எது வளர்கிறது? எது குறைகிறது?

*- சு. லீலாவதி, நீர்கொழும்பு*

ப. நாகரீகம் வளர்கிறது. உடை குறைகிறது.

..............................

கே. இன்றைய சினிமா இயக்குனர்களால் பாடலே இல்லாமல் படம் எடுக்க முடியுமா?

*- புனிதக் குமார், புளியங்குளம், வவுனியா*

ப. கதையே இல்லாமல் படம் எடுக்கும் நம் இயக்குனர்களைப் பற்றி என்ன கேள்வி கேட்டுவிட்டீர்கள்........!



கே. என்னுடைய நூறாவது கேள்விக்கேனும் பதில் தருவேன் என்ற சிறு வாக்குறுதியையாவது இப்போது தருவீர்களா?

*முகுந்தன், முருங்கன்.*

ப. மிகவும் வறுமையில் உழன்று, தன் முயற்சியால் படிப்படியாக முன்னேறிப் பெரிய தொழிலதிபரான ஒருவர் மரணப்படுக்கையில் கிடந்தார். கடைசியில் சில அறிவுரைகள் சொல்லிவிட்டுப் போகலாம் என்று, தன் மகனை அருகில் அழைத்தார்.

"நான் சொல்வதைக் கேள் மகனே! என் வெற்றிக்குக் காரணம் இரண்டு அடிப்படைகள்: நேர்மையும் ஞானமும்தான் அவை. நேர்மையென்றால் என்ன தெரியுமா? நம் வியாபாரச் சரக்குகளை இன்ன தேதியில் தருவதாக வாக்களித்திருந்தால், என்ன கஷ்ட நஷ்டங்கள் ஏற்பட்டாலும், அவற்றைக் கொடுத்தே தீர வேண்டும் - அதுதான் நேர்மை! என்றார்.

"நான் நினைவில் வைத்துக் கொள்ள முயல்கிறேன், அப்பா. சரி, ஞானம் என்பது என்ன? சொல்லுங்கள்" என்று கேட்டான் மகன்.

"அது மிகவும் சாதாரணமானது, மகனே.... அப்படியான எந்த வாக்குறுதியையும் யாருக்கும் கொடுத்துவிடாதே!" என்றார் தந்தை!.

கே. கச்சேரியில் பாடுபவர்கள் கண்ணை மூடியபடி பாடுவது ஏன்?

*- சங்கீதா, நானாட்டான்.*

ப. அரங்கு நிறைந்து இருக்கிற மாதிரி கற்பனை செய்து பார்க்கத்தான்.

கே. வீட்டில் ஆண் கை ஓங்கியிருக்க வேண்டுமா? பெண் கை ஓங்கியிருக்க வேண்டுமா?

*செல்வன், மன்னார்.*

ப. யார் கையும் ஓங்கியிருக்க வேண்டாம். யார் கையும் வீங்கியிருக்கவும் வேண்டாம். இருவர் கைகளும் கூட்டுறவுக் கைகள்போல இணைந்திருந்தாலே போதும்.

# நீங்காத நினைவுகள்

## 3ம் ஆண்டு நினைவு

மலர்வு 27 - 10 - 1953



உதிர்வு 21 - 05 - 2002

### செ. அந்தோனிதாசன் (தலைமன்னார் மேற்கு)

அன்பின் இருப்பிடமாகவும் பாசத்தின் ஒளியாகவும் அரவணைப்பின் அப்பாவாகவும் எம்மோடு இருந்துவிட்டு பிரிந்து மூன்று ஆண்டு சென்றதையா உம் சகோதரங்கள் கடல் கடந்து உம்மை பார்ப்பதற்காக ஓடோடி வந்தார்கள்! உம் முகத்தை பார்க்காது ஏங்கி நிற்கின்றார்கள்! அப்பாவே உம் நினைவு எம்மை விட்டு விலகாதையா! உங்கள் ஆன்ம சாந்திக்காக இறைவனிடம் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்:

அன்பு மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், அண்ணன், தங்கை, உற்றார் உறவினர்.

## 3ம் ஆண்டு நினைவு

மலர்வு 12 - 06 - 1933



உதிர்வு 30 - 04 - 2002

## 14ம் ஆண்டு நினைவு

மலர்வு 25 - 11 - 1974



உதிர்வு 22 - 03 - 1991

### திருமதி. செபஸ்ரியம்மா மரியநாயகம் (கண்ணா) (முருங்கன்)

மரணமது முடிவில்லை மறுவாழ்வில் தொடக்கமாகும். அந்த வழியிலே அன்பும் பொறுமையும் கருணையும் கொண்டு வாழ்ந்த எங்கள் அம்மா.... தம்பி... அம்மா நீங்கள் மரித்துவிடவில்லை. மாபரன் தாழ்களில் மலர்ந்து விட்டீர்கள். ஆண்டுகள் ஆறாய்ப் பாய்ந்ததம்மா... மாறாத மறையாத உம் அன்பு முகங்கள்.... உள்ளங்கள் துடிக்குதம்மா உறவுகள் அழுகிறாரம்மா மறக்க முடியாத உம் அன்பு மரணத்தால் அழிந்திடுமா? எங்களைப் பிரிந்து ஆண்டுகள் கடந்தன. எங்களுக்காக நீங்கள் வாழ்ந்த வாழ்க்கை மறையவில்லை. நீங்கள் செய்த தியாகங்கள் அளப்பரியன. அவை எங்கள் நெஞ்சை விட்டு என்றுமே நீங்காதவை!

*உங்கள் நினைவில் வாடும் அன்புக் கணவர், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர்கள்.*

## பெரியப்பாவுக்கு எங்கள் பதில்

வாசகர்களே, நீங்கள் கேட்கும் கேள்விகளுக்கு பெரியப்பா பதில் தருகிறார். அதேபோன்று பெரியப்பா கேட்கும் கேள்விகளுக்கு நீங்களும் பதில் அளியுங்கள்....? மூன்று தரமான குறும்பான, யதார்த்தமான பதில்கள் பிரசுரிக்கப்படும்.

பதில்கள் 15.6.2005க்கு முன்னர் எமக்கு அனுப்பி வைக்கப்படவேண்டும்.

*இம்மாதக் கேள்வி :*

பெண் புத்தி பின் புத்தி என்கிறார்களே... ஏன்?

உங்கள் விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி

*பெரியப்பாவுக்கு எங்கள் பதில்,*
*மன்னா பத்திரிகைப் பணியகம்,*
*மறைக்கல்வி நிலையம், மன்னார்.*

மன்னா அபிமானிகளே,

இறந்துபோன உங்கள் அன்புக்குரியவர்களின் நினைவுகள், யூபிலி மற்றும் பிறந்தநாள் நினைவுகள் போன்றவற்றை மன்னாவில் பிரசுரிக்க வேண்டுமாயின் அந்நினைவுகள் எந்த மாதத்தில் இடம்பெற வேண்டும் என விரும்புகிறீர்களோ அந்த மாதத்திற்கு முதல் மாதம் 10ம் திகதிக்கு முன்னர் எமக்கு அனுப்பி வையுங்கள். இத்திகதிக்கு பின்னர் வரும் எந்த விடயங்களும் அக்குறிப்பிட்ட மாதத்தில் பிரசுரிக்கப்படமாட்டாது என்பதை தெளிவாக அறியத்தருகின்றோம்.- பதிப்பாசிரியர்

## 1ம் ஆண்டு நினைவு

மலர்வு 27 - 05 - 1905



உதிர்வு 20 - 05 - 2004


### ஜே. வேதநாயகம் பெல்டானோ (J.P.U.M, M.B.E - பேசாலை)

என் ஆன்மா எந்நாளுமே ஆண்டவரை ஏத்திப் போற்றுகின்றது என் மீட்பரையே நினைந்து நினைந்து எந்தன் நெஞ்சம் மகிழுகின்றது. ஆண்டவனின் பக்தனாய் அமலமரித் தாசனாய் ஆண்டுகள் நூறு அருமையாய் வாழ்ந்த எம் அன்பு நிறை அப்பாவே உங்கள் அன்பும் அரவணைப்பும் ஆன்றபொழு தாற்றிய அனைத்து நன்மைகளும் நீக்கமற எம் நெஞ்சமதில் நின்று நிழலாடுதையா நீடுதுயர் நம்பிரிவு நிமலனே நித்தியசாந்தி இவர்க்கருள்!

*இவண் பிரிவால் துயருறும் பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள், உற்றார் உறவினர்.*

## 9ம் ஆண்டு நினைவு

மலர்வு 28 - 04 - 1931



உதிர்வு 20 - 03 - 1996

### க. பிரான்சிஸ்பிள்ளை

"ஆண்டவர் எத்துணை இனியவர் என்று சுவைத்துப் பாருங்கள்"

அன்பான அப்பா, எங்களை பாசமுடன் அரவணைத்து வளர்த்த அன்புறவே, ஆண்டவன் பாதமலர் சென்றடைந்து ஆண்டுகள் எட்டு ஆயிடினும், நீங்கள் விட்டுச் சென்ற நல் நினைவுகள் எமது உள்ளங்களில் என்றென்றும் நிலைத்து நிற்கும். இவ்வுலகில் வாழும் இன் நன்நாளில் மாந்தர் நாம் யாவரும் மானிடத்தை மதித்து அன்புறவில் வாழ்ந்திட மாபரனை வேண்டிடுங்கள்!

*மகன் சேகர் அவுஸ்பக், யோர்மனி*

## 20ம் ஆண்டு நினைவு

மலர்வு 04 - 04 - 1938



உதிர்வு 17 - 05 - 1985

### யோசப் ஏணஸ்ட் - ராஜகோன் (வங்காலை - மன்னார்)

"சீவியத்தில் உம்மை நேசித்தோம் மரணத்திலும் மறவோம்"

இற[illegible] இருபது வருடம் கடந்தும் எம் [illegible]னைவு மற்றும் உணர்வை விட்டகலாத எம் தந்தையே! மிகுந்த துயருடன் வருந்துகின்றோம், வாழ் நாளெல்லாம் உருகுகின்றோம்! வற்றாத உம் அன்பை நினைக் கின்றோம். ஆண்டவன் அடியில் அமைதிகொள்ளுங்கள்

*மனைவி - பிள்ளைகள்.*

## 2ம் ஆண்டு நினைவு

மலர்வு 14 - 10 - 1982



உதிர்வு 14 - 02 - 2003

### ஜெ. யூட் நிஷாந்தினி (நொச்சிக்குளம் - உயிலங்குளம்)

அன்பின் மகளே, பாசமிகு சகோதரியே தாங்க முடியவில்லை அம்மா உன் பிரிவுச் சுமையை! கன்னத்துள் சிரிப்பைத் தேக்கி வைத்து எந்நேரமும் அனைவரையும் பூரிக்க் வைத்த நீ சிட்டுக்குருவி சிறகடித்து பறப்பதுபோல் பறந்தாய் அம்மா! உனது மரணச் செய்தி கேட்டு எத்தனை உள்ளம் அம்மா கண்ணீர்விட்டது! எத்தனை யுகங்கள் சென்றாலும் உனது சிரித்த முகம் எம்மை விட்டு அகலாது அம்மா! மண்ணிலே நீ மறைந்தாலும் அம்மா எங்கள் கண்களிலே மறையவில்லை உன் உருவம்!

*இவரின் பிரிவால் துயருறும் அன்பு அம்மா, அப்பா, தங்கை, தம்பிமார், உற்றார், உறவினர்கள்.*

# விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி - இல. 37
## லேவி 14 - 27

உங்கள் விடைகளை 10. 06. 2005க்கு முன் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வைக்கவும். சரியான விடையை எழுதிய மூன்று அதிஸ்ரசாலிகளுக்கு பரிசுத்தொகைகள் அனுப்பி வைக்கப்படும். பாராட்டுப்பெறும் 50 பேருடைய பெயர் விபரங்கள் மன்னாவில் பிரசுரிக்கப்படும். (பதிப்பாசிரியர்)

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | | | | | | | | | | 02 |
| 03 | | | | | | * | | | 04 | |
| | | 05 | | | | | | | 06 | |
| | | 07 | | | | | 08 | | | |
| | | * | * | | | | | 09 | | |
| | 10 | | | | | | * | | | |
| | | | | | | | 11 | | | |
| | | | * | | | | 12 | | | 13 |
| | | | 14 | | | | | | | |
| | * | 15 | | | | | * | | | |
| 16 | | | | | | | | 17 | 18 | |

### இடமிருந்து வலம்

1. ஏனெனில் நான் உங்கள் கடவுள்: என் கட்டளைகளைக் ---------------------- அவற்றின்படி நடவுங்கள்.
3. அதைத் ----------------------யாகக் கூடி எக்காளம் ஊதிக்கொண்டாடுங்கள்.
5. அரணற்ற ---------------------- வீடுகளோ நாட்டின் வயல் வெளிக்கு ஒப்பானவை.
7. அல்லது ------------------ ஏற்படும்போது அவர்கள் தம்மைத்தாமே மீட்கட்டும்.
10. பாவக் கழுவாய் ---------------------- அந்தநாளில் உங்கள் நாடெங்கும் எக்காளம் முழங்கச் செய்யுங்கள்.
14. யூபிலி ஆண்டில் தன் வயலை நேர்ச்சை செய்தால் நீ மதிக்கிறபடியே அதன் ---------------- --------------- இருக்கும்.
15. நான் தொழுகை மேடுகளையும் ---------------- ------------------.ங்களையும் தகர்த்து, உங்கள் சடலங்களை உயிரற்ற தெய்வச்சிலைகள்மீது விழச்செய்வேன்.
16. வெள்ளாட்டுக் கிடாய்கள் ---------------------------- சந்திப்புக் கூடார வாயிலில் ஆண்டவர் திருமுன் நிறுத்த வேண்டும்.

விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல. 36ற்கான முடிவுகளை 2005ம் ஆண்டு ஜூன் மாத மன்னாவில் எதிர்பாருங்கள்.

### மேலிருந்து கீழ்

2. குரு அந்தத் தானியக் கதிர்க்கட்டினை ஓய்வு நாளுக்குப் பின்வரும் அடுத்த நாளில் ஆண்டவரின் ------------------------ ஆரத்திப் பலியாக்குவார்.
3. சந்திப்புக் கூடாரத்தில் உடன்படிக்கைத் --------------------- வெளியே மாலை முதல் காலைவரை எப்போதும் அது ஆண்டவ[illegible]கு முன் எரிந்துகொண்டிருக்க வேண்டும்.
6. ஆறாம் ஆண்டு நிலம் மூன்ற[illegible]க்குரிய -------------------------க் கொடுக்குமாறு என் ஆசியை அனுப்புவேன்.
9. நிலமும் பலனைத் தருவதனால் ----------------- உண்டு. பாதுகாப்புடன் வாழ்வீர்கள்.
10. உங்களுள் ஒருவனுக்கு --------------------------விற்கவோ அவனிடத்தில் வாங்கவோ செய்யும்பொழுது ஒருவரை ஒருவர் ஏமாற்றாதிருங்கள்.
11. உங்கள் நாடு பாழ்நிலமும் உங்கள் --------------------- பாலைநிலமும் ஆகும்
13. இது அவர்களுக்கு என்றுமுள ----------------------- ஆகும்.

### வலமிருந்து இடம்

2. இஸ்ராயேல் மக்களிடையே நான் தூயவராகக் கருதப்படுமாறு என் ------------- ------------------- இழிவுபடுத்தாதிருங்கள்.
4. இது ஆண்டவருக்கு உகந்த நறுமணமிக்க ------------------------ப் பலியாக இருக்கும். (2வது எழுத்து 1 வது எழுத்துக்கு முன்னே நிற்கிறது)
6. பலனைப் பயன்படுத்தும் ஆண்டுகள் எண்ணிக்கை மிகுந்திருந்தால் -------------- ------------------ உயர்த்த வேண்டும்.
8. உன் சகோதரர் ----------------------------ப் பட்டு இளைத்துப்போனால் அவர்களுக்கு உதவு.
9. மீட்க மீட்பன் இல்லாதவனுக்கு பின்னர் மீட்க வாய்ப்பும் ---------------------- ஏற்பட்டால் கீழ்க்கண்டவாறு அவன் மீட்பானாக.
11. ஆண்டவருக்கு -----------------------------ப் பலி செலுத்தினால் அதை மனமுவந்து செய்யுங்கள்.
12. என் கட்டளைகளை ஏற்காததாலும், நியமங்களை வெறுத்ததாலும் தங்கள் தங்கள் குற்றங்களுக்கு அவர்கள் ---------------------------- தேடுவர்.
17. உனக்கு அடுத்து வாழ்வோர்க்கு நேர்மையுடன் நீதி -------------------------. (4வது எழுத்து 1 வது எழுத்துக்கு முன்னே நிற்கிறது)

### கீழிருந்து மேல்

9. ------------------------- பயிரிடாமலும் திராட்சைக் கொடிகளைக் கிளை நறுக்காமலும் இருங்கள்.
10. அயலாருக்கும், நாட்டினருக்கும் ஒரே விதமான ------------------- வழங்க வேண்டும்.
13. ---------------------------- மரங்கள் தங்கள் கனிகளைத் தரும்.
15. ஏனெனில் உங்கள் கடவுளும் ஆண்டவருமாகிய நான் -----------------------.
16. ஏனெனில் இரக்கத்தின் -------------------------- மேல் மேகத்தில் நான் தோன்றுவேன்.
17. உங்கள் நாட்டில் நீங்கள் பயிரிட்டதை அறுவடை செய்யும்போது --------------- ------------------ ஓரக் கதிரை அறுக்க வேண்டாம். (2வது எழுத்து 4 வதாக உள்ளது)
18. உங்கள் ஆடு மாடுகளை அழித்து உங்களைக் ------------------ போகச் செய்யும்.

# விவிலியகுறுக்கெழுத்துப் போட்டி இல. 35ல்

**சரியான விடைகளை அனுப்பியவர்களில்**

## பரிசு பெறும் மூன்று அதிஸ்ரசாலிகள்

*முதலாம் பரிசு*
எம். செல்வநாயகம்,
திருக்குடும்ப கன்னியர்மடம்,
ஊர்காவற்துறை.

*இரண்டாம் பரிசு.*
ஜெ. மஞ்சு,
B 4, மடுக்கோவில்,
மடு.

*மூன்றாம் பரிசு*
ராணி அரசரத்தினம்,
தபால் கந்தோர் வீதி,
மன்னார்.

விடைகளை எழுதி அனுப்பியவர்கள் 87 பேர்.
சரியான விடைகளை எழுதியோர் 85 பேர்.

**விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல. 35ல் சரியான விடைகளை அனுப்பியவர்களில்**

## பாராட்டுப் பெறும் 50 அதிஸ்ரசாலிகள்

1. திருமதி. பற்றீசியா சில்வெஸ்ரர், பிரான்ஸ்.
2. ஜெ. றேபனா, அந்தோனியார் புரம், இலுப்பைக்கடவை.
3. ச. சுவர்ணியா, சிறுக்கண்டல், முருங்கன்.
4. புஸ்பம், வாழ்க்கைப்பெற்றான் கண்டல், அளவக்கை.
5. நவரட்ணம், ஜெகப்பிரியன், புதுக்கமம், உயிலங்குளம்.
6. யோ. லூர்து தேவி, தலைமன்னார் கிராமம், தலைமன்னார்.
7. எல். சுபாசினி சோசை, தோமஸ்புரி, வங்காலை.
8. ஏ. நிரோஜன் லெம்பேட், இல. 37, பெ.ப.வி,, மடுக்கோயில்.
9. நோ. தயாளினி றோச், ஆண்டு 8ஏ, லூசியா ம.வி, பள்ளிமுனை.
10. திருமதி. வசந்தா தோமஸ், செங்குத்தர் வீதி, ஆரயம்பதி - 2.
11. ம. சாள்ஸ் அன்ரனி, சூரியகட்டைக்காடு, நானாட்டான்.
12. யோ. அருள்தாஸ், ஆயுள்வேத மத்திய மருந்தகம், வவுனியா.
13. திருமதி. யோசேப்பின் எட்வேட் கூஞ்ஞ, 2ம் வட்டாரம், வங்காலை
14. திருமதி. பெனிற்றா யோசவ் அன்ரன், சில்லாலை, பண்டத்தரிப்பு.
15. செ. ஜோசப் சுஜந்தன் துரம், மரியாள் வீதி, தாழ்வுபாடு.
16. திருமதி. எட்வின் மரியான், சுவிஸ்.
17. ஆ. பேள்சினி, வெளிக்குளம், வவுனியா.
18. ரி. சகாயசரிதா, அந்தோனியார் புரம், இலுப்பைக்கடவை.
19. எஸ். கிளான்சி, தலைமன்னார் பியர், தலைமன்னார்.
20. ம. ஆன் அன்ரனிற்றா நிலானி, உபதபாலகம்,வட்டக்கண்டல்.
21. ஜெ. நித்தியா, நொச்சிக்குளம், உயிலங்குளம்.
22. லீ. டெய்சி, செபஸ்ரியார் கோவில் வீதி, பெற்றா, மன்னார்.
23. திருமதி. பி. பர்வின் நிரூஷியா குரூஸ், பேசாலை.
24. பி. சுகாந்தினி, சென் மேரிஸ் வீதி, அடம்பன்.
25. ஆர். றெபூஜா துளசி, அடம்பொன்தாழ்வு, வட்டக்கண்டல்.
26. ஜீவரெட்ணம் யசிந்தா, 6ம் வட்டாரம், விடத்தல்தீவு.
27. அ. நிறோஜினி, வாழ்க்கைப்பெற்றான்கண்டல், அளவக்கை.
28. எ. மொணிக்கா குரூஸ், எமில்வீதி, தாழ்வுபாடு.
29. இ. குயின்சிஸ்ரெலா, அடம்பொன்தாழ்வு, வட்டக்கண்டல்.
30. ஆர். பிலோமினா, அடம்பொன்தாழ்வு, வட்டக்கண்டல்.
31. மி. ஆன் சுஷாந்தினி, தி.கு.க. மடம், இறம்பைக்குளம்.
32. இ. ஆன்டிலானி, இல. 107, பெரியபண்டிவிரிச்சான், மடு.
33. திருமதி. பிலிப் பெர்ணடேற், முருங்கன் பிட்டி, முருங்கன்.
34. இ. அன்ரன் டினேஸ், இல.107, பெரியபண்டிவிரிச்சான், மடு.
35. ஆர். செல்வ லக்ஷன், டிலாசால் இல்லம், மன்னார்.
36. இ. பிறேமி கொண்ஷலா, இறம்பைக்குளம், வவுனியா.
37. எம். நிரோஜன், பள்ளிவாசல் வீதி, கீரி, மன்னார்.
38. ச. ஜெனிஸ்ரன், அளவக்கை, முருங்கன்.
39. ச. லின்ரா, கீளியன் குடியிருப்பு, தலைமன்னார்.
40. திருமதி. கரன்மாலா, கொவ்வங்குளம், நானாட்டான்.
41. திருமதி. ஜோ. இ. மரியரட்ணம், 9/32, பூங்காவீதி, வவுனியா.
42. பி. காமலிற்றா, மாவிலங்கேணி, முருங்கன்.
43. பி. ஜெமிஸ்ரன், சிறிய குருமடம். மன்னார்.
44. அ. மேரிதிரேசா, மாவிலங்கேணி, முருங்கன்.
45. எஸ். பெனிற்றா, மறைப்பணியாளர், விடத்தல்தீவு.
46. எஸ்.எஸ். காஜனா, ஆலங்குளம், வட்டக்கண்டல்.
47. லா. கிறேஸ் ஜொஸ்பின், வாரிக்குட்டியூர், வவுனியா.
48. ம. சாலினி, சூரியகட்டைக்காடு, நானாட்டான்.
49. லா. எலிசபெத், யூனிட் 5, (29), வாரிக்குட்டியூர், வவுனியா
50. மு. தனமோகன். நெடுங்கண்டல், அடம்பன்.

# 1வது பிறந்தநாள் வாழ்த்து




செல்வி.
ஆன் பிரின்சி
பெனாண்டோ




மன்னார் முத்தரிப்புத்துறையைச் சேர்ந்த தயாபரன், சித்திரா தம்பதிகளின் செல்வப்புதல்வி ஆன் பிறின்சி (ஜெனு) தனது முதலாவது பிறந்த நாளை எதிர்வரும் 05.05.2005 அன்று முத்தரிப்புத்துறையில் உள்ள தமது இல்லத்தில் வெகு விமர்சையாக கொண்டாடுகின்றார். இவரை பாசமிகு அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, அம்மையா, அம்மம்மா, தொட்டப்பா, தொட்டம்மா, சித்தப்பாமார், சித்திமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், மாமாமார், மாமிமார், மச்சான்மார், மச்சாள்மார், பூட்டையா, பூட்டியாச்சி, பண்டிவிரிச்சானைச் சேர்ந்த பூட்டியாச்சி, குணம் அப்பையா, ராசநாயகம் அப்பையா குடும்பத்தினர், மற்றும் உற்றார் உறவினர், நண்பர்கள், அனைவரும் செல்வி ஆன் பிரின்சியை பல்கலையும் கற்று சீரோடும் சிறப்போடும் வாழ இறையாசீர் வேண்டி வாழ்த்துகின்றார்கள்.

*தகவல்: தயாபரன் சித்திரா தம்பதிகள் (முத்தரிப்புத்துறை)*

# 1வது பிறந்தநாள் வாழ்த்து



செல்வன்.
தே. சிரோன்




மன்னார் அடம்பனைப் பிறப்பிடமாகவும், ஆலன் ஜேர்மனியை வதிவிடமாகவும் கொண்ட தேவதாஸ் அநுரா வேர்ஜினி தம்பதிகளின் செல்வப் புதல்வன் சிரோன் தனது முதலாவது பிறந்தநாளை 18.04.2005 அன்று சிறப்பாக ஜேர்மனியில் உள்ள தனது இல்லத்தில் கொண்டாடினார்.. இவரை அப்பா, அம்மா, அக்கா அனிதியோபியா, நாவலப்பிட்டியில் வசிக்கும் அப்பப்பா, அப்பம்மா, மன்னாரில் வசிக்கும் அம்மப்பா, அம்மம்மா, மற்றும் பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்தப்பாமார், சித்திமார், மாமாமார், மாமிமார், அக்காமார், அண்ணன்மார், தங்கை, மச்சான் ஆகியோர் மருதமடு மாதாவின் அருள் பெற்றுப் பல கலைகளும் கற்றுப் பல்லாண்டு காலம் சீரும் சிறப்புமாக மன அமைதியுடன் வாழ வாழ்த்துகிறார்கள்.

# 1வது பிறந்தநாள் வாழ்த்து



செல்வி.
மரிசரினா (அபினு)




யாழ்ப்பாணம் சில்லாலையைப் பிறப்பிடமாகக் கொண்டு கீரி மன்னாரை வசிப்பிடமாகக் கொண்ட திரு. திருமதி யோகநாயகம் வசந்த மலர் தம்பதிகளின் செல்வப்புதல்வி மரிசரினா (அபினு) தனது 1வது பிறந்[illegible]ளை 10.05.2005 அன்று தனது இல்லத்தில் வெகு விமர்[illegible]கக் கொண்டாடுகின்றார். இவரை அன்பு அப்பா, அம்மா, பெரியண்ணன், சின்னண்ணன், அப்பப்பா, அப்பம்மா, அம்மையா, அம்மம்மா, தொட்டப்பா (மோகன் கட்டார்), தொட்டம்மா, பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்தப்பாமார்கள் (கட்டார்) சித்திமார், மாமாமார், மாமிமார், அண்ணாமார், அக்காமார், தம்பிமார், தங்கச்சிமார், அத்தான்மார், மச்சாள்மார், மற்றும் உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் பல்கலையும் கற்று பல்லாண்டு வாழ இறை ஆசீர் வேண்டி வாழ்த்துகிறார்கள்

*தகவல்: அன்பு அப்பா (யோகன்)*

## சரியான விடைகள்
### விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல. 35
### *விடுதலைப்பயணம் (அதி. 28 – 40)*

**இடமிருந்து வலம்**

| | | |
|---|---|---|
| 1. | ஆற்றலோடும் | 32:11 |
| 3. | உட்பட | 33:17 |
| 6. | நெருப்பு | 35:3 |
| 7. | திரைகளை | 36:13 |
| 9. | அடிப்பு | 37:22 |
| 13. | கால்களையும் | 40:31 |
| 14. | பட்டு | 39:3 |
| 16. | திறமை | 30:36 |
| 21. | மங்கும் | 29:39 |

**மேலிருந்து கீழ்**

| | | |
|---|---|---|
| 1. | ஆணையிட்டு | 32:13 |
| 2. | அதிகாலையில் | 34:4 |
| 3. | உனக்கென | 34:17 |
| 4. | கற்களாக | 39:7 |
| 5. | மேசை | 37:10 |
| 13. | காணிக்கை | 35:5 |
| 14. | பட்டை | 39:17 |
| 15. | இருபது | 38:26 |
| 17. | ஓய்வு | 31:15 |

**வலமிருந்து இடம்**

| | | |
|---|---|---|
| 2. | அணிகலன் | 33:6 |
| 5. | மேகத்தில் | 34:5 |
| 11. | பேழை | 40:21 |
| 12. | அகல்கள் | 37:24 |
| 13. | காணப்படல் | 34:20 |
| 14. | பணித்தும் | 38:24 |
| 18. | தாண் | 38:23 |
| 19. | கதிரவன் | 38:13 |
| 22. | நெசவு | 28:32 |

**கீழிலிருந்து மேல்**


| | | |
|---|---|---|
| 8. | வாதுமை | 37:19 |
| 10. | கெருபு | 38:8 |
| 13. | காட்டியருளும் | 33:13 |
| 16. | திரை | 40:28 |
| 19. | கழுவு | 40:12 |
| 20. | தண்டுகளை | 38:7 |
| 21. | மரத்தால் | 38:1 |
| 23. | செய்தானோ | 32:33 |

மன்னா

# உண்மையைத் தேடும் ஆர்வம்

# பத்திரிகையாளர்களுக்கு இன்றியமையாதது

## பத்திரிகையாளர் மத்தியில் புதிய திருத்தந்தை கருத்து



ஊடகங்களில் பணிபுரிபவர்களுக்கான தொழில் ரீதியான கடமையுணர்வை வலியுறுத்தியுள்ள புதிய திருத்தந்[illegible] 16ம் பெனடிக்ற் உண்மையைத் தேடும் ஆர்வம், மனிதத் தன்மையைப் பாதுகாப்பதற்கான தாகம் பத்திரிகையாளர்களுக்கு இன்றியமையாதது எனச் சுட்டிக்காட்டியுள்ளார்.

புதிய திருத்தந்தைக்கும் பத்திரிகையாளர்களுக்கும் இடையில் ரோமில் நடைபெற்ற சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார். ஜேர்மன் மொழியிலும் வேறு மூன்று மொழிகளிலும் உரையாற்றியுள்ள திருத்தந்தை, ஊடகங்களுக்கு அவற்றின் பணிக்காக நன்றி தெரிவித்துள்ளதுடன் உண்மையை அறிவதற்கும் மனித கௌரவத்தைக் காப்பாற்றுவதற்குமான பொறுப்புணர்வு பத்திரிகையாளர்களுக்கு உள்ளது எனச் சுட்டிக்காட்டியுள்ளார். உலகின் பல்வேறு பகுதிகளையும் சேர்ந்த 4,000 இற்கும் மேற்பட்ட பத்திரிகையாளர்களுடனான இந்தச் சந்திப்பின்போது மறைந்த திருத்தந்தை ஊடகங்களுடன் ஆரம்பித்த ஆரோக்கியமான உரையாடலைத் தானும் தொடர விரும்புவதாக புதிய திருத்தந்தை குறிப்பிட்டார். கடந்த சில வாரங்களாக வத்திக்கானுக்கு மிகுந்த முக்கியத்துவம் அளித்தமைக்காக ஊடகங்களைப் பாராட்டியுள்ள அவர் இதன் மூலம் ஊடகங்கள் உலகளாவிய ரீதியில் கத்தோலிக்கர்களை ஐக்கியப்படுத்தியுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

## உரிமை நோக்கு

### நூல் அறிமுகம்




யாழ். சமாதான மனித உரிமைப் பண்பாட்டு பணியகத்தினால் (செப்பாக்) *'உரிமை நோக்கு'* என்ற மாதாந்த சஞ்சிகை ஒன்று வெளிவர ஆரம்பித்துள்ளது. அருட் பணி - யாளர் அ. இ. பேணாட் அடிகளாரை ஆசிரியராகக்கொண்ட இந்த சஞ்சிகையின் நோக்கம் பற்றி ஆசிரியர் குறிப்பிடுகையில்," 'உரிமைப் போராட்டம்' என்ற சொல் எமது சமூகத்திற்கு மிகவும் பரீட்சயமானதொன்று, இருப்பினும், 'எமது உரிமைகள் என்ன என்பது பற்றி எமக்குத் தெளிவான அறிவோ விளக்கமோ இல்லை' என வளர்ந்தோர் உட்பட பலர் கூறுகின்றனர். எனவே உரிமைகள் பற்றிய அறிவை வளர்ப்பதற்கு உதவியாக, 'உரிமை நோக்கு' என்ற மலரை மாதாந்த சஞ்சிகையாகப் படைக்கவுள்ளோம்" எனக் குறிப்பிட்டுள்ளார்.



# பிரான்ஸ் சாட் மரியன்னைத் திருத்தலத் திருவிழா சிறப்பிதழ்



தொகுப்பு - பிரான்சிலிருந்து திரு. ஜெ. ஜெயரெட்னம்



புலம் பெயர்ந்த நிலையில், பிரான்ஸ்வாழ் தமிழ் மக்கள் மிகவும் பக்தியுடனும், ஆவலுடனும் விரும்பிச் செல்லும் யாத்திரைத் தலங்களில் சாட் (CHARTRES) மரியன்னைத் திருத்தலமும் ஒன்று. பாரிஸிலிருந்து 96 கிலோ மீற்றர் தூரத்தில் இது உள்ளது. இவ்வருடம் 22.05.2005 அன்று ஞாயிறு தினம் காலை 10.00 மணி தொடக்கம் மாலை 6.30 மணி வரை இத்திருத்தல திருவிழா நிகழ்வுகள் நடைபெறும். இதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. இதையொட்டிய சிறப்புத் தகவல்களை இங்கு தருகின்றோம். (பதிப்பாசிரியர்)



### விடை கொடு தாயே

விடை கொடு தாயே விடை கொடு
உந்தன் தாமரைப் பாதம் தொட்டு வணங்கிட,
உன் திருத்தலம் விட்டுப் போய் வர
விடை கொடு தாயே விடை கொடு!
பாவச்சிந்தையுடன் பாவிகள் நாம்
மழையில் நனைந்த மான் குட்டி போன்று
பயத்தால் நடுநடுங்கியவேளை
பக்கத் துணையாய் நீ வந்து நின்றாயே
விடை கொடு தாயே விடை கொடு!
இன்றுபோல் என்றும் எம் உள்ளம்
இறைவன் நினைவில் மிதந்து வந்து - உன்
பால்வடியும் முகத்தினைப் பார்த்து
மகிழ்ந்து போய்வர விடை கொடு தாயே .....!

- ஞானம் பீரீஸ்





### சாட் - சில தகவல்கள்

- புலம் பெயர்ந்த நிலையில், பிரான்ஸ் வாழ் தமிழ் மக்கள் மிகவும் பக்தியுடனும், ஆவலுடனும் விரும்பிச் செல்லும் யாத்திரைத் தலங்கள் லூட்ஸ் **(LOURDES)** சாட் **(CHARTRES)** போன்ற மரியன்னைத் திருத்தலங்கள் ஆகும். சாட் மரியன்னைத் திருத்தலம் பாரிஸிலிருந்து 96 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ளது, எனவே மக்கள் அடிக்கடி இங்கு சென்று வருவார்கள்.
- பாரிஸிலிருந்து சித்திரை, வைகாசி மாதங்களில் பிரெஞ்ச் மக்கள் இப்பேராலயத்திற்கு பாதயாத்திரையாக கடந்த பல வருடங்களாக சென்று வருகின்றார்கள்.
- 1980 களில் பிரெஞ்ச் மக்களுடன் இணைந்து தமிழ், மற்றும் வேறுநாட்டு மக்களும் இப் பேராலயத்திற்கு பாதயாத்திரையாக சென்று வந்தனர்.
- இப்பாத யாத்திரையில் தமிழ் மக்களின் தொகை அதிகரிக்க, பிரெஞ் அருட்பணியாளர்கள் தலைமையில் தமிழ் மக்கள் தனியாக பாதயாத்திரை மேற்கொண்டனர்.
- 1994,1995 களில் தமிழ் மக்களின் பாதயாத்திரை நிறுத்தப்பட்டு பேராலய திறந்த வெளியரங்கில் திருச்செபமாலையும், திருச்சுரூப பவனியும் (3 கி.மீ) மாலையில் திருநாள் திருப்பலியும் இலங்கைத் தமிழ் கத்தோலிக்கருக்கான ஆன்மீகப் பணியகப் பணியாளர்களினால் ஒழுங்குபடுத்தப்பட்டு வருகிறது.
- இத்திருத்தல திருயாத்திரைக்கு லண்டன், ஜேர்மனி, சுவிஸ், டென்மார்க், கனடா போன்ற இடங்களிலிருந்து மக்கள் வந்து கலந்துகொள்வது குறிப்பிடத்தக்கது.-

## சாட் திருத்தல வரலாறு

பிரான்சில் மிகப் பழமை வாய்ந்த பேராலயங்களில் சாட் தேவாலயமும் ஒன்றாகும். கி.பி. 4 ம் நூற்றாண்டிலிருந்தே இந்த ஆலயம் இருந்ததென்பதற்கு மறுக்க முடியாத சரித்திரச் சான்றுகள் உண்டு. இதில் ஆச்சரியம் என்னவென்றால், எத்தனையோ முறை இடிக்கப்பட்டும், எரிக்கப்பட்டும், அழிக்கப்பட்டும் அதேயிடத்தில் இன்றும் இந்த ஆலயம் அழியாமல் இருப்பதுதான். தேவ அன்னை தனக்கென தேர்ந்தெடுத்த ஒரு இடமாக சாட் திருத்தலம் விளங்குகிறது.

இலங்கையில் யாழ்ப்பாண தீபகத்தை அண்மித்த ஒரு சிறிய தீவில் *சாட்டி மாதா* என்ற கோவில் (சின்ன மடு) ஒன்று இருப்பதும், வருடா வருடம் யாத்திரிகர்கள் செல்வதும் நாமறிந்த உண்மையாகும். இங்கு ஒரு புனித துகில் பேணிப் பாதுகாக்கப்பட்டு வருகின்றது. இது சாட் கோவிலில் புனிதமாகப் பாதுகாக்கப்படும் மாதாவின் புனித துப்பட்டியின் ஒரு சிறு பகுதியுமென்றும், இது இந்த சாட் தேவாலயத்திலிருந்து மிஷனரிமாரால் கொண்டுசெல்லப்பட்டதென்றும் வரலாறுகள் சான்று பகருகின்றன. இதனால்தான், சாட்டிமாதா என்ற பெயர் வந்தது எனக் கூறப்படுகிறது.

எட்டாவது நூற்றாண்டில் (876 ம் ஆண்டு) மாதாவுக்கென்றே அர்ப்பணிக்கப்பட்ட சாட் கோவிலின் மகிமை கண்டு, சாள்ஸ் என்னும் அரசன், தான் பாதுகாத்து வைத்திருந்த - தேவதாய் தலையில் அணிந்திருந்த - துப்பட்டியைக் காணிக்கையாகக் கொடுத்தாராம். (ஆதாரம் : Chartes Guide of the Cathedral)

அந்தக் காலங்களில் கிறிஸ்தவர்களுக்கு எதிரான வன்முறைகள் அடிக்கடி நடந்தன. கிறிஸ்தவ மதம் பரவுவதை விரும்பாத பலரினால், கிறிஸ்தவர்கள் கொல்லப்பட்டும், அவர்களுடைய உடமைகள் அழிக்கப்பட்டும், அவர்களின் புனித வணக்க ஸ்தலங்கள் சிதைக்கப்பட்டும், எரிக்கப்பட்டும் வந்தன. சாட் கோவிலும் இதிலிருந்து தப்பவில்லை.

911 ம் ஆண்டில், றோலன்ட் நோர்மாண்டி இனத்தினர் சாட் இருந்த பகுதியைச் சுற்றி வளைத்து பலரைக் கொன்று சாட் தேவாலயத்தை அழிக்க முன்னேறிக்கொண்டிருந்தபோது, அக்காலத்தில் ஆயராகவிருந்த கன்ரெல்மி என்பவர் மடித்து வைக்கப்பட்டிருந்த புனித துப்பட்டியை, கோவிலின் வடக்கு வாசலுக்கு எடுத்துச்சென்று விரித்து வைத்தாராம். ஆனால், எவ்வளவோ தூரத்தில் கோவிலை நோக்கி முன்னேறிக்கொண்டிருந்த நோமனும் அவனைச் சேர்ந்தவர்களும் என்ன காரணமென்று தெரியாமலேயே திரும்பி ஓடிப்போய் விட்டார்களாம் என்று ஆலயத்தின் பதிவேடுகள் சான்று சொல்கின்றன.

1194 ம் ஆண்டில் நடைபெற்ற கலவரத்தில் நகரம் தீயில் அழிந்தது. இதில் மாதாவின் துப்பட்டியும் அழிந்துவிட்டதாகக் கருதப்பட்டது. இதனால் மனமுடைந்த கிறிஸ்தவர்கள் கோவிலை திருப்பிக் கட்டுவதா வேண்டாமா என்று தடுமாறிக்கொண்டிருந்தார்கள். ஆனால் நாலு நாட்களின்பின், அன்னையின் புனித துகில் கோவிலில் இடிபாடுகளுக்கிடையில் எவ்வித பாதிப்பும் இல்லாமல் புதைந்திருக்கக் கண்டெடுக்கப்பட்டது. இதனால் பரவசமடைந்த கிறிஸ்தவர்கள் கோவில் திருத்தும் பணியை வெகு வேகமாக முன்னெடுத்துச் சென்றார்கள்.

## புறநாட்டுக் கலாச்சார முரண்பாட்டுச் சூழல்

## நம் இறையுணர்விற்கு மாபெரும் சவால்!

அருட்பணியாளர் அ. அமலதாஸ், இயக்குனர்,
இலங்கைத் தமிழ் கத்தோலிக்க ஆன்மீகப் பணியகம், பிரான்ஸ்.



பிரான்ஸில் உள்ள 'சாட்' அன்னையின் திருத்தலம் எமது மக்களினது வாழ்வில் நெருக்கமாக உள்ளது. திருத்தலச் சூழல் சற்று தூரத்தே இருப்பதாலும் அமைதியான அமைவிடத்தில் உள்ளதாலும் அன்னையைத் தேடிச் சென்று திரும்பும் அனுபவம் பலரது வாழ்வில் அமைதியளிப்பதாக இருக்கின்றது இவ்வாறு பிரான்ஸ் சாட் திருத்தல விழாவையொட்டிய செய்தியில் பிரான்ஸ் ஆன்மீகப் பணியக இயக்குனர் அருட்பணியாளர் அ. அமலதாஸ் குறிப்பிட்டுள்ளார்.

புலம் பெயர்ந்த வாழ்வானது இன்று நம் மக்களை நன்றாகவே தாக்கத்திற்கு உட்படுத்தியிருக்கின்றது. பல்வேறு வகைப்பட்ட பிரச்சினைகளால் சிக்கித்தவிக்கும் எம் மக்களுக்கு மன அமைதியும், ஆறுதல் அனுபவமும் நிறையத் தேவை. இந்நிலையில் இறையுணர்வும் நம்பிக்கையும்தான் இன்று பலர[illegible] வாழ்விற்கு அடிப்படைத் தேவையாக உள்ளது. எல்லாம் இருந்தாலும் "சந்தோஷம் [illegible]லை" என்ற வாழ்வின் அனுபவத்தோடே திருத்தலம் நோக்கிச் செல்கின்றோம்.

இந்நாட்டில் வாழ்கின்ற தமிழ் மக்கள் தாம் வாழ்ந்த, வாழுகின்ற இக்காலங்களில் 'சாட்' திருத்தல வரலாற்றுக்குள் "இறையுணர்வுள்ளவர்கள்" என்ற பெருமையோடு நுழைந்திருக்கின்றார்கள். ஆக இப்பயணம் ஒரு விசுவாசத்தின், நம்பிக்கையின் பயணம் என்பதில் ஐயமேயில்லை. இருப்பினும் நமக்கு முன்பாகப் பாரிய பணி காத்திருக்கின்றது. நாம் வாழுகின்ற இப்பிறநாட்டுக் கலாச்சார முரண்பாட்டுச் சூழல் நம் இறையுணர்விற்கும், நம்பிக்கைகளுக்கும் மாபெரும் சவால். இன்று நாம் இச்சவால்களை கண்டு சோர்வடையாது துணிவோடும் இறையருளின் வல்லமையோடும், நம்பிக்கை வாழ்வுக்குரிய நல்ல செயல்களோடும் இச்சமுதாயத்திற்கு இறைவனின் சாட்சிகளாக விளங்கவேண்டும் என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இப்பத்திரிகை மன்னாரில் உள்ள மன்னா அலுவலகத்தில் வடிவமைக்கப்பட்டு கொழும்பு கொட்டாஞ்சேனை அச்சகத்தில் அச்சிடப்பட்டு பதிப்பாசிரியரால் வெளியிடப்பட்டது.